

# சமூகநாடி

## தும்பளை மேற்கு சனசமூக நிலைய
## புதிய கட்டடத் திறப்புவிழா
## சிறப்புமலர்







**2012.04.16**

# சமூகநாடி

## தும்பளை மேற்கு சனசமூகநிலைய
## புதிய கட்டட திறப்பு விழா
## சிறப்புமலர்
## 2012.04.16

**தும்பளை மேற்கு சனசமூகநிலையம்**
**தும்பளை, பருத்தித்துறை.**

# *Samooga naadi*

**Thumpalai West Community Centre**
New upstair building
Opening Ceremony Special issue

---

First Edition : 2012 April 16, Language : Tamil. Pages : vi + 152 Size : 25Cm x 18 Cm. Cover desing 'Thiru Video' Point Pedro. Cover Printers : Mathi Colours, Nallur, Jaffna. Book Printers : Theepan Printers. V.M..Road, Point Pedro. Add Printers : Caxton Printers. Contacts : Thumpalai west Community Centre, Thumpalai, Point Pedro.

தும்பளை மேற்கு சனசமூக நிலையம்

ஒற்றுமையாய் உயர்வோம்

1949

THUMPALAI WEST COMMUNITY CENTRE

# தும்பளை மேற்கு சனசமூகநிலையம்
## Thumpalai West Community Centre
## (T.W.C.C)

எதிர்கால செயற்பாடுகளுக்கான
சுருக்ககமான திட்டல் பருவரை

**Vision - (தூரநோக்கு / நோக்கக்கூற்று)**

**தும்பளை மேற்குக் கிராமத்திற்கான உன்னதமான பண்பாட்டு நிலையை வளர்த்தெடுப்பதற்கான சமூகமையம்.**

## Mission - (பணிக்கூற்று)

1. நவீன வசதிகளுடனான நூலகம் ஒன்றை அமைத்தல்
2. கணினிப்பயிற்சி மையமொன்றை நிறுவுதல்
3. ஆங்கில அறிவை நடைமுறைச் சாத்தியமான முறையில், மாறி வரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப பயன்படுத்தும் திறனை வளர்ப்பதற்கான பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்.
4. எமது கிராம மக்களின் கல்வி, விளையாட்டு, ஆன்மீகம், சிந்தனைப்போக்கு போன்ற விடயங்களில் அறிவு திறன் மனப்பாங்குகளை விருத்தி செய்யக்கூடிய செயன்முறைகளில் ஈடுபடுதல்.
5. கலை கலாசாரத்துறையில் மேம்பாட்டு நடவடிக்கைகள்
6. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மேம்பாடு, தனிமனித சுகாதார மேம்பாடுகளை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள்.
7. பெண்களின் உரிமைகள், சமூக செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பனவற்றை சிறப்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை வளர்த்தல்.
8. சிறுவர், முதியோர் நலன் பேணுதல், பராமரித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுத்தல்
9. சிறு தொழில்களுக்கான தொழிற்பயிற்சிகளை நடாத்துதல், சிறு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
10. உலகம் பூராகவும் பரந்து வாழும் எமது ஊரவரின் இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கிடையிலான ஊடாட்டங்களை விருத்தி செய்தலுடன், அவர்கள் இங்கு வருகை தரும்போது தங்கக் கூடிய நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிடத்தை அமைத்தல்.

நிர்வாகக்குழுவினர் / து.மே.சனசமூகம்

## உள்ளடக்கம்



01. வாழ்த்தியல்

02. கட்டுரையியல்


03. வரலாற்றியல்

04. படைப்பியல்

05. கணக்கியல்



நிர்வாகக்குழு


மலர்க்குழு

## “நாம் கட்டியெழுப்பியது கட்டடத்தை மட்டுமல்ல சமூக ஒருமைப்பாட்டையுமே”

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு”

எமது சனசமூக நிலையத்திற்கென புதிய கட்டடமொன்றை கட்ட எண்ணி அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை அணுகியபோது அவர்கள் கேட்ட ஒரே கேள்வி உங்கள் சனசமூக நிலையத்திற்கென சொந்தமான காணியொன்று உண்டா? இதனை அறிந்து எமது ஊரைச் சேர்ந்த கனடாவில் வதியும் திரு.திருமதி. தர்மலிங்கம் பவானி குடும்பத்தினர் $1^1/_4$ பரப்பு காணியை சனசமூக நிலையத்திற்கென அன்பளிப்பாக வழங்கினர். முதலில் நாம் நன்றி கூறிப் பாராட்டுவது அவர்களையே.

கட்டடம் கட்டுவதற்கு முதலில் தேவையானது நீர்வசதியாகும். காணியில் குழாய்கிணறு அமைக்க எண்ணியிருந்த வேளையில் அசார்பஜான் நாட்டிலே கடமைபுரிந்த எமது ஊரைச்சேர்ந்த திரு.கணேசமூர்த்தி புலேந்திரன் அவர்கள் நாம் கேளாமலே சிறுநிதி திரட்டி அனுப்பிவைத்தார். இக்கட்டடத்தின் ஆரம்பகர்த்தாவான அவருக்கும் எமது நன்றியைக்கூறி பாராட்டுகிறோம்.



திரு.பா.ரவீந்திரநாதன்,
தலைவர்,
தும்பளை மேற்கு சனசமூகநிலையம்.

காணி கிடைத்ததனால் மீண்டும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை நிதியுதவி கேட்டோம். மழைவருமுன் தோன்றும் வானவில் கண்டு மகிழ்ந்தோம். வானவில்லும் வர்ண ஜாலம் காட்டி மறைந்தது.

மானாவாரி வேளாண்மை விதைத்த விவசாயிபோல் வானம் பார்த்து நின்றோம். ஆனால் முயற்சியையும் நம்பிக்கையையும் நாம் கைவிடவில்லை. கட்டடத்தை எப்படிக்கட்டி முடிக்கப்போகிறீர்கள்? என்ற கேள்விக்கணைகள் நான்கு திசைகளிலுமிருந்தும் எம்மை தாக்கின.

எமது நியாயமான வேண்டுகோளை உள்ளூர்மக்களுக்கும் நிலத்தாற் பிரிந்திருந்தாலும் நினைவால் பிரியாத வெளிநாட்டு உறவுகளுக்கும் எடுத்துக்கூறினோம். உள்நாட்டு, வெளிநாட்டு மேகங்கள் திரண்டு ஒன்றுகூடின. சூல்கொண்டன பொழிந்தது மழை. வளர்ந்தது கட்டடம். நிறைந்தது யாவர் மனமும். கணை தொடுத்தவர்களே கணையாழி போட முன்வந்தனர். நாம் கட்டி எழுப்பியது கட்டடத்தை மட்டுமல்ல சமூக ஒருமைப்பாட்டையுமே என்பதே பெருமைக்குரிய விடயம்.

கட்டடத்தைக் கட்டியெழுப்ப நிதிவழங்கியோர், நிதிசேகரிக்கும் முகவர்களாகச் செயற்பட்டோர், உடலுழைப்பு வழங்கியோர் ஆலோசனை வழங்கியோர், சோர்வடையாது தட்டிக்கொடுத்து ஆர்வமூட்டியோர் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். கட்டடத்தைக் கட்டி முடித்ததும் உங்கள் பணி பூரணமடைந்துவிடவில்லை அதனைப் பேணி பாதுகாத்து பெருமைப்படுத்தும் பெரும் பொறுப்பும் உங்களுடையதே!

"நன்றி"

# சமூக தேவைப்பாடுகளின் ஒன்றிணையமாகத் திகழ வேண்டும்

எமது சமூகநிலைய புதிய மாடிக் கட்டட திறப்புவிழாவில் சிறப்பு மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது சனசமூகநிலையமானது 1949.04.16ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு இதுவரை காலமும் தொடர்ந்தியங்கி 2008ஆம் ஆண்டளவில் அதற்கான சொந்தக்காணி ஒன்று அமையப்பெற்று தொடர்ந்து புதிய மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கட்டடவேலைகள் சிறப்பாக இடம்பெற்று தனது 63ஆவது ஆண்டு விழாவில் புதிய மாடிக்கட்டட திறப்புவிழா, சிறப்புமலர் வெளியீட்டுவிழா, கலைவிழா நிகழ்வுகளை தனதாக்கி கொள்கின்றதையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்நிலையத்தினுடைய ஆரம்பகாலம் முதல் இன்றுவரையான செயற்பாடுகள் அனைத்தும் இந்நூலின் விடயங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலின் தரவுகள் அனைத்தும் எழுத்துமூலமான ஆவணங்கள் மூல்மும், வாய்மொழித்தகவல்கள் மூலமும் பெறப்பட்டு தங்கள் கைகளிலே வழங்கப்பட்டுள்ளன, மற்றும் அறிவு சார்ந்த விடயங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.



திரு.இ.நிரஞ்சன்.
செயலாளர்,
தும்பளை மேற்கு சனசமூகநிலையம்.

இம்மலரானது ஒரு சமூக ஆவணமாக அனைவராலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியை மேலும் வளர்ச்சியடைய வழிவகுக்கும் என நம்புகின்றோம். மற்றும் இச்சனசமூக நிலைய செயற்பாடுகள் என்ற வகையில் சில விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றேன். இந்நிலையமானது நூலகச்சேவையை மட்டுமின்றி சமூகதேவைப்பாடுகளின் ஒன்றிணையமாகவும் செயற்பட்டு வருகின்றது. மேலும் நவீன தகவல் தொழில்நுட்பரீதியான செயற்பாடுகளை வழங்கும் ஒரு நிலையமாக எதிர்காலத்தில் திகழவேண்டும்.

அடுத்து நிர்வாகத்தின் சார்பில் நல்லுள்ளங்களின் பங்களிப்பு என்ற வகையில் முக்கியமான விடயங்களை குறிப்பிடுகின்றேன். இதில் நிலையத்திற்கென சொந்தக்காணியினை அன்பளிப்பாக வழங்கிய தர்மலிங்கம் பவானி குடும்பத்தினருக்கும் (கனடா) வெளிநாடுகளிலிருந்து நிதி உதவிகளை வழங்கியோருக்கும், உள்நாட்டிலிருந்து நிதி மற்றும் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியோருக்கும், சரீர உழைப்பு, நிபுணத்துவ உதவிகளை வழங்கியோருக்கும், மற்றும் எமது வேண்டுகோளுக்கிணங்க ஒரு பகுதி நிதியுதவி வழங்கிய சேவாலங்கா நிறுவனத்திற்கும் (அரசசார்பற்ற நிறுவனம்) கட்டட வேலைகளை சிறப்புற அமைத்து கொடுத்த கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கும், அத்துடன் திறப்புவிழா மலர்வெளியீட்டு குழுவினருக்கும், நிகழ்வுகள் சிறப்புற ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"நன்றி"

## ஆசிச் செய்தி

"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு"என்பது ஆன்றோர் வாக்கு. அந்தவகையில் தும்பளை மேற்கு சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி இன்று முழுவடிவம் பெற்று தும்பளை மேற்குசனசமூகநிலையமாக மாடிக் கட்டடத்தோடு உயர்ந்து நிற்பதில் பெருமிதம் கொள்கின்றேன். தும்பளை மேற்கு வரத விநாயகர் ஆலய முன்றலில் உள்ள சிறிய கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த இந்த சனசமூகநிலையம் இன்று தனக்கென ஒரு நிரந்தர கட்டடத்தை அமைத்து கம்பீரமாக காட்சியளிக்க காரணம் ஊர் மக்களின் அமோக ஆதரவும், இளையோரின் அயராத உழைப்புமே என்பது பாராட்டத்தக்கது. சமூக பற்றிற்கும், உறவுகளின் பரிவுக்கும், இளையோரின் ஓட்டத்திற்கும் உழைப்புக்கும் கிடைத்த அங்கீகாரமே தும்பளை மேற்கு சனசமூகநிலையம். இந்த சனசமூகநிலைய திறப்புவிழாவினை ஆவணப்படுத்தும் முகமாக வெளிவரும் இம் மலருக்கு எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்குவதோடு இனிவரும் காலங்களில் சமூகசீர்முறைசார்ந்த பல நல்ல செயற்திட்டங்களை முன்னெடுத்து தமிழ் உலகின் தரமான இடத்தையும் அங்கீகாரத்தையும் அடைய வாழ்த்துகிறேன்.



**சிவஸ்ரீ.வே.தியானந்தராசக் குருக்கள்**
பிரதம குரு,
ஸ்ரீவரத விநாயகர் ஆலயம்,
தும்பளை மேற்கு.

தும்பளை மேற்கு பெரியவளவு

# ஸ்ரீவரத விநாயகர் ஆலய பரிபாலன சபை
# SRI VARATHA VINAYAGAR ALAYA PARIPALANA SABAI

*பதிவு இல : HA/5/JA/431*
*5/12/1998*

*தும்பளை மேற்கு,*
*பருத்தித்துறை,*
*2012.03.28.*

தும்பளை மேற்கு சனசமூகநிலையம் தனது சேவையில் 60 ஆண்டுகள் கடந்தநிலையில் சனசமூக நிலைய நிர்வாகிகளின் அதியுயர் சிந்தனையின் வெளிப்பாடாக பழுதடைந்த நிலையிலிருந்த சனசமூகநிலைய கட்டடத்தைப் பயன்படுத்த முடியாமை கண்டு புதியதோர் மாடிக்கட்டடத்தை அமைக்க வேண்டுமென்ற உறுதியான சிந்தனையின் வெளிப்பாடாக உலகம் பூராக உள்ள ஊர்மக்களினது இதயபூர்வமான பங்களிப்பின் உச்ச வெளிப்பாடாக கட்டியெழுப்பப்பட்டிருக்கும் புதிய கட்டடத்தின் திறப்பு விழாவினையொட்டி எமது இறைசார் இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேற்படி நிலையம் தனது சேவைகளை கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத்துறையென பல பரிமாணங்களில் விஸ்தரித்து தனது சேவையினை ஆற்ற ஊர் மத்தியில் பெரிய வளவில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீவரத விநாயகப்பெருமானினதும், வீரபத்திர சமேத பத்திரகாளியினதும் அருட்கடாட்சத்தினை வேண்டி நிற்கின்றோம்.



**திரு.கி.பாலகெங்காதரன்,**
தலைவர்,
ஸ்ரீவரத விநாயகர்
ஆலயபரிபாலனசபை.

மேலும் இவ்வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் சென்று சாதித்தவர்களின் செயற்திட்டமும், அபார சிந்தனையையும், விடாமுயற்சியையும் வார்த்தையில் விமர்சிக்க முடியாது திழைக்கின்றோம். இவ்வேலைத்திட்டத்தினை பூர்த்தி செய்ய நிதிவழங்கி செயல்வடிவம் கொடுத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

"நன்றி"

## சேவையில் சிறக்கட்டும்

தும்பளை மேற்கு சனசமூகநிலையம் அதன் அங்கத்தவர்களினதும் நலன் விரும்பிகளினதும் தொடரான தீவிர முயற்சியின் பயனாக கம்பீரமான புதியமாடிக் கட்டடத்தைக் கட்டிமுடித்து இன்று திறப்புவிழா கொண்டாடுகின்ற வேளையில் எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தும்பளை மேற்கு சனசமூகநிலையமானது கடந்த பலவருடங்களாக சொந்தக் கட்டடம் இல்லாமல் இடத்துக்கிடம் மாறிவந்தபோதும் மக்களுக்கு பயன்மிக்க சேவையை தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒரு ஊரின் வளர்ச்சி அல்லது நாகரிகம் அப் பகுதி மக்களின் சமூக அர்ப்பணிப்பைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது. மக்களின் எழுச்சியும் உயர்ச்சியும் அப் பகுதியின் சனசமூகநிலையத்தில் எதிரொலிக்கும். கற்றவர்களையும் பண்புமிக்கவர்களையும் தன்னகத்தே கொண்ட தும்பளை மேற்குப் பகுதி பருத்தித்துறையின் முதலாவது மாடிக்கட்டடமாக சனசமூகநிலையத்தை அமைத்து முன்னோடியாகத் திகழ்கின்றது.




திரு.சபா.ரவீந்திரன்,
தவிசாளர் நகரசபை,
பருத்தித்துறை.

வெளிநாடுகளிலே வாழ்கின்ற இவ்வூர் மக்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது. இவ்வூர் இளைஞர்களும் பம்பரம் போல் சுழன்று எடுத்தகாரியத்தை சிறப்பே நிறைவேற்றி விட்டார்கள். இதன் மூலம் பருத்தித்துறை நகரசபை வெளிநாடுகளிலே வாழ்கின்ற இவ்வூர் மக்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது. இதன் மூலம் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் முதலாவது மாடிக்கட்டட வசதி கொண்ட சனசமூகநிலையம் என்ற பெயரை தனதாக்கிக் கொண்டுள்ளது. இச் சனசமூகநிலையத்தின் வளர்ச்சிக்கு நல்லிதயம் கொண்ட எல்லோரும் தொடர்ந்தும் தமது அர்ப்பணிப்புடன் பங்களிப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இன்னும் எனக்குண்டு. தும்பளை மேற்கு சனசமூகநிலையம் தொடர்ந்தும் மக்கள் சேவையில் சிறக்க என் நல்வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும்.

"நன்றி"

## புதியதோர் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்

தும்பளைமேற்கு சனசமூகநிலையத்தின் புதியகட்டடத் திறப்புவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். சனசமூகநிலையங்கள் சமூகமட்டத்தில் மக்களின் இன்னோரன்ன தேவைகளை, ஆளுமைவிருத்தியை, மேம்பாடுகளை, வளர்த்தெடுக்கும் மையங்களாக திகழ்கின்றன என்றால் மிகையில்லை. சனசமூகநிலையங்களின் செயற்பாடு வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் இருக்கும் போது அப்பகுதிமக்களின் சமூக, கல்வி, கலை, கலாசார, பொருளாதார மேம்பாடுகள் சிறப்படையும் என்பது எவரும் மறுக்க முடியாதது. எனவே இப்புதிய கட்டட திறப்புவிழாவைத் தொடர்ந்து இப்பகுதியில் புதிய மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட்டு மக்களின் வாழ்வு மேலும் சிறப்புற வேண்டும் என்று வாழ்த்திப்பணிகின்றேன்.



திரு.இ.த.ஜெயசீலன்
பிரதேசசெயலர்
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை

## நான் பிறந்தமண் சீரோங்கிச் செழித்திட வேண்டும்.

எமது கிராமத்தில் பலவருடங்களாக இயங்கி வருகின்ற சனசமூகநிலையத்திற்கு சொந்தமாக காணி ஒன்று பெறப்பட்டது. மாடிக்கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டு அது புகு விழாக்கோலம் காணும் இவ்வேளை இதற்காக அயராது, சிரமம் பார்க்காது, நேர்மையுடன் உழைத்த தும்பளை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகிகட்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிறந்த மண்ணின் சுகங்களை முகர்ந்து கூடிவிளையாடி, கூடிக்குலாவி உறவும், உற்றமும் சூழ நான் வாழ்ந்த இக்கிராமத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிகளுக்காகச் செயலாற்ற உருவாக்கம் பெறும் இச்சனசமூகநிலையம் சிறப்புடன் செயலாற்றி பலபேரும் பயன்பெற வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

இம்மண்ணின் உறவுகள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வேரூன்றி சிறப்புடன் வாழ்ந்து கொண்டு பிறந்து வளர்ந்த இம்மண்ணின் வளர்ச்சிக்காகவும் தமது பங்களிப்பை நல்கிவரும் அனைத்து நல்உள்ளங்களையும் வாழ்த்துகிறேன். இவ்வூரும், இச்சனசமூக நிலையமும் சிறப்பாகவும் செழிப்பாகவும் என்றென்றும் வாழ வாழ்த்துகின்றேன்.

"நன்றி"



நல்லாசிகளுடன்,
**Dr.**நிர்மலா சிவா (கனடா)

## சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி உயர்ந்திட வேண்டும்

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை நகரின் "தும்பளை மேற்கு" எனப் பெயரிடப்பட்ட இச் சனசமூகநிலையம் 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சொந்தமாக கட்டடம் இல்லாத நிலையிலும் இயன்றவரை பல சேவைகளை மக்களுக்காக செயலாற்றி வருகின்றது. இந்நிலையில் இன்று சொந்தமான மாடிக்கட்டத்தை அமைக்க முயற்சியில் மனமுவந்து பங்களித்த இக்கிராம நலன் விரும்பிகளையும் வெளிநாட்டிலுள்ள இக்கிராமத்து உறவுகளையும் நன்றியுடன் பாராட்டுவதோடு இப் புதிய கட்டட திறப்பு விழாவும், மலர் வெளியீடும் சிறப்புற்று அமைந்து இச் சனசமூகநிலையத்தின் பங்கும் பணியும் சமூகத்தில் உயர்ந்து நிற்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகள் வேண்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சனசமூக நிலையங்களின் வளர்ச்சியும் உயர்ச்சியுமே சமுதாய, கிராம வளர்ச்சி முன்னேற்றங்களின் அளவீடாகவும் அமைந்துள்ளது. சமுதாய வளர்ச்சியின், விழிப்புணர்வின் நிலையை, தரத்தினை சுட்டிக்காட்டும் குறிகாட்டியாக விளங்கி வருகின்றன.



திருமதி.ப.யோகராஜா,
சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்,
பி/உள்ளூராட்சி,
உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

கிராம மக்கள் தனித்துவமான வகையில் சுதந்திர உணர்வுடன் ஒரு நிலையத்தை அமைத்து மக்கள் பங்களிப்பில் சேவையாற்ற பயிற்றுவிக்கப்படும் ஒரு களம் என்ற வகையில் சனசமூகநிலையத்தின் பங்கும் பணியும் அமைந்துள்ளமையைக் காணலாம். இதற்கமைய இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப சொந்தமான நிரந்தரக் கட்டடத்தைக் கொண்ட இச் சமூகநிலையத்தின் சேவைகள் பயனுறுதி மிக்கதாகவும், மக்கள் பங்களிப்புடன் சமூகத்திற்கு நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று சமுதாயத்தில் நல்ல மாற்றங்களையும் கொண்டு சமூக, கிராம அபிவிருத்தியில் உயர்வதற்கு படிக்கற்களாக அமைய இக்கிராம மக்களும், வெளிநாடுவாழ் இக்கிராம மக்களும் காத்திரமான பங்காளிகளாக செயற்பட எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசி நிலைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"சனசமூகம் உயர சமுதாயம் உயரும்
சமுதாயம் உயர கிராமம் உயரும்
கிராமம் உயர பிரதேசம் உயரும்"

"நன்றி"

## வாழ்த்துச் செய்தி

தும்பளை மேற்கு பெரியவளவு வரத விநாயகரின் அருட்கடாட்சத்தினால் அதன் அண்மைச் சூழலில் மஞ்சு அளாவும் அளவிற்கு உயர்ந்து விளங்கும் உப்பரிகை "தும்பளை மேற்கு சனசமூக நிலையம்" நாமகரணம் சூடி எல்லோரும் நிமிர்ந்து பார்க்கும் அளவிற்கு எடுப்பாகவும், மிடுக்காகவும் காட்சியளிக்கின்றது. தொன்மை வாய்ந்த சனசமூகநிலையமாயினும் தனக்கென ஒரு நிரந்தர காணியில் எமது உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள் நீட்டிய ஆதரவுக்கரங்களினால் புதியதொரு கட்டடமாக புதுப்பொலிவுடன் திறப்பு விழா காண்பதனையிட்டு அகம் மகிழ்ந்து இதய சுத்தியுடன் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் தனது கன்னிப் படைப்பாக இன்று தவழவிடும் **"சமூகநாடி"** எனும் மலரானது எல்லோருக்கும் அறிவுப்பசிக்கு விருந்தளிப்பதாய் அமைந்துள்ளது. இதழினை விரித்து மணம் பரப்பும் இந்த மலர் போன்ற புத்தம் புதிய நன்மலர்கள் ஆண்டு தோறும் முகையவிழ்ந்து இக்கிராமத்தில் வளர வேண்டும். படைப்பாற்றல் மிக்க எழுத்தாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.



திருமதி.சாருமதி தியாகராஜா,
கிராம அலுவலர்,
தும்பளை J/404.

இவற்றிற்கு எல்லாம் வல்ல பெரியவளவு வரத விநாயகர் அருள் பாலிக்க வேண்டுமென வணங்கி புதிய நன்மலரான சமூகநாடியினை வாழ்த்துவதோடு, இலை மறைகாயாக இருந்த இச்சனசமூகநிலையம் குன்றிடைத் தீபமாய் பிரகாசிக்கும் சந்தர்ப்பத்தில் நான் இக்கிராமத்தில் கிராம அலுவலராக பணிபுரிவதையிட்டு பெருமையும் மட்டில்லா மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

"நன்றி"

## பணிகளை மேலும் விஸ்தரித்து சிறப்புற வாழ்த்துகிறேன்

பருத்தித்துறை பிரதேசத்தின் தும்பளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இச் சனசமூக நிலையம் தனக்கென ஒரு நிரந்தரக்கட்டடத்தை அமைத்து பூரிப்படைந்துள்ள வேளையில் அதனது சேவையை வியந்து பாராட்டுகின்றேன்.

ஒரு பிரதேசம் சிறப்புற வளர்ச்சியடைய வேண்டுமாயின் அது கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்க வேண்டும் அவ்வகையில் தும்பளை மேற்கு கிராமத்தின் பண்பட்ட வளர்ச்சிக்கு இச்சனசமூகத்தின் பங்கு அளப்பரியது.

இச்சனசமூகநிலையம் தனக்கென சொந்த கட்டடம் இன்றி வசதிகள் அற்ற சூழ்நிலையிலும் நூலக சேவையையும், பாடசாலை மாணவர்களிற்கான கருத்தரங்குகளையும் வழங்கி இச்சமூகத்தின் ஏற்றத்திற்கு வழிசமைத்தது. இவ்வாறான பயனை அனுபவித்த இச்சமூகத்தினர் இதன் பங்களிப்பை தொடர்ச்சியாக கிடைக்க வேண்டும் என அவாவி இதற்கென நிரந்தர கட்டடம் அமைக்க உதவியுள்ளார்கள்.



செல்வி.சே.செல்வசுகுணா,
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
பருத்தித்துறை.

எனவே பொது மக்களின் அன்பினாலும், உதவி ஒத்தாசைகளாலும் நிமிர்ந்து நிற்கும் இச்சனசமூகநிலையம் அதன் பணியினை மேலும் விஸ்தரித்து சிறப்புற ஆற்றும் என்பதில் ஐயமில்லை.

அவ்வகையில் இச்சனசமூகநிலையமானது இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நன்கு இனங்கண்டு அப்பிரச்சினைகளால் இச் சமூகம் பாதிப்புறாத வகையில் தனது பணியினை ஆற்றல் சிறந்தது. இளைஞர்கள் இன்றைய சமூகத்தில் எதிர்நோக்கும் சவால்கள், பெற்றோர் தமது பிள்ளைகள் மீது செலுத்த வேண்டிய அக்கறை, பரிவுடன் கூடிய கண்காணிப்பு, சுகதேகியாக வாழ்வதற்குரிய உணவுப்பழக்கம், யோகாசனப் பயிற்சி போன்ற விடயங்களிலான கருத்தரங்குகள் நடத்தல். தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கல், வாசிப்புப் பழக்கத்தினை மேலும் அதிகரிப்பதற்கான போட்டிகள் நடத்தல், பயனுள்ள நூல்களை இனங்கண்டு வாசிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகள், பெண்களுக்கான சுயதொழில் பயிற்சிகள், மாதாந்தம் சிறந்த நூல் ஒன்றினை விமர்சித்து கருத்தாடல் செய்து இளைஞர்களிடம் பொறுப்புக்களை கையளித்து அவர்களை சமூக அக்கறையுடையவர்களாக உருவாக்குதல் போன்ற பணிகளையும் ஆற்றமுடியும்.

எனவே இச்சனசமூகநிலையம் புதிய பணிகளை ஆற்றும் வேளை தனது சேவையால் உயர்ந்து நல்ல சமூகம் உருவாக்கலில் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். அதற்கான உச்சநிலை அருளினையும் இறைவன் வழங்க வேண்டும் என இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

"நன்றி"

## கன்னிகையாய் பெருக வாழி

ஆதியிலே தமிழ் நிலைய மாகி நின்றாய்
அன்புடனே பலகலைநூல் ஏந்தி நின்றாய்
பாதியிலே சனசமூக மெனப்பேர் பெற்றாய்
பின்பலகால் பலவிடமும் மாறிநின்றாய்
வீதிதொறும் நின்பெயரே விளங்கநின்றாய்
முன்பெற்ற பன்னூல்கள் தோற்று நின்றாய்
சோதி பெறும் ஐங்கரன் முன் நிலையாய் நின்றாய்
பின்னவளே கன்னிகையாய் பெருக வாழி

பண்பு நிறை இளையோர் நின் நிலைமை நோக்கி
விண்பரவு நன்மாடம் அமைக்க என்றே
கண்மணிகள் பலர் செய்த சகாயங் கொண்டே
மண்ணவர்கள் போற்ற அரு மாடங்கண்டார்
எண்ணறுபத் தொன்ப தெனும் அகவைகொண்ட
புண்ணியப் பெண்ணமுதே நீ பலநூறாண்டு
மண்ணதனிற் பேர்சிறக்க வாழ நின்றாய்
கண்ணே! நீ கன்னிகையாய் வாழிவாழி



திரு.ச.கந்தசாமி (87),
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
பிராமண வீதி, தும்பளை மேற்கு.

## பல்லாண்டு வாழ்கவே...

வரதவிநாயகரிடம் மனமுருக வேண்டி
கரம் ஐந்துடையோனின் திருவருளாலே
கரமாக அமைந்த இவ் சனசமூகநிலையம்
இருநிலம் மீதில் என்றென்னும் வாழ்கவே!

சொந்தநிலம் ஒன்றுக்குத் தேடி அலைந்து
வந்து அணையாததால் மனம் வருந்தி நிற்க
தந்து மிக மனம் மகிழ்ந்த பவானி தர்மலிங்கம்
சந்ததிகளும் எஞ்ஞான்றும் வாழ்க வாழ்கவே!

"தும்பளை" எனும் தூய நகர் தன்னில்
கம்பீரமாய் நிற்கும் சனசமூகநிலையம்
இன்பத்தமிழுடன் சேவைகளை அள்ளித்தந்து
பன்நெடுங்காலம் வாழ்க வாழ்கவே!

பெரும் பொறுப்பொன்றை பிரியமுடன் ஏற்று
சிரமத்தைப் பாராமல் பெரிதும் முயன்று
அருவரை போல அமைத்துத் தந்த
பெருந்தகைகளும் பல்லாண்டு வாழ்கவே.

முல்லைப் பாட்டியின் கோயிலுக்கு அருகே
பல்லோர்களின் பங்களிப்பைக் கொண்டு
எல்லையற்ற எழிலுடன் விளங்கும்
கல்விச்சாலை வாழ்க வாழ்கவே!

கள்ளங்கபடம் எள்ளளவும் அற்ற
பிள்ளைகளின் நலனை தம்மனத்தே கொண்டு
அள்ளிக்கொடுத்து அகம் மிக மகிழ்ந்த
உள்ளங்கள் எல்லாம் வாழ்க வாழ்கவே!



காலத்தைக் கடத்தாமல் வெயில் மழையைப்
பாராமல்
பலபாடுபட்டு தம் திறமைகளைக் காட்டி
பலபேர் மெச்சும் அழகுடன் படைத்த
கோபாலன் மேத்திரியும் குழுவினரும் வாழ்க
வாழ்கவே!

திரு.இரா.சிதம்பரநாதன்,
தும்பளை மேற்கு.

## நுழைவிழாக்காணும் சனசமூகநிலையம்

பண்டிதர்கள் வித்துவான்கள் வணிகர்கள் மருத்துவர்கள்
அண்டங்கள் சுற்றுவதை ஆய்ந்தெழுதும் கணிதவல்லோர்
கண்டங்களைக் கடந்தும் கலாநிதிப் பட்டம் பெற்றார்
பண்டுதொட்டு ஆசிரியப்பணி புரிந்தோர் தும்பளையோர்

பிரகாசவித்தியா சாலை என்ற பாடசாலை
பிரகாசமாயங்கே வளர்ந்து ஒளி வீசிநிற்க
பிரயாசைப்பட்டு உருவாக்கி வைத்த பெரியோர்கள்
அரசாங்க உயர்பதவி வகித்தோரும் ஏராளம்

கற்றோராய் நற்பண்பைத் தற்காத்துக் கொண்டோர்கள்
ஒற்றுமையாய்க் காரியங்கள் ஓர்ந்து நிறைவேற்றிடுவோர்
பற்றுமிக்கோர் தம்பிரானில் பக்தியிலக்கியம் படிப்போர்
நற்சிந்தனையோடு முன்நடத்திவந்தார் சமூக மையம்

காலங்கள் ஓடுகையில் கருத்தியல்கள் விரிகையிலே
மேலாக விஞ்ஞானம் வீறுநடை போடுகையில்
உலகமே கைக்குள்ளே ஒடுங்கிவந்து நிற்கையிலே
நலமாக நவத்துவத்தைப் பலமாக்கப் பணிபுரிந்தார்

புலம்பெயர்ந்த ஊரவரும் நிலைபெயரா ஊரவரும்
இலமென்று கூறாமல் பலமாகப் பணம்தந்தார்
தலம்தந்தார் தர்மமதாய் தர்மலிங்கம் தம்பதியர்
கலங்கரை விளக்கம்போல் கட்டிவிட்டார் இந்நிலையத்தை

நூலகமாய் இன்று நுழைவிழாக் காணுகின்ற
ஆலங்கன்றாக அடிவேரைப் பாய்ச்சியங்கே
காலங்காலமாய் கலட்டிமண்ணில் நிழல் பரப்ப
சாலச் சிறந்தவொரு சங்கம் மேற்தும்பளையில்



தன்னார்வத் தொண்டர்களாய் தகைசான்ற செயலர்களாய்
இன்முகத்தோடு எடுத்த பணி நிறைவேற்றி
முன்னேற்றப் பாதையிலே முதுஊரைக் கொண்டுசெல்லும்
பண்புடைய நிர்வாக சபையோரே நீர்வாழ்க

திரு.பொ.தர்மகுலசிங்கம் (லண்டன்)

வருங்காலச்சிற்பிகளாய் வலம் வருமூர்ச் சிறார்க்கெலாம்
விரும்பும்படியான அருநூல்கள் பெற்று வைப்பீர்
பெருமைக்காய் கற்காது அறிவிற்காய் கற்றிடவே
தருவீர் நல்யோசனைகள் தகுதியாய் மாணவர்க்கே

கணினித் தொழில்நுட்பம் கற்றிடவும் வசதிசெய்து
இணையத்தளங்கள் பல இயற்றிடவும் கற்பித்து
இணையில்லாக் கருத்தியல்கள் எடுத்துரைக்க உலகுக்கு
மனப்பலத்தைக் கொண்டியங்கும் மதியுடையீர் நீர்வாழ்க

வையவிரிவலையும் வகையான மென் பொருளும்
பையவேகற்றுப் பணி புரிவீர் உலகெல்லாம்
செய்வீரே மென்பொருள்கள் சிறந்த தொழில்நுட்பமுடன்
கையாலே யாகாத கருமமுமக் குண்டாமோ?

## தீராநதியாய் ஊரெல்லாம் பாய்ந்தோடி பாரினில் சிறந்து புதுயுகம் படைத்திடுவோம்

மிகுந்த மகிழ்வோடு என்மனம் துள்ளிவிளையாட, பல்லாயிரம் சிந்தனைகள் என்னுள் ஊற்றெடுத்துப் பாயத்துடிக்கும் அற்புதமானதொரு கணப்பொழுதில் கனகமணி மண்ணாம் நான் பிறந்த தும்பளை மேற்குக் கலட்டியூரின் என் இனிய உறவுகளுடன் எவ்வளவோ விடயங்களைப் பேசிப்பகிர்ந்து கொள்ள வேண்டுமென என்மனம் மத்தளம் கொட்டுகின்றது. எதைப் பேசுவது? எதைத் தவிர்ப்பது? எங்கு தொடங்குவது? சரி இப்படித் தொடங்கலாம்.

1943ம் ஆண்டில் 'தமிழ் நிலையம்' என்ற பெயரில் அந்தக்கால எம்மூர் இளைஞர்களால் சமூகப் பிரக்ஞையோடு ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1949ல் (16.04.1949) தும்பளை மேற்கு சனசமூக நிலையம் என்ற பெயருடன் ஆரம்பித்த எமது நிலையத்தின் ஆரம்பம் என்பது தற்செயலானதொன்றல்ல.

இந்த ஆரம்பம் பெருமைமிக்க எமது முன்னோர்களின் பன்முகப்பட்ட சமூகம் சார் மேம்பாட்டுச் செயற்பாடுகளின் வரலாற்றுத் தொடர்ச்சியாய் உருவெடுத்த தவிர்க்க முடியாததொரு நிகழ்வேயாம்.



திரு.பா.இரகுவரன்
மலராசிரியர், சமூகநாடி.

எம் முந்தையரின் முன்னெடுப்புக்களின் சந்ததிக் கடத்தலின் சிந்தனை விளைவே இதுவென்பேன். எமது ஊரின் கல்விசார் புலமைத்துவத்தையும் சமூகம் சார் செயற்பாடுகளையும் ஒருங்கே தீர்மானித்து வழிப்படுத்தப்படும் செல்நெறி ஒன்று எம்மூருக்குள் தீராநதியாய் என்றும் பாய்ந்தோடிக் கொண்டேயிருக்கிறது. 1949க்கு முந்தைய எம்ஊரின் முன்னோர்களின் செயற்பாடுகள் சிலவற்றை பதிவு செய்து கொள்ளுதல் பயனுடையதாய் இருக்குமல்லவா. வாருங்கள் அவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்வோம்.

1. வைத்தியர்களும் சோதிடர்களும், திண்ணைப் பாடசாலைகளும் நிரம்பப் பெற்று பல்வேறு ஊர்களிலும் இருந்து தினசரி வந்து போய் சனநடமாட்டம் மிகுந்த தெருக்கள் கொண்ட எங்களூரின் வைத்தியர்களும் சோதிடர்களும், ஆசான்களும் தலைமுறையுரித்தான ஏட்டுப் பிரதிகளை அடிக்கடி படித்து உள்வாங்கி தங்களை தொழில் நிலைச் சிறப்பு மிக்கோராய் நிலைநிறுத்தி வந்தனர். 1900ம் ஆண்டுகளின் முற்பகுதி வரை இது தொடர்ந்ததது.

2. மேற்படி வைத்தியர்கள், சோதிடர்கள், ஆசான்கள் (புலவர்கள்) தமக்குத் தேவையான சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றை இந்தியாவில் இருந்து பெற்று வாசித்துப்பின் சேகரித்து வைக்கும் புத்தக கலாசாரம் ஒன்று எமது ஊரில் உருவாக்கம் பெற்றது.

3. தும்பளை மேற்கு பிராமண வீதியில் சிவஸ்ரீ. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் 1875ம் ஆண்டில் தொடங்கப்பட்ட கலாநிதி யந்திரசாலை என்ற அச்சுக் கூடம் பாரியதோர் அச்சுக் கூடமாக வடமராட்சிப் பகுதியில் உருவாகி வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்திலும் பெரும் செல்வாக்குச் செலுத்தியது. சாதாரண அச்சுவேலைகளுக்கு அப்பால் பழந்தமிழ் நூல்களை பதிப்பித்து வெளியிடுதல், உரையெழுதி வெளியிடுதல் என்பவற்றுடன், புத்தகத் தருமாலயம் என்று எமது ஊரவர்களால் பேச்சுமொழியில் அழைக்கப்பட்ட இலவச நூலக சேவையையும் நூல் இரவல் வழங்கும் சேவையையும் நடாத்தி வந்தார். இந்தச் சேவைகளால் எமது ஊரவர்களின் வாசிப்பு, அறிவு மேம்பட்டு வாசிப்புத்தாகமும் அறிவுத் தாகமும் அதிகரித்தன.

4. அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்களின் தகப்பனார் திரு. கணபதிப்பிள்ளையவர்கள் திண்ணைப் பாடசாலை மற்றும் தமிழ்மன்றம் என்பவற்றினூடாக பன்முகப்பட்ட அறிவுவளர்ச்சி, கலந்துரையாடல், பொருத்தமானதும் நுணுக்கமானதுமாகக் கேள்வி கேட்டல் என்பவற்றையெல்லாம் வளர்த்தெடுத்தார்.

5. 1940களிலும் அதற்கு முன்பும் தற்போதைய தும்பளை சிவப்பிரகாச வித்தியசாலைக்கு அருகில் அமைந்த திகிரிச் சந்திக்கு வடக்காக உள்ள வீட்டுக் கட்டடத்தில் மாதம் ஒரு முறை பல்வேறு துறைசார்ந்த விடயங்கள் தகுந்தோரினால் உரையாற்றப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டு வந்தது.

இந்நிகழ்வும் தமிழ் மற்றும் சமூக நிலைப்பட்ட சிந்தனையை வளர்த்து செயலாக்க முனைப்புப் பெற பெரிதும் உதவியுள்ளது.

6. வரலாற்று வழியாகத் தொடர்ந்த எமது முந்தையோரின் அறிவு மற்றும் சமூக முன்னேற்ற செயலாக்கத் தொடர்ச்சியின் ஒரு நிகழ்வே 1943ல் எமது ஊரில் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டு பின்னாளில் (1949) சனசமூக நிலையமாகப் பரிணமித்தது.

7. இதற்கு அப்பால் மகுடம் வைத்தாற்போல் சீனிவாத்தியார் என்று அழைக்கப்பட்ட சிதம்பரப்பிள்ளையவர்களால் சிவப்பிரகாச வித்தியாசாலை தொடங்கப்பட்டது. இதற்கு பக்கபலமாக எமது ஊரவர் பலர் இருந்தனர் எமது கல்விக் கலாசாரத்தில் இது மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. ஆண்களும் பெண்களும் கல்வி பயின்றனர். இங்கு எமது ஊரைச் சேர்ந்த உபாத்தியாயர்களே பெருமளவில் கற்பித்து ஒரு ஆசிரியப் பரம்பரையையும் எமது ஊரில் சிறப்பாக வளர்த்தெடுத்தனர்.

சரி இப்படியே இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். எமது சனசமூக நிலையத்துடன் தொடர்பான இன்னொரு விடயத்தையும் கூற வேண்டும். கலாநிதி யந்திரசாலை என்ற எமது ஊர் அச்சுக்கூடம் பற்றி குறிப்பிட்டிருந்தேன் அல்லவா, அங்கு எமது ஊரவர்கள், உறவுகள் என பலர் வேலை செய்துள்ளனர். அதனால் புத்தகங்கள் கட்டுவதில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். பின்னர் இவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், வேறு தொழில்களிலும் சேவையாற்றினாலும் எமது சனசமூக நிலைய நூலக நிர்வாகக் குழுவில் இருந்து வாராந்த மாதாந்த சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுகதைகள், தொடர்கதைகள் (நாவல்) மற்றும் சிறப்பு விடயங்களை நூல்களாகக் கட்டி நூல்களின் எண்ணிக்கையை பெருமளவு அதிகரிக்க உதவினர். அதனால் சிறந்த நூலக சேவையை எம்மூரவர்களுக்கு வழங்க முடிந்தது.

இன்னொரு விடயம். எமது சனசமூக வரலாற்றில் தனி மனிதர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர்தான் டாக்குத்தரப்பா என அழைக்கப்பட்ட ஸ்ரீமான். க. சுப்பிரமணியம் (R.M.P) அவர்களாவார். அவரது சமூக நிலைப்பட்ட சிந்தனைகளும் செயற்பாடுகளினதும் ஓர் அம்சமாக தும்பளை மேற்கு ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்திற்கு முன்னுள்ள தனது காணியில் எமது சனசமூக நிலையம் இயங்குவதற்கான கட்டிடமொன்றை 1959ல் கட்டிக் கொடுத்து நிலையானதொரு இடத்தில் எமது சனசமூகம் (1959- 2005 வரை) இயங்குவதற்கான பெரும் பணியை எம்மூருக்கு செய்துள்ளார். நன்றிகள் பெருமகனே. உமது தன்னார்வத் தொண்டின் நினைவலைகள் எம் ஊரில் என்றும் நிலைபெற்றிருக்கட்டும்.

மேற்படி நிலைப்பின் தொடர் வளர்ச்சியாகவும் எழுச்சியாகவுமே இன்றைய எமது நிலையத்துக்கான சொந்தக் காணியை கா. தர்மலிங்கம் பவானி தம்பதியினரின் அன்பளிப்பை நோக்குகின்றேன். புலம்பெயர்ந்து வாழும் எமது

உறவுகளின் நிதி அன்பளிப்புக்கள் மற்றும் இணையத்தத்தினூடாகவும் தொலைபேசியினூடாகவும் உறவாடல்கள் உற்சாகமூட்டியது. தொடர்ச்சியான அக்கறைகள். அத்துடன் இங்குள்ள எமது மக்களின் சரீர உதவிகள், பொருளுதவி, ஆர்வம், ஒற்றுமை இவையெல்லாவற்றினதும் சேர்வையாகவே இன்று எமது ஊரில் சனசமூகநிலையம் மாடிக் கட்டிடமாக அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. பருத்தித்துறை நகரப் பகுதியில் மாடிக்கட்டடத்துடன் அமைந்த முதலாவது சனசமூகநிலையம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது. இது வெறும் மாடிக்கட்டடமல்ல எமது கனவுகள் மெய்ப்படும் அறிவாலயம். எமது உறவுகளின் ஒற்றுமையின் சின்னம். எம்மையும் புலம்பெயர்ந்து தேசமெங்கும் வாழும் எம்மவரையும் என்றும் இணைத்திடும் நேசமாளிகை. எதிர்காலத்தில் எமது உயர்பண்பாட்டைத் தீர்மானிக்கப் போகும் நம்பிக்கையின் கோட்டை.

கடந்த மூன்று வருடங்களாய் கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சி நிலைகள், மாற்றங்கள் என்பவற்றைக் கண்டு பூரித்து நின்றோம். அதன் எதிர்காலம் பற்றிய தங்கக் கனவுகளைச் சுமந்தும், பகிர்ந்தும் மகிழ்ந்திருந்தோம். ஆரம்பத்தில் மாதத்தில் ஒரு தடவை நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது. திரு.பா.ரவீந்திரநாதன் அவர்கள் தலைமை தாங்குவார். பெரும்பாலும் சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்குத் தான் நிர்வாக சபைக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படும். எமது பொறியியலாளர் திரு. இ. பாலேந்திரா புகுந்த வீட்டில் இருந்து இங்கு வந்து போவதற்கு வசதியாக இந்த ஏற்பாடு நடைமுறையில் இருந்தது. யார் வராவிட்டாலும் பரவாயில்லை பொருளாளர் திரு. கு. பஞ்சாட்சரம் அவர்கள் வராவிடின் கூட்டம் நடத்தமுடியாது என்ற நிலைமையும் காணப்பட்டது. ஏனெனில் கட்டடம் கட்டும் காலமாதலால் கையிருப்பில் எவ்வளவு பணம் உள்ளது என்று தெரியாமல் அடுத்த நகர்வை நாம் மேற்கொள்ள முடியாது. அவரும் கடந்த மூன்று வருடங்களாக ஒழுங்காக வருகை தந்தார். ஒவ்வொரு சதத்துககும் கணக்குக் காட்டினார். நில அளவையாளர் என்ற வகையில் தொழில், குடும்பஸ்தர் என்ற முறையில் தனது சொந்த வீட்டு கட்டடப் பணி என்பவற்றையெல்லாம் மீறி மிகுந்த சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டமையை இங்கு பிரதான பதிவாக மேற்கொள்வதில் பெருமையடைகின்றேன். மனநிறைவு கொள்ளுகின்றேன். மேலும் பணி தொடர வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

நிர்வாக சபையினரிடமும் இளைஞர்களிடமும் காணப்பட்ட ஒற்றுமை உணர்வு மிகுந்த பாராட்டுக்குரியது. கருத்து முரண்பாடுகள் ஏற்படும் போதெல்லாம் பொதுமுடிவுக்கு ஏற்ப விட்டுக் கொடுப்புக்கள் செய்யப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நான் என்ற உணர்வை மழுங்கடித்து நாம் என்ற உணர்வு உயர்ந்து தென்றலாய் தழுவியது. எல்லாவற்றுக்கும் மேலாக சனசமூக நிலையம் எமது சனங்களின் முன்னேற்றத்துக்கு உரிய நிலையம். சனங்கள் எமக்குத் தேவை. எவரையும் இணைத்துச் செல்ல வேண்டும். இழந்து விடக்கூடாது. என்பதில் நிர்வாகமும், எமது இளைஞர்களும், தீவிர பற்றுறுதி கொண்டவர்களாக மேற்கிளம்பினர். எதிர்காலத்திற்கான

நம்பிக்கையூட்டி சகலரையும் அரவணைத்துச் செல்ல முடியும் என்பதை செயலில் காட்டினீர்கள். என் இனிய இளைஞர்களே வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றேன். உங்களுக்கு ஆசிகள் பல நெஞ்சத்தால் சொரிந்து நிற்கின்றேன். சரி எமது புதிய கட்டடத் திறப்பு விழாவின் இந்தச் சிறப்புமலர் சார்ந்த எனது அனுபவங்களை பதிவு செய்தல் எதிர்கால வரலாற்றுக்கு நிச்சயம் உதவும் என்ற வகையில் தொடர்ந்தும் உங்களுடனான எனது கதையாடலை வளர்த்துக் கொள்கின்றேன்.

திறப்பு விழா அன்று சிறப்புமலர் வெளியீடு செய்ய வேுண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் ஒரு லட்ச ரூபாக்களுக்கு மேல் நிதி வேண்டும் என்ன செய்யலாம். Feb 2012 கடைசி காலப்பகுதியளில் Dr. நிர்மலா சிவாவுடன் தொலைபேசி தொடர்பு கொள்கின்றேன். சேர்த்துத் தருகின்றேன் அல்லது நானே தருகின்றேன் என்றார். இம்மலர் வெளியீட்டுக்கான நிதியை வழங்கிய கனேடிய உறவுகளுக்கு மலர் குழுவின் நன்றிகள் என்றும் உரித்தாகுக. March மாதத்தில் எமது நிர்வாக சபைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஒன்றரை இலட்சம் தேவை என்ற வேண்டுதலை நிர்வாகம் ஏகமனதாக ஏற்றுக் கொள்கின்றது.

காலம் போதாது உடன் நடவடிக்கையில் ஈடுபட விழாக்குழுவினர் வேகமாய் முனைந்தோம். மலர் வெளியிடுதல் கலை நிகழ்ச்சிப் பொறுப்புக்களுக்கான குழு எனது தலைமையில் திரு. கமலநாதன் சுதர்சன், திரு. சிறீ. சங்கநாதன், திரு.ஸ்ரீஸ்கந்தராசா அனோஜன், திரு.அருண்மொழி மயூரன், திரு. நந்தகுமாரன் நிதர்சன், திரு. மகேந்திரன் சுரேஸ் ஆகியோருடன் தலைவர், செயலாளர், பொருளாளர். உட்பட திரு.செ.சிதம்பரநாதன் அவர்களும் இணைக்கப்பட்டார். இம்மலருக்கு சமூகநாடி என்று பெயர் சூட்டப்பட்டது. இனிவரும் காலங்களில் எமது சனசமூகநிலையத்தால் இவ்வாறான ஆண்டுமலர்கள் வெளியிடும் போது எமது தனித்துவத்தை சமூகநாடி என்ற பெயர் வெளிப்படுத்தி நிற்கும் என்பது நிச்சயம்.

இன்று எமது சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாக்காணும் இவ்வேளையில் தனிப்பட்ட இந்தக் காணியை பெற்றுக் கொள்ள உத்தேசித்தவர்கள், காணியை நன்கொடையாக வழங்கியவர்கள், நிதி அன்பளிப்பு வழங்கியோர் மற்றும் பல்வேறு விதங்களில் உதவியோர் அனைவரையும் எமது சமூக நாடி நன்றியுடன் மனங்கொள்கின்றது. வெளிநாட்டு நிதி .இக்கட்டிட நிர்மாணத்திலும், விழாவிலும், தொடர்ந்து இயங்க வைப்பதிலும் கணிசமான பங்களிப்பை செலுத்துகின்றது. எமது வெளிநாட்டு வாழ் உறவுகள் இயந்திரமயமாகிப் போய் விட்ட மேறகத்தைய வாழ்வில் தம்மை உருக்கி உழைத்த நிதி அது. அவர்கள் அங்கு சும்மா இருந்து கொண்டு நிதி அனுப்பவில்லை. அறிவோம் அன்பு உள்ளங்களே. இந்தச் சமூகநாடி என்றும் உங்களின் மகத்துவத்தையும் உவந்தளிப்புக்களையும் தனது மண்வாசனையுடன் உமக்கு வழங்கி பெருமை சேர்க்கும். தனித்துவ அடையாளத்தையும் நிச்சயம் நிலைநிறுத்தும். எமது செயற்பாடுகள் புதிய வரலாற்றை புதுமையுடன் படைத்திடும்.

## சனசமூகநிலையம் – பண்பும் பயன்பாடுகளும் பற்றிய ஒரு பார்வை

ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது எமது சனசமூகநிலையம் இவ்வாறு அறுபது ஆண்டுகள் சனசமூகநிலையம் பதிவு செய்யப்பட்டு இயங்கினாலும் கூட எம்மவர்கள் பலருக்கு சனசமூகநிலையம் என்றால் என்ன? அதன் கட்டமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும்? அதன் செயற்பாடுகள் எப்படி அமையவேண்டும் என்பன தொடர்பான பூரண விளக்கம் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

இந்நிலையக்கட்டடம் அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் கூட இதனை நூலகம் என்று அழைத்ததை என்னால் அவதானிக்கக்கூடியதாய் இருந்தது. என் சக இளைஞர்கள் கூட 'லைபிரரி வேலைகள் எப்படிப்போகுது','லைபிரரிக்கு எவ்வளவு காசு சேர்ந்தது','லைபிரரி எப்ப திறக்கப்போறியள்' என பேசுவதை என்னால் கேட்கக்கூடியதாய் இருந்தது இவ்வாறான சொல்லாடல்களின் மூலம் எம்மவர்களுக்கு போதிய விளக்கம் கொடுக்க வேண்டிய தேவையினை உண்டு பண்ணியது.



திரு.சிறீ.சங்கநாதன் (சங்கர்)
உப தலைவர்
தும்பளை மேற்கு சனசமூகநிலையம்.

எமது சனசமூக நிலையத்திலே சமூகம் சார்ந்த செயற்பாடுகள் இடம் பெற்றிருந்தாலும் கூட வாசிகசாலை சார்ந்த செயற்பாடுகளே முதன்மை பெற்றன. எனவே சனசமூகநிலையத்தின் நோக்கம் என்ன என்பதையும் அதன் கட்டமைப்பு செயற்பாடுகள் தொடர்பாகவும் சில கருத்துக்ககளை முன்வைக்கலாம் என நினைக்கிறேன். அந்த வகையிலே மக்கள் தமது ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு வசதிகள் அளிப்பதே சனசமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமாகும். பொதுவாக **சனசமூக நிலையம் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலே வாழ்கின்ற மக்கள் அனைவரும் தமக்குள் ஒன்று சேர்ந்து தமது மக்களுக்கு சேவை புரிவதற்கென உருவாக்கப்பட்ட சமூக நிறுவனமே ஆகும்**. மக்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிவதற்கும் உறவு கொண்டாடுவதற்கும் தோழமை கொள்வதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் தமக்குள் நேரடித் தொடர்பை பேணுவதற்கும் சனசமூகநிலையங்கள் பயன்படுகின்றன. இந்நிலையங்கள் மக்களின் சமூகத்தேவைகளான கூடுதல், பகிர்தல், அறிதல், விளையாடுதல் போன்ற பலவற்றை பூர்த்தி செய்கின்றன. அதாவது **பொதுசன அக்கறையுள்ள விடயங்கள் கலந்துரையாடப்பட்டு நிறைவேற்றப்படும் நியாய சபையாக இச் சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றன.** இவை மக்களின் எண்ணங்கள், குறிக்கோள்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், தொழில்கள் போன்றவற்றை செம்மைப்படுத்த முயற்சிக்கின்றன.

இவ்வாறு சமுதாய நலன்களுக்காக உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் மக்களிடையே ஒற்றுமையைப் போதிக்கின்றன. இங்கு ஆண்கள்- பெண்கள் என்றோ இளையோர்கள்- முதியோர்கள் என்றோ ஏழை-பணக்காரன் என்றோ உயர்சாதி- தாழ்ந்தசாதி என்றோ பாகுபாடுகள் காட்டாமல் அனைவரும் ஒன்றுபட்டு பொது நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகள் இடம் பெற வேண்டும். இது சமூகத்திலுள்ள அனைத்துத்தரப்பினர்களும் இணைந்து எந்தவித பாரபட்சமும் காட்டாமல் தமது இலக்கை அடைவதற்காக உறுதியுடன் செயற்படவேண்டும்.

சனசமூக நிலையங்கள் தமது செயற்பாட்டுப்பிரதேசத்திலுள்ள மக்களின் கல்வி, கலை, கலாசாரம், சுகாதாரம், சமயம், பொருளாதாரம், விளையாட்டு போன்றவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மக்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் ஏற்ற முறையில் திட்டமிட்டு பயனுள்ள வகையிலும் இலாபகரமான வழிகளிலும் செயற்படுவதற்கான உதவிகளை வழங்குவதுடன் அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று சமூக அபிவிருத்திக்குப்பயன்டுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

இந்த உயரிய நோக்கத்தை அடைவதற்காகவே **இலங்கை அரசினால் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற சுற்று நிருபம் இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் வெளியிடப்பட்டது.** அதற்கமைய பல கிராமங்களிலும் சனசமூக நிலையங்கள்

அமைக்கப்பட்டது போன்றே எமது கிராமத்திலும் தும்பளை மேற்கு சனசமூக நிலையம் அமைக்கப்பட்டது. இந்த சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் அவற்றின் ஆலோசனைகள், உதவிகள் என்பனவற்றைப் பெற்று செயற்படுகின்றன.

சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அந்த வகையிலே எமது சனசமூக நிலையம் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் 1949ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு இன்றுவரை தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.

சனசமூக நிலையங்கள் தமது செயற்பாட்டெல்லையை தெளிவாக நிர்ணயம் செய்யவேண்டும். அந்த வகையிலே எமது சனசமூகநிலையம் "கலட்டி" என்றழைக்கப்படும் தும்பளை மேற்கினை தமது செயற்பாட்டெல்லை பிரதேசமாகக் கொண்டுள்ளது. இச் செயற்பாட்டுப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் அல்லது பிறந்தவர்கள் அல்லது தொழில் புரிவோர்கள் அல்லது சொத்துரிமையுடையோர்கள் இந்நிலையத்தில் அங்கத்தவராக முடியும்.

இந்நிலையங்கள் சிறப்பாக செயற்பட நிதி அவசியமானதாகும். இதனை உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கும் சந்தாப்பணங்கள், உதவு தொகைகள், நன்கொடைகள் மூலமாகவோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள், நன்கொடைகள் மூலமாகவோ நிகழ்ச்சிகளை நடாத்துதல் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

சனசமூக நிலையங்கள் இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது ஒன்று பொதுச்சபை மற்றையது நிர்வாகசபை. பொதுச்சபை உறுப்பினர்களாக நிலையத்தின் ஆயுட்கால சாதாரண உறுப்பினர்களே பொதுச்சபை உறப்பினர்கள் ஆவார்கள். இப் பொதுச்சபை வருடத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகளாவது கூட வேண்டும்.

நிர்வாக சபையானது நிலையத்தின் ஆயுட்கால சாதாரண உறுப்பினர்களிலிருந்து நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். ஒருவர் ஒரே நேரத்தில் இருசனசமூகநிலையங்களிலும், ஒருசனசமூகநிலையத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளையும் வகிக்கமுடியாது. நிர்வாக சபையில் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உபசெயலாளர் ஆகியோருடன் ஒவ்வொரு குழுவிற்கும் (உதாரணமாக விளையாட்டுக்கழகம், முன்பள்ளி, நூலகம்,சமயம், கலை, கலாசாரம்) ஒவ்வொரு உறுப்பினர்களைத்தெரிவு செய்து மொத்தம் 15 உறுப்பினர்கள் நிர்வாக சபையில் தெரிவு செய்யப்படல் வேண்டும். மற்றும் கணக்கு பரிசோதகர் ஒருவர் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட வேண்டும். இவர் நிர்வாக சபையில் அங்கம் வகிக்க முடியாது.

ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டும் ஒவ்வொரு புதிய ஆண்டுக்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் முந்தைய ஆண்டின் இறுதி மாதங்களில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது கிராமசேவையாளர்

முன்னிலையில் நடாத்தப்பட வேண்டும். இதன்போதே நிர்வாக சபை தெரிவு செய்யப்படும். இந் நிர்வாக சபையானது ஒரு ஆண்டே பதவி வகிக்க முடியும்

சனசமூக நிலையம் சிறப்பான முறையில் இயங்க வேண்டுமானால் பின்வரும் பதிவேடுகளை பேணுதல் வேண்டும்

1. பொதுக்கூட்ட அறிக்கைப்புத்தகம்
2. நிர்வாகசபை கூட்ட அறிக்கைப்புத்தகம்
3. தீர்மான அறிக்கைப்புத்தகம்
4. சந்தா அங்கத்தவர் பதிவுப்புத்தகம்
5. காசுக்கணக்குப்புத்தகம்
6. பொருட்பதிவுவேட்டுப்புத்தகம்
7. செயற்பாட்டு அறிக்கைப் பதிவேடு

- நூலகங்கள் தொடர்பான பதிவேடுகள்
- முன்பள்ளி தொடர்பான பதிவேடுகள்
- விளையாட்டுக்கழகம் தொடர்பான பதிவேடுகள்
- கலை, கலாசாரம் தொடர்பான பதிவேடுகள்

சனசமூக நிலையத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு செயற்படுத்த வேண்டிய செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்

1. வாசிகசாலை நடாத்துதல்

   பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,புத்தகங்கள் போன்றவற்றை பொதுமக்கள் வாசிக்கக்கூடிய வகையில் ஒரு வாசிகசாலை நடாத்தப்பட வேண்டும்

2. நூலக சேவை நடாத்துதல்

   மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் பயனுள்ள நூல்களை கொண்ட ஒரு நூலகக்கட்டமைப்பு பேணப்பட வேண்டும். இன்றைய காலத்துக்கு ஏற்ப நூலகங்கள் நூல்களுடன் மட்டும் நின்று விடாமல் இணையத்தள வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. முன்பள்ளிகளை நடாத்துதல்

சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகளை நடாத்த வேண்டும் இளஞ்சிறார்களின் கல்வியை ஆரம்பித்து வைப்பதில் முன்பள்ளிகள் செயற்திறனுடன் செயற்படவேண்டும்.

4. விளையாட்டுக்கழகங்களை உருவாக்குதலும் செயற்படுத்தலும்

சிறப்பான முறையில் விளையாட்டுக்கழகம் அமைக்கப்பட்டு அனைத்துத்தரப்பினரும் விளையாட்டுக்கழகத்தில் பங்கு பற்றுவதற்கு ஏற்ற வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், ஆண்கள், பெண்கள் என அனைத்துத்தரப்பினரும் விளையாட்டுக்கழகத்தில் பங்கேற்குமாறு அதன் கட்டமைப்பு அமைக்கப்படவேண்டும். அனைத்து வகையான விளையாட்டுக்களிலும் ஒவ்வொருவரும் பங்கேற்கக்கூடிய வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் மற்றும் விளையாட்டுப்போட்டிகளை நடாத்தவும் வேண்டும்.

5. சிரமதான நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல்

குறிப்பிட்ட தினங்களில் சிரமதான நிகழ்வுகள் செயற்படுத்தப்படவேண்டும் இதன் மூலம் ஒற்றுமையை வளர்க்க வேண்டும் சிரமதானங்கள் பின்வருமாறு அமையலாம்

- டெங்கு ஒழிப்பு சிரமதானம்
- ஆலயச்சூழல், வீதிகள் துப்புரவு செய்தல் போன்றவாறு அமையலாம்

6. சிறுவர் முதியோர் கல்விக்கு உதவுதல்

7. சூழல் பாதுகாப்புத்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துதல் (உதாரணம் மரம் நடுகை)

8. மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தல்

9. சுற்றுலாக்கள்(அறிவை வளர்ப்பதற்கான) ஒழுங்குகளைச் செய்தல்

10. ஆரம்ப பிள்ளைப்பருவக்கல்வி அபிவிருத்திக்கு உதவுதல்

11. சுகாதாரம் போசாக்கு தொடர்பான திட்டங்களை செயற்படுத்தல்

12. கிராமம் தொடர்பான அடிப்படைத்தரவுகளைத்திரட்டி ஆவணப்படுத்துதல்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தரவுகளை ஆவணப்படுத்துதல்

13. பிரிவுசமாசத்தில் அங்கத்தவராக இணைந்து அதன் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் உறுதுணையாக இருத்தல்

இது போன்ற செயற்றிட்டங்களை சனசமூக நிலையங்கள் முன்னெடுக்க வேண்டும் மேலும் எமது தும்பளை மேற்கு சனசமூக நிலையம் மேற்குறிப்பிட்ட செயற்றிட்டங்களை எந்தளவுக்கு முன்னெடுக்கின்றது? மேலும் எவ்வாறு எதிர்கால திட்டங்களை வகுத்துச்செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக ஆராய வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டு இருக்கின்றது.

அந்த வகையில் எமது நிலைய நூலக சேவை தொடர்பாக நோக்குவோம். 1943ம் ஆண்டின் ஆரம்பத்தில் "தமிழ் நிலையம்" என்ற பெயரில் ஒரு வாசிகசாலை அல்லது நூலகமாகவே எமது சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்பது இதன் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது புலனாகின்றது அதன் பின்னர் இது சனசமூக நிலையமாக மாற்றம் பெற்ற போதும் கூட நூலக சேவையே பிரதான இடம் வகித்திருந்தது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் தேடற்கரிய புத்தகங்கள் பலவற்றைக் கொண்டிருந்தது. நூல்களை வாசகர்களுக்கு இரவல் வழங்கும் முறையையும் கொண்டிருந்தது.

இவ்வாறு சிறப்புடன் எண்பதுகளின் இறுதிப்பகுதிவரை இயங்கிவந்தது. எனினும் பின்னர் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவால் இந்த நூலகம் பல வழிகளிலும் பாதிப்படையத்தொடங்கியது இதனால் மக்களின் ஈடுபாடும் ஆர்வமும் குன்றியது. இவ்வாறு ஒரு இருண்ட காலப்பகுதியாகவே தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது. எனினும் இன்று பலரினது முயற்சியால் நிலையத்திற்கென ஒரு நிரந்தரக்கட்டடம் அமைக்கப்பட்டு அதனுள் நூலகத்திற்கென ஒரு மண்டபமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் மக்களிடையே ஒரு மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. நூலகத்தின் அவசியத்தை புரிந்து கொண்ட மக்கள் மீண்டும் நூலகத்தை அமைப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருவது ஒரு நம்பிக்கையை எம்மிடையே ஏற்படுத்துகின்றது.

இந்நூலக கட்டமைப்பானது பல பிரிவுகளாக இருக்க வேண்டும் அதிலே பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசிப்பதற்கென ஒரு பிரிவும், உசாத்துணை (Reference) நூல்களை வாசிப்பதற்கென ஒரு பகுதியும், இரவல் கொடுப்பதற்குரிய (Lending Section) நூல்களை கொண்ட ஒரு பகுதியும், கணனி மற்றும் இணையத்தள வசதிகளைக்கொண்ட இன்னொரு பகுதியும் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு பல வசதிகளைக்கொண்ட நூலக சேவையை இக்கிராமத்திற்கு எமது சனசமூக நிலையம் வழங்க வேண்டும்

அடுத்ததாக முன்பள்ளி தொடர்பாக ஆராய்கின்ற போது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு முன்பள்ளி நிச்சயமாகத் தேவை. ஏனெனில் சின்னஞ்சிறு மழலைகள் நீண்ட தூரம் சென்று கற்பது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. இவ்வாறான முன்பள்ளி அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைதல் வேண்டும். சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன மிகவும் அவசியமானதாகும். வளரும் பிள்ளைகளின் சிந்தனையை சரியான முறையில் தூண்டக்கூடியதாக முன்பள்ளிகள் செயற்பட வேண்டும். அந்தவகையில் எமது சனசமூக நிலையம் ஒரு முன்பள்ளியைக் கொண்டிருந்தது. 90களின்

ஆரம்ப காலப்பகுதியில் "தும்பளை மேற்கு பாலர் பாடசாலை" எனும் பெயரில் முன்பள்ளி ஒன்று இயங்கிவந்தது. பின்னர் அது "பாரதி பாலர் பாடசாலையாக" பெயர்மாற்றம் பெற்றது இதன் பின்னரான காலப்பகுதியில் சனசமூக நிலையம் சீரான முறையில் இயங்காதமையாலும் மற்றும் பல காரணங்களினாலும் முன்பள்ளிக்கும் நிலையத்திற்கும் உள்ள தொடர்பு இல்லாமல் போயிற்று

எனினும் இன்று நிலையம் முழு வேகத்துடன் செயற்படத் தொடங்கியிருக்கின்றது.எனவே முன்பள்ளியையும் பொறுப்பெடுத்து அதனை சிறப்பான முறையில் நடாத்துவதற்கு முன்வர வேண்டும். இதற்கு எமது மக்களின் பேராதரவும் ஒத்துழைப்பும் கணிசமான அளவில் தேவைப்படுகிறது.

அடுத்ததாக விளையாட்டுக்கழகம் தொடர்பாக நோக்கும் போது எமது பிரதேசத்தில் கழகங்கள் நீண்ட காலமாக சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றன. எனினும் நீண்ட காலமாகவே மைதானம் இன்மை என்பது பெரிய ஒரு குறையாகவே உள்ளது. அதே போல விளையாட்டுகழகத்திற்கும் சனசமூக நிர்வாகத்திற்கும் இதுவரை ஒரு தொடர்பும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே கழக நிர்வாகமும் சனசமூக நிலையமும் இணைந்து செயற்படுவதன் மூலம் ஒரு மைதானத்தை அமைக்கவும் மற்றும் விளையாட்டுக்கழக நடவடிக்கைகளை முன்னேற்றவும் முடியும்.

இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலம் சமூகப் பொறுப்புக்களை உணர்ந்து வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செயற்பட்டு நல்ல ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்குவதே சனசமூக நிலையத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.மற்றும் மாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கி ஏற்றம் மிக சமுதாய பரம்பலை உருவாக்குவதற்கு சனசமூக நிலையங்கள் செயலாற்ற வேண்டும்

எனவே எம்முடைய சனசமூக நிலையம் எமது கிராமத்தின் விழுமியம் மாறாமல் பாரம்பரியங்கள் சிதையாமல் நல்ஒழுக்கசீலர்களை உருவாக்குவதற்கு முனைப்புடன் செயற்படும் என்று நம்பிக்கையுடன் இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

"நன்றி"

# அறிவைத்தேடிட



திருமதி. கமலினி பாலசிங்கம்,
ஆசிரியை, பகுதித்தலைவர்,
தும்பளை சிவப்பிரகாசம் ம.வி,
பருத்தித்துறை.

மனிதன் வாழக் கற்க வேண்டும் என்ற கோட்பாடு இன்று உலகம் முழுவதும் நிலைபெற்றுள்ளது. "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற அறிவுரையையும் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்ற முதுமொழியும், "கருவறை முதல் கல்லறை வரை கல்வி தொடருதல் வேண்டும்" என்ற ஆன்றோர் மொழிகளும், 'கற்க மறுப்பவன் வாழமறுப்பவன்' என்ற கல்வியியலாளர் கருத்தும் கல்வியின் முக்கியத்துவத்தினையே வலியுறுத்துகின்றன.

கல்வியை நாம் யாவரும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதற்கு வயதெல்லை கிடையாது. நாம் இவ்வறிவினை எங்கு தேடலாம்? என்று எண்ணி எண்ணிப் பலர் பயனற்று வாழ்கின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக வெறும் தொலைக்காட்சிகளில் பொழுதைப்போக்கி காலத்தை கழிக்கின்றனர். கேள்வி ஞானம் பெற்று பலர் பொழுதைக் கழிக்கின்றனர். "கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான்" என்பார்கள். வெறும் கேள்வி ஞானம் அறிவை வளர்த்திட எந்தவகையிலும் பயன்பெறாது என்பதில் ஐயமில்லை.

நாம் எத்துறை சார்ந்தவர்களாக இருந்தாலும் அத்துறைக்குரிய அறிவினைப் பெற தேடல் அவசியமாகும். இன்று எமது நாடெங்கும் பெருகிவரும் அறிவாலயங்கள் பல. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக்கல்லூரிகள், தனியார் கல்விக்கூடங்கள் யாவும் அறிவைப் பெருக்கும் அறிவாலயங்களாகவே உள்ளன. ஆனால் இங்கு ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் யாவரும் அறிவுக்கு வித்திட்டு வழிகாட்டும் பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் மட்டும் ஊட்டும் அறிவு போதியது அல்ல. நாம் அவர்கள் போதனைகளை அவர்கள் இட்ட வித்துக்களை விருட்சமாக்கி வளர்த்துக்கொள்ள நூல்நிலையங்களையே நாடவேண்டும் என்பதை மறுக்கமுடியாது.

இன்று நாடு முழுவதும் ஊருக்கு ஊர் நூல்நிலையங்கள் பல்கிப்பெருகி வருகின்றன. அந்தக்காலத்தில் அமெரிக்க நாட்டு அறிஞரான ஆபிரகாம்லிங்கன் நாற்பது கல்தூரம் சென்று நூல் ஒன்று பெற்று கற்று இன்புற்றதாக செய்திகள் கூறுகின்றன. இன்று அந்நிலைமாறியுள்ளது. எனினும் வாசிப்புப்பழக்கம் மிகவும் அருகி காணப்படுகின்றது. "வாசிப்புத்தான் ஒரு மனிதனை பூரண மனிதனாக்குகின்றது" எனவே நாம் சிறுவயது முதல் இப்பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பார்கள். எனவே பிள்ளைகளுக்கு பயன்தரும் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை வயதுக்கேற்ப கொடுத்து அறிவைத் தூண்டுதல் பெற்றோரின் கடமையாகும். இவ்வாறு ஊர்தோறும் உள்ள நூலகங்களைப் பயன்படுத்தி பிஞ்சு உள்ளங்களின் அறிவுத்தாகத்தினை உண்டுபண்ணுதலால் எமது சந்ததியினர் சிறந்த தேர்ச்சி பெற்ற அறிவு படைத்தவராக மிளிரலாம்.

அறிவுத்தாகம் மிக்கவனுக்கு அரிய பொக்கிஷங்களாக திகழ்பவை நூல்களே. தண்ணீர் விடாய் உள்ள ஒருவன் எவ்வாறு நீரைத் தேடிச்செல்வானோ அதேபோல அறிவுத்தாகம் உடையவன் நூலகங்களை நாடிச்செல்வதினை காணலாம்.

"புல்லைக்கண்டு பின்பற்றிச் செல்லும் மாடுபோலப் பின்பற்றிச் செல்வேன் எனக்கு நூல் தருபவர்களைத் தேடி" என்கிறார் கிரேக்கநாட்டு அறிஞரான சோக்கிரட்டீஸ். ஓய்வின்றி ஒழிவின்றி விடுதலைத் தொண்டில் ஈடுபட்ட அருட்பெரியார் காந்தியடிகள் கூட பகவத்கீதை வரிகளை சுவரில் எழுதிவைத்து அதைப்பார்த்து பல்துலக்கியபடி மனனம் செய்தார். இவ்வாறு நூற் காதல் கொண்டவர்கள் எத்தனை பேர் இவ்வுலகில் வாழ்ந்தனர். இவர்களது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாதவராய் விளங்குகின்றனர். அவர்கள் வாழ்ந்த காலம் நூல்கள் பெறுவது அரிதான காலம், ஆனால் இன்று இந்நிலை மாறியுள்ளது.

உலக மொழிகளோ ஆயிரம் ஆயிரம். ஒவ்வொரு மொழியிலும் நூல்களோ பல்லாயிரம். அவற்றின் அரிய கருத்துக்கள் பல்கோடி. ஆனால் அற்ப வாழ்நாளுடைய மக்களாகிய நாம் நம் வாழ்நாளில் முற்றுமுழுதாக அவற்றை கற்றுத் தெளிவு பெறமுடியாது. எனவே கற்றது கைமண்ணளவு என்பார்கள். இந்த கைமண்ணளவு அறிவினை நாம் நாள்தோறும் நூல்களைப் பயன்படுத்திக் கொண்டால்தான் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு நாம் அறிவுத்தாகம் கொண்டவர்களாக, நூல்களை நாடி தேடிச்செல்பவர்களாக, அங்குள்ள நல்ல நூல்களைத் தேடி ஆராய்ந்து கற்பவர்களாக இருக்க வேண்டும். பறவைகள் எவ்வாறு தமக்குரிய உணவை ஆராய்ந்து தேடி உண்கின்றனவோ இவ்வாறே நாமும் நூல்களை நாடிச் செல்லும் பறவைகளாக இருக்க வேண்டும். "நவில் தோறும் நூல் நயம் பயக்கும்" என்பார்கள். எனவே நாம் பயன்படுத்தும் நூல்கள் யாவும் சிந்தையில் தெளிவுடன் வாசித்துக் கொள்ளுதல் அவசியம். நூற்பொருள் நன்குணர்ந்து கொண்டவர்கள் என்றும் அதன் பயனைப் பெற நாடிச் செல்வார்கள்.

எமது மூதாதையரின் வாழ்க்கையைச் சிந்தித்துப்பாருங்கள். அவர்கள் பாடசாலையிலோ, பல்கலைக்கழகங்களிலோ பட்டம் பெற்றவர்கள் அல்ல. ஆனால் நூல்களை வாசித்து சிறந்த முறையில் ஆலயங்களில் பிரசங்கம் செய்யவோ, புராணபடனம் செய்யவோ முன்வருகின்றார்கள். ஆனால் இன்று எமது இளம் சமூகம் இந்நிலையிலில்லை. நாமும் நூல்களை தேடிக்கற்று எமது மூதாதையரைப்போல சிறந்த தேர்ச்சியுடன் மிளிர வேண்டும்.

நல்லமுறையில் நல்ல நூல்களை வாசித்து, கிரகித்து, தெளிவதன் மூலமே அறிவு வளரும். உள்ளத்தில் என்றும் அழியாதவகையில் பசுமரத்து ஆணி போல பதியும். எனவே நாம் என்றென்றும் நூலகங்களில் உள்ள அரிய பெரிய பொக்கிஷங்களான நூல்களைப் பெற்று வாசித்து சிறந்த அறிஞர்களாக மாறிடவேண்டும். மாறிவரும் தொழில்நுட்பவளர்ச்சியையும் நாம் பின்பற்றிக்கொண்டாலும் எமது வாசிப்பு அறிவை நாம் வளர்த்திடாவிடில் சிறப்பு தேர்ச்சியுடையவராக முடியாது என்பது உண்மை.

வாசிப்பு அறிவை வளர்த்திட வறுமைகூட இன்று தடையாக இல்லை. இதற்கு இன்று பல்கிப்பெருகிவரும் நூலகங்கள் துணையாக உள்ளன. நூல்கள் பெறுமதிமிக்கவை. பயனுள்ளவை, இவையாவும் உடைய அரும்பெரும் பொக்கிஷங்களாக நூலகங்கள் மிளிர்கின்றன. பண்டைக்காலத்தில் அரசர்கள் கூட குருவுக்கு பயந்தே ஏவல் செய்து குருகுலங்களில் தங்கியிருந்து தமது அறிவினை வளர்த்துக்கொண்டனர். ஆனால் இன்று அந்நிலை மாறி குறிப்பிட்ட காலநேரத்தில் எமக்கு கிடைக்கும் பொழுதை நூலகங்களில் பயன்படுத்தி குறைகுடங்களாக உள்ள எமது அறிவை பூரண நிறைகுடங்களாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

நூலகப்பயன்பாடானது அறிவைத் தேடுவதுடன் சிறந்த ஒழுக்கப்பண்புகளையும் உருவாக்கும். "கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள்" என்கிறார் வள்ளுவர். நூலகம் நாடிச்செல்வோர் அமைதியும் பொறுமையும் ஆராயும்திறன், சிந்தித்துச் செயற்படுதல், அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு போன்ற பல நற்பழக்க வழக்கம் உடையவராய் மிளிர்வர் என்பதில் ஐயமில்லை. அறிவைத்தேடும்போது இப்பழக்கங்கள் ஒருவரிடம் தானாகவே சேர்ந்து கொள்ளும்.

இன்று தும்பளை மேற்கில் உருவாக்கப்பட்ட சனசமூகநிலையமானது தும்பளைவாழ் மக்களின் அறிவுப் பசிக்கு அமுதளிக்கும் சிறந்ததொரு அறிவாலயமாகும். இவ்வறிவாலயமானது எமது தும்பளை வாழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் உரியதாக பல்துறையிலும் வளர்ச்சிபெற்று திகழ எல்லாம் வல்ல விநாயகர் பெருமானை வேண்டி சனசமூக நிலையம் உருவாக்க உதவிய அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி "பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்"

"காலத்தின் தேவையறிந்து கடமைசெய்பவரே
ஞாலத்தில் சிறந்து விளங்குவர்"

வளர்க தும்பளை மேற்கு சனசமூகநிலையம்

"நன்றி"

## சுவையான ஆரம்பக்கல்வி சுமையாவது ஏன்?

ஒரு குழந்தையானது வளர்ந்து பிள்ளைப்பருவத்தை அடைந்ததும் அவன் கல்வி கற்பதற்கு தயாராகின்றான் என நாம் கருதுகின்றோம். ஆனால் குழந்தை தாயின் கருவறையிலே சிசுவாக இருக்கும் போதே கற்க ஆரம்பிக்கின்றது. இது வைத்தியர்கள், உளவியலாளர்கள் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஒரு குழந்தைக்கு ஏடுதொடக்கி அதாவது வித்தியாரம்பம் செய்து வைத்தபின்னரே நாம் எழுத்தை அறிவிக்க ஆரம்பிக்கின்றோம். எழுத்தறிவித்தவன் இறைவனாவான். இந்தவகையில் முதன்முதலில் வித்தியாரம்பம் செய்து வைப்பவர் முதற்குரு ஆவார். இதன் பின்னர் நாம் பிள்ளையை முன்பள்ளியில் சேர்க்கின்றோம். முன்பள்ளி என்றால் என்ன? என்பதை நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். குழந்தை ஐந்து வயது பூர்த்தியானதும் பாடசாலைக்கு செல்ல ஆரம்பிக்கின்றது. அங்கு செல்வதற்கு முன்னர் அவன் சில நியதிகளுக்கு அமைய எழுதப்படிக்க வேண்டும். இந்த ஒழுங்குகளை கற்பதற்காகவே பிள்ளை முன்பள்ளி செல்கின்றது.



செல்வி.ஏ.வரலட்சுமி,
தும்பளை மேற்கு,
ஆசிரியர் வடஇந்து மகளிர் கல்லூரி.

அங்கு கடவுளை வணங்குதல், உடற்பயிற்சி, நேரத்திற்கு உணவு உண்ணுதல், கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களுக்கான முன்னாயத்தம், எண்ணறிவிற்கான முன்னாயத்தம் என்பனவற்றை பெற்றுக்கொடுத்தலே முன்பள்ளி பயிற்சியின் நோக்கமாகும். ஆனால் இன்று வீடுகளில் கூட்டுக்குடும்பமாக வாழும் நிலை மாறியதுடன் கணவன், மனைவி ஆகிய இருவரும் சம்பாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் பிள்ளைகளைப் பராமரிப்பதில் பெரும் பிரச்சினை காணப்படுகின்றது. எனவே குழந்தைக்கு இரண்டு வயது பூர்த்தியானதும் அதனை முன்பள்ளியில் சேர்த்துவிடுகின்றனர். இதனால் முன்பள்ளிகள் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களாக மாறும் அபாயமும், அச்சுறுத்தலும் தோன்றியுள்ளன. வீட்டிலே உண்டு உறங்கி, குடும்பத்தினரின் தோளிலும், மார்பிலும் விளையாடி, தூங்கி நிம்மதியாக இருக்க வேண்டிய வயதில் முன்பள்ளியில் அடைக்கப்பட்டு அடக்கப்படுவதால் சுவையான முன்பள்ளி பிள்ளைகளுக்கு சுமையாக மாறுகின்றது என்பது "வெள்ளிடைமலை". முன்பள்ளியில் உரிய வயதில் சேர்க்கப்படுவதால் பிள்ளையின் தசைநார்களும் எலும்புகளும் எழுதுவதற்கேற்ற இசைவாக்கம் பெறுவதுடன் மூளைவிருத்தியும் ஏற்படுகின்றது. எனவே பிள்ளை சந்தோசமாக பாடசாலையில் நல்லமுறையில் காலடி எடுத்து வைக்கின்றான்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி ஆனால் "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகிவிடும்" ஒரு பழமானது மொட்டாகி. பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியாகுவதே இயற்கையின் நியதி. இயற்கைக்கு மாறாக பிஞ்சிலே பழுக்க வைத்தால் அந்தப்பழம் நச்சுப்பழமாகும் ஆபத்துக்கூட உண்டு. எனவே குழந்தைகளும் அப்படித்தான் கருவாகி, சிசுவாகி, குழந்தையாகி, சிறுவர், இளைஞர், முதியோர் எனப் பல படிமுறையாக வளர்ச்சியடைய வேண்டும். தமது காலவயது, உளவயது என்பவற்றுக்கு அமையவே கல்வியும் கற்க வேண்டும். இதற்கு முன்னர் நாம் செய்யும் திணிப்புக்கள் அவர்களது உடல், உள வளர்ச்சியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் இதனை நன்குணர்ந்து எமது சமூகம் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையிலான வகுப்புக்களே ஆரம்பப்பிரிவினுள் அடக்கப்படுகின்றன. அங்கு ஆசிரியர்கள் பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து விதந்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைய வேலைத்திட்டங்களை அமைத்து பாடவேளைகளுக்கு அமைவாக "ஐயந்திரிபற கற்பிக்கின்றனர்" ஆனால் இன்றைய கணினியுகத்திலே பெற்றோர் நமது பிள்ளைகளை ஒரு இயந்திரமாகவே கருதுகின்றனர். பாடசாலையில் ஆரம்பக்கல்வியை பொறுத்தவரையில் தரம் 1 - 2 வரையிலான வகுப்புக்கள் முதன்மைநிலை என்ற வகுதியினுள் அடக்கப்பட்டு ஒரு ஆசிரியராலும், தரம் 3 - 4 வரையிலான வகுப்புக்கள் முதன்மை நிலை இரண்டு என்ற வகுதியினுள் அடக்கப்பட்டு இன்னோர் ஆசிரியராலும், தரம் 5 வகுப்பு முதன்மை நிலை மூன்று என்ற வகுதியினுள் அடக்கப்பட்டு இன்னொரு ஆசிரியராலும்

கற்பிக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு தேவைக்கேற்ப காலத்திற்கு காலம் பயிற்சிகள் செயலமர்வுகள் வழங்கப்படுவதால் அவர்கள் பிள்ளைகளின் கொள்ளளவிற்கு ஏற்பவே கற்பிக்கின்றனர்.

இன்றைய பெற்றோரின் நிலைப்பாடு என்ன? பிள்ளைகளை அதிகாலை நான்கு மணிக்கே துயில் எழுப்பி தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். பின்னர் அறக்கப் பறக்க உண்டது பாதி, உடுத்தது பாதி என விழுந்தடித்து பாடசாலையில் கொண்டுபோய் சேர்த்துவிடுகின்றனர். பாடசாலை முடிவடைந்ததும் மீண்டும் உண்டும் உண்ணாமலும் உடுத்தும் உடுக்காமலும் தனியார் கல்வி நிலையங்களுக்குள் தஞ்சம் புகுந்து விடுகின்றனர். அதன்பின் மாலையானதும் மீண்டும் வீட்டுக்கு வந்தபின்னர், வீட்டுக்கு வீடு தனித்தனிப் பாடம் (Personal Class) கற்கச் சென்று விடுகின்றனர். இரவு 8 அல்லது 9 மணிக்கு மீண்டும் வீடு வந்து சேர்ந்ததும், உடல், உளச் சோர்வுடன் அப்பாடா என படுக்கையில் விழுந்துவிடுகின்றனர். இப்படியான இயந்திர வாழ்க்கை பிள்ளைகளுக்கு அவசியமா? "தேனிருக்கும் இடத்தினை தேடிச்செல்லும் வண்டு போல நூலிருக்கும் இடத்தினை நாடவேண்டும் பிள்ளைகள்" இவ்வாறு நூலகங்கள், பூங்காக்கள், கடற்கரை போன்ற இடங்களுக்கு பிள்ளைகளை பெற்றோர் அழைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளின் வாசிப்புத்திறன், சமூகமயமாகும் திறன், சிறந்த தொடர்பாடல் திறன் என்பன வளர்ச்சியடையும். எமது பராமரிப்பிற்கு அப்பாற்பட்ட சில செயற்பாடுகளும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஆரம்பக்கல்வியை கற்பிப்பதில் சில சுமைகளை ஏற்படுத்துகின்றன என்பதையும் எமது சமூகம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். இதற்காக சில உதாரணங்களை இங்கு நோக்குவோம்.

உதாரணம் : எமது வீடு, உறவுமுறைப் பெயர்கள் என்பனவற்றைக் கற்பிக்க முற்படும் பொழுது பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. பழைய காலத்தைப்போல உறவுமுறைப் பெயர்களை சரியாக பிள்ளைகளுக்குப் பெற்றோர் சொல்லிக் கொடுப்பதில்லை. பொதுவாக அன்ரி, அங்கிள், (Aunty, Uncle) ஆகிய முறைகளே நடைமுறையில் உள்ளன. அத்துடன் கணவன் மனைவி ஆகியோர் தமது பெற்றோர்களை தாமே அப்பம்மா, அப்பப்பா முறைகளைக் கூறுவதும் பிள்ளைகள் கூறவேண்டிய அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி போன்ற முறைகளைத் தாமும் கூறுவதும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உறவு முறைகளைப் போதிப்பதில் கல்லில் நார் உரிக்க வேண்டி நிலையைத் தோற்றுவித்துள்ளன. இந்நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல வீட்டில் நடைபெறும் மங்கள, அமங்கள காரியங்களிலும் படப்பிடிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்னுக்குப் பின் முரணான காரியங்கள் சிலவற்றைச் செய்வதும் அவற்றின் உண்மையான நடைமுறைகளை விளக்குவதில் பெரும் இடர்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

உதாரணம் :

1. பூப்புனிதநீராட்டு விழாவில் மாமி, மச்சாள் முறை அற்றவர்களும் பாலறுகு வைத்தல்.

2. மங்கள காரியங்களுக்கு பெண்கள் தலைவிரிகோலமாகச் செல்லுதல்

3. ஆலயங்களுக்கு அநாகரிகமான ஆடைகளுடன் செல்லுதல் என்பன சிலவாகும்.

இவையாவற்றிலும் மேலாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோரிடையே கௌரவத்தைப் பாதுகாக்கும் பரீட்சையாக காணப்படுவது அந்த வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெரும் சுமையையே கொடுக்கின்றது. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டிகளில் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களே பரீட்சை வினாத்தாள்களில் பரிணமிக்கின்றன. ஆனால் தனிப்பட்ட நிறுவனங்கள் இப்பரீட்சையை ஒரு வியாபாரமாக்கி சந்தையில் விற்பனை செய்வதால் பெற்றோர் அதிகளவு பணம் கொடுத்து பயிற்சிப் புத்தகங்களையும் வினாத்தாள்களையும் வாங்கி அவற்றை பிள்ளைகளுக்குத் திணித்து அவர்களை அல்லற்படுத்துகின்றனர். வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்த விடயங்களைப் புரட்டிப்பார்த்து மனனம் செய்வதற்கோ அல்லது பயிற்சி செய்வதற்கோ பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. அடுக்கடுக்காக வினாத்தாள்களையும் பயிற்சிப்புத்தகங்களையும் வாங்கி அவற்றிற்கு மதிப்பளித்து அவற்றை தாமே வாசித்து விளக்கமும் அளிக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் வாசிக்கும் ஆற்றல் மந்தநிலைக்கு செல்கின்றது. ஈற்றில் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை வினாத்தாளை விரைவாக வாசிக்க முடியாத நிலையும், பரீட்சை தினத்தன்று வைத்தியசாலையில் வார்ட்டில் குளுக்கோஸ் ஏற்றப்படும் அவலமும், பரீட்சை எழுதும்பொழுது காய்ச்சலுடன் வாந்தி எடுத்து அரைகுறையாக பரீட்சை எழுதுவதை நிறுத்தி மேசையில் அரைமயக்கத்தில் படுப்பதுமாக பிள்ளைகள் படும் துன்பம் அப்பப்பா! சகிக்கமுடியாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வெறும் பொம்மைகளாக கருதக்கூடாது. புலமைப்பரிசிற் பரீட்சையை விசப்பரீட்சையாக மாற்றுபவர்கள் பெற்றோர்களே. புலமைப்பரிசிற்பரீட்சையை வைத்து பிள்ளையின் திறமையை எடைபோட முடியாது என்பதை அண்மையில் வெளியான க.பொத.(உ/த) பரீட்சை முடிவுகள் பறைசாற்றியுள்ளது. எனவே கற்றல் திறனானது தனியாள் வேறுபாடு பரம்பரை, சூழல், சகபாடிகள் போன்ற பல்வேறு காரணிகளினால் ஆளுக்கு ஆள் வேறுபடும் என்பதை எமது கற்றறிந்த சமூகம் நன்கு உணர வேண்டும். ஆரம்பக்கல்வி சுவையானது "கற்க கற்க கற்கண்டு போல தித்திக்கும்" இதனை கற்பிப்பவர்களை முறைப்படி கற்பிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

"அமுதசுரபி" என்பது அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகும். இதே போன்று ஆரம்பக்கல்விப் பிரிவைச் சேர்ந்த பிள்ளைகளிடத்தும் அள்ள

அள்ளக் குறையாத ஆற்றல்கள் பல உண்டு. அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு சமூகத்திலுள்ள நிறுவனங்கள் முன்வரவேண்டும். தமது பொழுதுபோக்கு, ஓய்வு என்பவற்றுக்கும். நாளாந்தம் நேரத்தை ஒதுக்க வேண்டும். நூலகம் சென்று நாள்தோறும் வாசிப்பதை ஆரம்ப வகுப்புக்களில் கற்கும் பிள்ளைகள் கைக்கொள்ள வேண்டும். விளையாட்டு மைதானத்தில் ஓடி ஆடி விளையாட வேண்டும். கல்வி நிலையங்களும் கணினிச்சாலைகளும் பிள்ளைகளை கல்விமான்களாக்கிவிடாது. எழுத்தாக்கம், சித்திரம், நாடகம், நடனம், சங்கீதம் போன்ற துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும். ஆலயங்கள், சனசமூகநிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் போன்றவை நடாத்தும் விழாக்களில் பிள்ளைகள் பார்வையாளர்களாகவும், பங்காளர்களாகவும் மாற வேண்டும்.

சுவையான ஆரம்பக்கல்வியை சுமையாக்காது சுவைத்துக் கற்க அனைவரும் கைகொடுத்து நாடு போற்றும் நல்ல சிறுவர்களை உருவாக்க வழிசமைப்போமாக.

“இன்றைய சிறார்களே நாட்டின் நாளைய நற்பிரசைகள் ஆவர்”

“நன்றி”


## மானிட விருத்தியில் சனசமூகநிலையம்

மானிடவிருத்தியின்
சனசமூகநிலையங்களின்
பங்களிப்பினை ஆராயும் முன்
சனசமூகநிலையம் என்னும்
சொற்றொடரின் பொருளினை
விளக்கிக்கொள்ளல் வேண்டும். இதில்
உள்ள மூன்று சொற்களில் சமூகம்
என்னும் சொல் மட்டுமே சற்று
பொருண்மயக்கம் தருவதாக உளது.
காரணம் எம்மொழியில் சமுகம்,
சமூகம் என சிறுவேறுபாட்டுடன் இரு
சொற்கள் வழக்கிலுள்ளன. எனது
அறிவுக்கு எட்டியவரை இவற்றின்
பொருள் விளங்க வசனம்
அமைப்பதாயின்

சமூகம் : தமிழ்ச் சமூகத்தில் நிலவும்
சாதிவேற்றுமை அநீதியானதும்
களையப்பட வேண்டியதும் ஆகும்
சமுகம் : பிரதேசசெயலர் சமூகத்தில்
குழுமோதல்களுக்கு இணக்கம்
காணப்பட்டது. ஆகவே

சமூகம் : மக்கள் கூட்டம்
சமுகம் : முன்னிலை

ஆயின் இதை
உறுதிசெய்ய அகராதியை
புரட்டியபோது
சமுகம் - கூட்டம், சந்ததி, முன்னிலை
எனவும்
சமூகம் - கூட்டம், சடை, முன்னிலை
எனவும் காணப்பட்டது.



திரு.செ.சிதம்பரநாதன்,
ஓய்வு நிலை அதிபர்.

சந்நதிக்கும் முன்னிலைக்கும் சிறுவேறுபாடே உள்ளது. சந்நதி தெய்வத்தின் முன்னிலை. முன்னிலை - மக்கள், தேவர், அஃறிணைப் பொருள்கள் யாவற்றிற்கும் பொதுவானது. ஆகவே சமூகம் - மக்கள் கூட்டத்தையும் சமுகம் - முன்னிலையையும் குறிக்கப்பயன்பட்டு காலப்போக்கில் வழுவமைதி ஆயிற்று எனக் கொள்ளலாம் போல் தென்படுகிறது.

ஆகவே சனசமூகநிலையம் என்பது மக்கள் ஒன்றுகூடும் நிலையம் எனப் பொருள் தருகிறது. மக்கள் ஒன்று கூடியதால் தோன்றிய மக்கள் ஒன்று கூடும் நிலையம் எனவும் விரிவுபடுத்திக் கூறலாம் என்பதை சனசமூக நிலையங்களின் வரலாற்றை ஆராயும் போது புலனாகும்.

### கூட்டுறவின் அடிப்படை ஒன்றுகூடல்.

ஒரு கிராம மக்களிற் சிலர் கோயில் மண்டபம், மரத்தடி, கடற்கரை போன்ற பொது இடங்களில் குறித்த நேரத்தில் ஒன்று கூடி பொழுதுபோக்காக அளவளாவுதல் இன்றும் எங்கும் காணக்கூடிய ஒரு நிகழ்வாகும். இது காலப்போக்கில் ஏற்படுத்தும். அன்பு செலுத்துதல், அன்பினைப் பெறல், அன்னியோன்னியம், பொது நலச் செயற்பாடுகள் முன்மொழிவு கூட்டுறவு ஒத்துழைப்பு என விரிந்து சென்று சனசமூக நிலையங்கள் நிறுவப்பட்டமை அவற்றின் வரலாறாகும். அரசின் திட்டமும் ஊக்கியாக செயற்பட்டது எனலாம். ஒன்று கூடி அளவளாவுதல் மனச்சாந்தியை ஏற்படுத்தும்.

### ஆக்கச் செயற்பாடுகளின் அடிப்படை கூட்டுறவு.

ஒன்றுகூடுதல் என்பது விலங்குகளின் உளவியற் தேவையாகும். மனிதகுல முன்னேற்றத்தில் வியத்தகு விளைவுகளை ஏற்படுத்தியது ஒன்று கூடுதல் மூலம் ஏற்பட்ட கூட்டுறவே ஆகும். இந்த ஒத்துழைப்பு தன்மையானது 400 கோடி வருடப் பரிணாம வளர்ச்சியைக் கட்டியெழுப்பியிருக்கும் கர்த்தா என்று ஹவாட் பல்கலைக்கழகத்தின் உயிரியற், கணிதத்துறைப் பேராசிரியர் மாட்டின் ரொபாக் உறுதிப்படக் கூறுகின்றார். அமைப்பொன்றை உயர்மட்டத்தற்கு முன்கொண்டு செல்வது இந்த ஒத்துழைப்பே என்றும் அவர் கூறியுள்ளார். விஞ்ஞானம், கலாசாரம், வர்த்தகம் என அனைத்து துறைகளிலும் வெற்றியடைய இந்த ஒத்துழைப்பே இதயமாக விளங்குகிறது என்றும் நிதி நெருக்கடி, காலநிலை மாற்றம், வளங்கள் பற்றாக்குறை தொடர்பான சர்வதேச ரீதியான சவால்கள் மட்டுமன்றி அன்பு, பராமரிப்பு, நட்புறவு, மரியாதை, நம்பிக்கை போன்ற உறவுகள் சம்பந்தமான விடயங்களிலும் ஒத்துழைப்பு மிக அவசியமாகத் தேவைப்படுகிறது என்று கூறிச்செல்லப்படுகிறது. சமூகங்கள் ஒப்பீட்டளவில் நீதியானவையாக பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதற்கு இக்கூட்டுறவு மனப்பான்மையான ஒத்துழைப்பே காரணம் என்பது மிகச் சாதாரணமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த கூட்டுறவு மனப்பான்மையான ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்புவதில் சனசமூக

நிலையங்கள் சிறந்த பங்கினை ஆற்றுகின்றன. ஆற்றமுடியும். எமது சனசமூக நிலைய உருவாக்கம் எமது கிராமமட்டத்தில் சிறந்த ஒரு உதாரணமாகும்.

### கல்வியின் சிறப்பு.

கூட்டுறவினைப்போலவே மனிதகுல விருத்தியில் கல்வி வளர்ச்சியும் உயர்ந்த பங்கினை ஆற்றியுள்ளது என்பது வெள்ளிடைமலை. மனிதனிடம் மறைந்துகிடக்கும் அறிவு, நுண்மதியின் ஆற்றல், நல்லியல்புகளை வெளிக்கொணர உதவுவது கல்வியே, கற்றல் நிகழ்வு கருவறையிலிருந்து கல்லறை வரை எந்நேரமும் எச்சூழலிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. நற்பிரசை உருவாக்கத்தில் கல்வியினைப்போல் வேறெதுவும் பங்களிப்பினை வழங்க முடியாது.

### கல்வி நிறுவனங்கள்.

கல்வியினை வழங்கும் நிறுவனங்களை இரு பிரதான பிரிவுகளாக வகுக்கலாம். ஒன்று விதிமுறைக்கல்வி நிறுவனம் அல்லது முறைசார் கல்வி நிறுவனம். மற்றது விதிமுறையற்ற கல்வி நிறுவனம் அல்லது முறைசாராக் கல்வி நிறுவனம்.

### விதிமுறைக்கல்வி நிறுவனங்களாவன.

1. பள்ளிக்கூடங்கள்
2. தொழில்நுட்பக் கல்லூரிகள்
3. பல்கலைக்கழகங்கள்
4. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

### விதிமுறையற்ற கல்வி நிறுவனங்களாவன

1. குடும்பம்
2. முன்பள்ளி
3. சனசமூகநிலையம்
4. கோயில்
5. கலை, பண்பாட்டு, விளையாட்டுக்கழகங்கள்
6. ஒத்த வயதினர் குழு
7. பல்வேறு கூட்டுறவு சங்கங்கள்
8. சேவாச்சிரமம் போன்ற தொண்டு நிறுவனங்கள், அனாதை விடுதிகள்
9. அரச சார்பற்ற நிறுவனங்கள்

இவற்றை விடத் தொடர்புச் சாதனங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

தொடர்புச் சாதனங்களான

1. கணினி ஊடாக வலைப்பின்னலமைப்பு
2. நூல்கள்
3. பத்திரிகைகள், சஞ்சிகைகள்
4. தொலைக்காட்சி
5. வானொலி
6. திரைப்படங்கள்

ஒரு பிள்ளை ஒரு நாளுக்கு காற்பங்கு நேரத்தையும் ஒரு வருடத்திற்கு சராசரி 180 நாட்களையும் வாழ்நாளில் 11 வருடங்களையும் மட்டுமே பள்ளிக்கூடத்தில் கற்றலில் கழிக்கின்றது. பள்ளிக்கூடம் முக்கியத்துவம் நிறைந்த நிறுவனம் என்பதோ கற்றல், கற்பித்தல் நேரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதோ இதன் பொருளல்ல. வாழ்நாளில் பெரும்பகுதி நேரத்தை சனசமூகநிலையம் போன்ற விதிமுறையற்ற கல்வி நிறுவனங்களில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் அறிவுத்திறன், மனப்பாங்கு, சமூக இயைபாக்கம் போன்றவற்றைப் பெறுகின்றது.

ஒரு சாதாரண குடும்பத்துப்பிள்ளை ஒன்று பள்ளிக்கூடத்திற் கற்றுத் திறமையான பாட அடைவு முதலியவற்றைப் பெறுகிறது என்றும் பள்ளிக்கூட நேரந்தவிர்ந்த ஏனைய நேரங்களில் வீட்டுக்கு வெளியிலான நடவடிக்கைகள் எதிலும் பங்கு கொள்ளாமல் வீட்டினுள்ளேயே கற்றலிலும் வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது என்றும் கொள்க. அப்பிள்ளை எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழ அவசியமான திறன்கள், அனுபவங்களை அடைந்திருக்குமா என வினவப்படின் சாத்தியக்கூறுகள் இல்லையென்றே எவரும் விடையளிப்பர். இது சனசமூக நிலையங்கள் போன்ற ஏனைய விதிமுறையற்ற கல்வி நிறுவனங்களின் பங்களிப்பினை வலியுறுத்துகின்றதன்றோ.

ஒரு சனசமூகநிலையம் வினைத்திறனுடன் இயங்குமாயின் அதன் விளைதிறன் அளப்பரியது. அவை வினைத்திறனுடன் இயங்கத் தன்னகத்தே பல்வேறு அலகுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். நூலகத்திற்கு மேலாக முன்பள்ளி, விளையாட்டுக்கழகம், கலை, பண்பாட்டுக்கழகம், மாணவர் தேர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களான சுவர்ப்பலகைச் சஞ்சிகை, கையெழுத்துச் சஞ்சிகை, கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம், முதலியவற்றை எழுதப்பல வழிகளில் ஊக்கமளித்து படைப்பாற்றலை வளர்ப்பதிலும் சபையிற் கூச்சமின்றி உரையாற்றும் திறனை விருத்தி செய்வதிலும் தொண்டாற்ற முடியும். சரஸ்வதி பூசைக்காலங்களில் பல்வேறு போட்டிகளை நடத்திப் பரிசளித்து ஊக்குவிக்கலாம். வசதி குறைந்த மாணவருக்கு இலவசமாகவும் ஏனையோருக்கு சிறு தொகை பெற்றும் கணினிக்கல்வி வழங்கி கற்றலில் விருப்புடன் ஈடுபட உதவலாம். தையற்பயிற்சி, கலைப்பொருட்கள் ஆக்கப்பயிற்சி, வாத்தியங்களை இசைக்கப் பழக்குதல் போன்றவற்றில் ஈடுபட்டு பயனுள்ள பொழுது போக்கிற்கு உதவலாம். விளையாட்டு, கலைத்துறைகளில், சிறந்த பயிற்சிகள் வழங்கி பயனுள்ள பொழுதுபோக்கிற்கு உதவலாம்.

சமூக இயைபாக்கம்

கல்வி நிறுவனம் ஊடாகக் கிடைக்கும் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி எவ்வளவு தூரம் எமக்கு அவசியமோ அதனையும் விடச் சமூகத்துடன் பொருந்தி ஒற்றுமையாக வாழப்பழகிக்கொள்ளல் மிக மிக அவசியம். இதனை சமூகமயமாதல் அல்லது சமூக இயைபாக்கம் என்பர். கல்வி எவ்வாறு கருவறையிலிருந்து தொடக்கம் பெறுகின்றதோ அவ்வாறே சமூகமயமாதலும் கருவறையில் ஆரம்பமாகின்றது. கருவில் பிள்ளை இருக்கும் போதே பிள்ளையின் நலன்பற்றித் தாய் கவனம் செலுத்தவேண்டும். குடும்ப அமைதியின்மை, உள நெருக்கடிகள் பிள்ளையின் மனநிலையைப் பாதித்து இயைபாக்கத்திற்கு இடையூறாகும்.

பச்சிளங் குழந்தைப் பருவத்தில் அன்பான அரவணைப்புடன் பசி தீரப்பால் கிடைத்தல், உடநலக் குறைவு எதுவுமின்றி நிம்மதியான உறக்கம், இடர்பாடுகள் ஏற்படாதிருக்கக் கழிவகற்றல், உடைமாற்றல், உடற்சுத்தம் போன்ற அடிப்படை தேவைகளுடன் அன்புத்தேவை, பாதுகாப்புணர்வுத் தேவை போன்ற உளவியற்தேவைகளையும் வழங்கும் அன்னை மீது ஈர்ப்பு ஏற்பட்டு அன்பு கொள்ளத் தொடங்குகிறது. இதன் மூலம் பிள்ளை அன்னை மீது அளவற்ற அன்பு கொள்ளத் தொடங்கும். இருவரும் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றனர். இதை அன்னை மயமாதல் எனலாம். படிப்படியாக பெற்றோர் மயமாதல், குடும்பமயமாதல், உறவினர் அயலவர் மயமாதல், வாசிப்பாற்றல் மயமாதல் என விரிவடைந்து சமூகமயமாதல், இனமயமாதல் என பரந்து விரிவடையும்.

அடிப்படைத் தேவைகளையும் உளவியற் தேவைகளையும் சரிவரவழங்காத பெற்றோரின் பிள்ளை முரண்படத்தொடங்கும். அதுவும் வசதிகளிலிருந்தும் கருமித்தனம், குடிப்பழக்கம், ஊதாரித்தனம், பெற்றோரிடையே சச்சரவுகள், பிரிவுகள் போன்றவற்றால் பாதிக்கப்படும் அத்தகைய பிள்ளைகள் திருடுதல், வன்செயல்களில் ஈடுபடல், கீழ்ப்படியாமை எனப் பெற்றோரை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கும். இது இப்படியாக வளர்ந்து சமூகவிரோத நடவடிக்கைகளாக விரிவடையும்.

வகுப்பறை மயமாதல்

இத்தேவைகள் சரிவர கிடைக்கும் பிள்ளை உடல்நலத்துடனும் இருக்குமாயின் பள்ளிக்கற்றலிலும் மகிழ்ச்சியுடன் ஈடுபடத்தொடங்கும். உடன் கற்கும் மாணவர்கள், ஒத்த வயதினர் என்பவருடன் நட்புறவாகப் பழகிப் பல்வேறு செயல்முறைகளில் ஈடுபட்டுக் கல்வி வளர்ச்சியிலும், ஒழுக்கம் கட்டுப்பாடுகளிலும் உகந்த பிள்ளையாகும். கலை பண்பாட்டு, விளையாட்டுத் துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபடும் பிள்ளைகள் பயனுள்ள பொழுதுபோக்குகள், இங்கிதமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பனவாக விருத்தி பெறும்.

சனசமூகநிலையங்கள் உகந்த பங்களிப்பினை வழங்கி நற்பிரசை உருவாக்கத்திற்கு உதவமுடியும்.

சமூக இயைபாக்கம் சரிவர நடைபெறாத பிள்ளைகளே குடிப்பழக்கம், குற்றச்செயல்களில் ஈடுபட்டுச் சிறுவர் சீர்திருத்தபாடசாலை, சிறை செல்பவர்களாக இருப்பர். குடும்ப வாழ்விலும் முரண்பாடுகளின்றி வாழ முடியாதவர்களாகி தமக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் உதவாதவர்களாக மாறுவர். ஆகவேதான் பாரதியார்

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல் "

என்றும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும் போது சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்றும் கூறிப்போந்தனர்.

**சுயநலம் சமூகமயமாதலுக்கு இடையூறு**

சமூக மயமாதல் சரிவர நடைபெறாமைக்கு இயல்பாகவே எம்மிடமுள்ள சுயநலமும், கோபம், பொறாமை போன்ற எதிர்மறை உணர்வுகளும் அடிப்படை காரணமாகும். சண்டை சச்சரவுகளும் குழப்பங்களும் உலகில் மலிந்து செல்வதற்கு மனிதனிடம் இயல்பாக உள்ளதும் தவறான வழக்கமுமான சுயநலமே முக்கிய காரணமெனவும் சுயநலத்தை விட்டொழித்து பொது நலத்தை சிந்தையில் இருத்திச் செயற்பாட்டால் போட்டி, பொறாமை உணர்வுகள் இல்லாத அமைதிப்பூங்காவாக உலகம் விளங்குமென மெய்ஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆயினும் பரிணாம வளர்ச்சி, விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரத்துறை சார்ந்த அடம்ஸ்மித், தோமஸ் றொப்பெஸ், மில்டன் பிறைட்மன், ரிச்சர்ட் டாகின்ஸ் போன்ற அறிவியலாளர்கள் சுயநலமானது மனிதனுடன் ஒட்டிப்பிறந்த குறைபாடுடைய வழக்கமுறைமை என்ற வாதத்தை உறுதியுடன் முன்வைத்துள்ளனர். விதிமுறைகள், சட்டங்கள், அரசாங்கத்தின் வரிமுறைகள், தடைகள் என்பன இல்லாவிடின் சகலவற்றிற்கும் சகல வேளைகளிலும் நாங்கள் சண்டையிட்டுக் கொண்டே இருப்போம் என்று கூறுகின்றனர். சுயநலவாதிகளாகவே நாம் பிறந்தோம், பொருளாதார தேவைகளுக்கான நடவடிக்கைகளுக்காக எம்மை ஏவிவிடுவதும் சுயநலமே என்பது இவர்கள் கற்றுத்தந்த பாடம். ஆயினும் மனிதர்கள் விலங்குகளைப் போன்று வாழ்க்கை நடத்திய முற்காலம் தொட்டு இக்காலம் வரை கூட்டுறவே முன்னிலை வகித்து வருகின்றது எனக் கலிபோர்னியா மானிடவியற் துணைப் பேராசிரியரான சாராபிளவர் என்பவர் கூறுகின்றார். லெய்செக்கில் உள்ள மானிடவியல் பரிணாம வளர்ச்சிக்கான மாக்ஸ்பிளாங் நிறுவனத்தின் இணைப்பாளர் மைக்கேல்றோமாசெல்லோ என்பர் குழந்தைகளின் பொதுநலப்பண்பை ஆய்வு செய்வதில் பெருமளவு நேரத்தை செலவிட்டவர். தாங்கள் முன்னர் சந்தித்திராத ஆட்களுடன் கூட ஒத்துழைத்துச் செயற்படுவதற்குச் குழந்தைகள் விருப்பம்

கொண்டிருப்பதைக் கண்டறிந்துள்ளார். பொம்மைகள், உணவு போன்றவற்றை பகிர்ந்து கொள்ளும் தன்மை குழந்தைகளிடம் காணப்பட்டது. வெளியாருக்குக் கூட விடயங்களைத் தெரிவிப்பது குறித்தும் உதவியாக இருப்பதற்குமான விருப்பத்தைக் கொண்டிருப்பது ஆய்வின் மூலம் தெரியவந்தது என்கின்றார். உண்மையென்னவெனின் மகிழ்ச்சி, இரக்கம் போன்ற நேர்மறையான உணர்வுகளும் கோபம், பொறாமை போன்ற எதிர்மறை உணர்வுகளும் எம்மிடம் இருப்பது போல் எம்மிடம் பொதுநலம், சுயநலம் இரண்டும் கலந்தே உள்ளது. அவரவரவர் பின்னணியைப் பொறுத்தே இரண்டில் ஒரு உணர்வு முன்னிலை வகிக்கும். சில குடும்பங்களில் அனைவரும் சுயநலமே உருவாக இருப்பதைக் காணும்போது இது உறுதியாகின்றது. சரியான பின்னணியில் வாழும் போது சுயநலம் குறைந்து பொதுநலம் வளரும். சனசமூக நிலையங்கள் இதில் நல்லதொரு பங்களிப்பினை வழங்க முடியும்.

இழப்பதற்கு உயிரினைத்தவிர வேறொன்றுமில்லை என்ற நிலையில் நல்ல வசதிகளுடன் வாழ்ந்த நம்மவர்கள் அடைந்து இன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் பிள்ளைகளை கல்வி பெற வைக்கவும் முடியாது வாழும் போது மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை உணராமல் விழாக்காலங்களில் சாமி தூக்கவும் போதிய ஆள்கள் இல்லாது, அன்றாடம் ஒரு சிறு தொகை வழிபடுவோரே வரும் கோயில்களின் உள் வீதிகள் முழுவதும் காற்றோட்டமின்றி மண்டபங்களாகின்றனர். அளவற்ற கோபுரங்களைக் கட்டுகின்றனர். வெளி வீதிகள் தாரிடப்படுகின்றன. இவற்றை விடுத்து உள் வீதிகளில் பூசைக்கு உதவும் பூமரங்களை நாட்டி வளர்க்கலாம். வெளி வீதிகளில் நிழல் தரும் மரங்களை நாட்டலாம். காபனீரொட்சைட்டை அதிகளவில் உள்ளெடுக்கும் ஒருவகை மூங்கில் உள்ளது என்றும் கூறப்படுகின்றது இதன் மூலம் புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்தி கோயிலுக்கு வரும்போதே குளிர்ச்சியான சூழலை அனுபவிப்பதால் மகிழ்ச்சியுடன் வழிபடவும் உதவி செய்யலாம். மனிதனுக்கு இலஞ்சம் கொடுத்துக் காரியங்களை சாதிப்பது போல் இறைவனுக்கும் செலவு செய்து தமது பாவங்களை நீக்கி வரசித்திகள் பெறலாம் என அநீதிகளையும் அயோக்கியத்தனங்களையும் செய்யும் சிலர் நடந்து கொள்வதற்குச் சமூகமயமாதல் சரிவர நடக்காமையே காரணம் எனலாம்.

சனசமூக நிலையங்களில் பொதுக்கூட்டங்கள், செயற்குழு கூட்டங்கள், விழாக்கள் நடத்தப்படும் போது சபையிற் கூச்சமின்றி கதைக்கும் உரையாற்றும் திறன் விருத்தி ஏற்படுகிறது. இங்ஙனம் நெருங்கிப் பழகும் போது சந்ததி இடைவெளி குறைகிறது. சமத்துவம், சமாதானம் வளரும், சாதிவேற்றுமையும் குறைவடையும். தமது முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படாத போதும் அதை சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொண்டு பெரும்பான்மையினரின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் சனநாயகப் பண்பும் வளரும்.

சனசமூக நிலையங்களில் விழாக்கள் நடத்தும் போது பெரியோர்களை வரவேற்றல், அவர்களைச் சரிவர உபசரித்தல், அவர்கள் கூறுவனவற்றைச் செவிமடுத்தல், போன்ற நற்பண்புகள் வளர்கின்றன. தலைமை தாங்கிக் காரியங்களை நடத்தும் ஆளுமை விருத்தி ஏற்படுகிறது. கலைநிகழ்ச்சிகளை நடத்துவதால் இசை, நடிப்பு, ஒப்பனை, மேடை நிர்வாகம், நாடகங்களை இயக்கும் திறன், அறிவிக்கும் திறன் என்பன விருத்தி பெறுகின்றன. பெரியவர்கள் நிதி ஏற்பாடு, ஆலோசனை கூறல், மேற்பார்வை என தமது பங்களிப்பினை கட்டுப்படுத்தி இளைய சமூகத்தினரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து அவர்களின் திறன்களை விருத்தி செய்யலாம்.


பொதுத் தொண்டில் ஆர்வமுடையோர், அவற்றில் ஈடுபடவும் மேலும் பலருக்கு அப்பழக்கத்தை ஏற்படுத்துவதிலும் இவை பங்களிப்பு செய்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக காரியங்களைச் சாதிக்கும் போது ஆத்மதிருப்தி ஏற்படுகின்றது.

"நன்றி"

## கிராம அபிவிருத்தியும் அதில்நூலகத்தின் பங்கும்.

எமது நாட்டில் அமைந்துள்ள மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமம் ஆகும். இக்கிராமம் பொருளாதாரத்துறையில் மட்டுமன்றி சமூக, கலாசார, மனிதப்பண்பாட்டியல் துறைகளிலும் எய்தும் வளர்ச்சி அபிவிருத்தி எனலாம். கிராம அபிவிருத்திக்கும் கிராமத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையமானது பெரிதும் துணைபுரியும். இதனை மனதில் கொண்ட எமது கிராமத்தைச் சேர்ந்த சான்றோர் தும்பளை மேற்கு சனசமூகநிலையம் என்ற பெயரில் உள்ளடங்கிய செயற்பாடுகளில் ஒன்றாக நூலகம் ஒன்றினை இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னர் எமது கிராமத்தில் ஏற்படுத்தினர். ஆன்மீக சூழலில் அமைந்த இந்நிலையம் கிராமத்தவர்களிடையே ஆன்மீகத்தோடு அறிவை வளர்ப்பதனையும் நோக்கமாக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

வாசிப்பில் இன்பம் காணும் வாசகர்களும், அறிவை வாசிப்பின் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கும் வேண்டிய தகவல்களைக் கொடுத்துத் தகவலை தெளிவுபடுத்தும் மையம் நூல்நிலையமாகும்.



திரு.S.P.விவேகானந்தன்.
தும்பளை மேற்கு

மேலும் வாசிப்புக்குத் தகுந்த வெளியீடுகளை நேரடியாக கையாள உதவும் நிர்வாகக்கட்டமைப்பு பொதுவாக நூல்நிலையம் என அழைக்கப்படும். வாசிப்பு அரைமனிதனாக இருந்த ஒரு மனிதனை முழுமனிதனாக உயர்த்துகின்றது. அதனால்தான் போலும் "தாமஸ் கார்லைல்" என்பவர் "நல்லதொரு நூல்நிலையம் சிறந்ததோர் பல்கலைக்கழகம்" என்றார். தனிமனிதனது ஆளுமை விருத்திச் செயற்பாட்டிற்கு உதவும் நூல்நிலையமானது, பல்வேறுபட்ட நூல்களையும் சஞ்சிகைகளையும் ஒரே இடத்தில் வைத்துப் பேணி மக்களது ஆளுமை விருத்திக்குச் சேவைபுரியும் ஓர் உன்னத நிறுவனமாகக் காணப்படுகின்றது.

இன்று உலகம் பூகோளமயமாதலுக்கு (உலகமயமாதல்) உட்பட்டுள்ளது. "அறிவு மிக வேகமாக பரவி" வருகின்றது. செய்தித்தொடர்புகளும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. புத்தகங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், ஏடுகள் போன்றன பல்கிப்பெருகிவருகின்றன. தொலைக்காட்சி, ஒலி, ஒளி பரப்புச் சேவை, தொலைபேசிச்சேவை போன்றன தொலைதூரத்தில் உள்ள மக்களோடு எங்களைத் தொடர்புபடுத்தி விடுகின்றது. மேற்கத்தேய நாடுகளில் துரிதமாக வளர்ச்சி பெற்றுவரும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தை ஒவ்வொரு மனிதனும் உடனுக்குடன் அறிந்து தனது அறிவை விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு சிறந்ததொரு நூலகம் அவசியமானதாகும்.

"நூல்நிலையம் ஒருவரின் கற்பனாசக்தியை விரிவடையச் செய்வதோடு உணர்ச்சிகளையும் பண்படுத்தி மனதை நெறிப்படுத்துகின்றது. நூல்கள் மக்களின் அறிவை வளப்படுத்தி தார்மீகத்துறையிலும் அறிவியற்துறையிலும் தீர்வுகளைப்பெற உதவுகின்றன" என 'றிச்சாட் பெம்பேக்கர்' என்ற அறிஞர் நூல்நிலையம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே ஒரு சமூகத்திற்கு நூலக சேவை அவசியமானதொன்றாகும்.

ஒரு நூலகமானது, சமூகத்தில் வெறும் நூலகமாக மட்டும் செயற்படாமல் பலவேறு பரிமாணங்களைப் பெற்றதாக உள்ளது. இதன்படி ஒரு நூலகமானது சமூகத்தில் கலாசார, அரசியல், கல்வி, தகவல் மையங்களாக செயற்படுகின்றன. இவற்றில் மனிதசமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கு இவை வழங்கும் பாரிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக குறைந்த கட்டணத்தில் அல்லது கட்டணம் இல்லாமலே தகவற்சேவையை இவை வழங்குகின்றன. அத்துடன் இவை நூலகத்தில் உள்ள அனைத்து ஆவணங்களையும் பாவனைக்கு வழங்கவேண்டும் என்பதைத் தமது சித்தாந்தமாக கொண்டு இயங்குகின்றன. இதற்காக நூலகங்கள் பொருத்தமான ஆவணங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி பாவனைக்கு வழங்குகின்றன. இத்தகைய தன்மையினால் நூலகமும் அவை அமைந்துள்ள சமூகமும் ஒன்றில் இருந்து ஒன்று விடுபட முடியாத இணைப்பைப் பெற்றுக்கொண்டு இரண்டுமே வளர்ச்சியடைகின்றன.

'யுனெஸ்கோ' அமைப்பின் கருத்துப்படி நூலகங்கள் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டு இலவசமாகவோ அல்லது சந்தா அடிப்படையிலோ சிறுதொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நூலக சேவை செய்யும் நோக்கில் அமைக்கப்படுகின்றன.

நூலகங்கள் சாதி, இன, மத பேதமின்றி எல்லோருக்கும் சேவை புரிகின்றன. மக்களிடையே முன்னேற்றத்திற்குத் துணைசெய்யும் நூலகங்கள் மக்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவு செய்ய உதவிபுரிகின்றன. இவை நூலகத்திற்குள்ளே மாத்திரமன்றி நூலகத்திற்கு வெளியேயும் நூலகவிரிவாக்க சேவைகளை ஒழுங்கு செய்வதன் மூலம் சமூகத்தை ஒன்றிணைக்கின்றன.

தற்போது ஆவணங்களின் விரிவான பெருக்கமும் அதிகரித்த விலையும் புதிதாக உருவாகி வருகின்ற சிறப்பாய்வுத்துறைகள் என்பன இன்றைய தகவல்யுகத்தை ஆக்கிரமித்துள்ளன. வாசகர் அனைத்து ஆவணங்களையும் தாமே வாங்கிப் பயன்படுத்திக் கொள்வது பணச்செலவு மிக்க விடயமாக உள்ளது. இதனால் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது.

தரமான ஆவணங்களைக் குறைந்த விலையில் தெரிவு செய்வதும் நூலகக்கூட்டுறவின் மூலம் சிக்கன அடிப்படையில் சமூகத்திற்கு அறிவுச்சேவை செய்கின்றன. அத்துடன் உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் தகவல் வலையமைப்புக்களை ஏற்படுத்திக் குறைந்த விலையில் கூடியளவு தகவற்சேவையை நூலகங்கள் வழங்குகின்றன. இது சமூகத்திற்கு பெரும் கொடையாக அமைகின்றது. நூல்நிலையத்தை எம் கண்ணே போல் பாதுகாத்து வளர்த்தெடுத்தல் சமூகத்தவர் ஒவ்வொருவரினதும் கடனாகும்.

"நன்றி"

# எமது சமூகமும் உலகமயமாதலும்

உலகமயமாதல் என்பது மாறிவருகின்ற உலகிற்கு எங்களை மாற்றி அமைத்துக்கொள்வதாகும். அதாவது நாளுக்கு நாள் உலகின் அபிவிருத்தியும் நவீன கண்டுபிடிப்புக்களும் உயர்ந்து கொண்டே போகின்றன. இதற்கு ஈடுகொடுத்து தோல்வியின்றி வாழ்தலே உலக மயமாக்கலில் ஈடுபடல் எனப்பொருள்படும்.

இப்பூகோள மயமாதலினை உடனடியாக எம்மால் ஈடுகொடுத்தல் என்பது எதிர்கொள்ள முடியாத ஓர் பாரிய சவாலாகும். பொதுவாக மனித மனங்கள் மாற்றத்தை விரும்புவதில்லை. தமது சௌகரியங்களுக்கு பங்கம் விளைவிக்குமாயின் பூரண மறுப்பு தெரிவிப்பதென்பது கண்கூடான காரியம். எனினும் சிலர் கலாசார சூழலுக்கும் தொழில்நுட்ப உலகுக்கும் ஈடுகொடுத்து நுழைய முற்படுவதை காணமுடிகிறது. இவர்கள் இவ்வாறான நவீன சமூகத்தோடு ஒன்றிப்போகும் தன்மை உள்ளவர்கள் எனலாம்.

இவ்வகையில் எமது தும்பளை மேற்கு சமூகமும் பூகோளமயமாதல் செயற்பாடுகளில் ஈடுகொடுக்க முனைவதை காணமுடிகிறது.



திரு.மு.காண்டீபன்
(ஆசிரியர்)

இதற்கு எடுத்துக்காட்டாக கையடக்கத்தொலைபேசி பாவிக்காதவர் எவரும் இல்லை என்றே கூறலாம். மேலும் இணையத்தில் தன்னை இணைக்காத இளைஞர்கள் காணமுடியவில்லை. இவ்வகையில் இளைஞர்கள் பூகோளமாதலில் வாசற்படியிலுள் சென்றுள்ளனர் எனலாம். இனிவரும் காலங்களில் இந்நிலையத்தினூடாக "யாவருக்கும் இணையம்" என்ற தொனிப்பொருளில் அறிவூட்டற் செயற்பாடு மேற்கொள்வார்கள் என தெரிவித்துள்ளனர். இதற்கு எமது உடன்பிறப்புக்கள் அறிவூட்டும் ஆசான்களாக முன்வரவுள்ளனர் எனும் செய்தி எமது சமூகத்தை பூலோகமயமாக்களில் உட்படுத்துவதை காட்டும்.

இவ்வகையில் இணையமும் கணினியும் மட்டுமே உலகமயமாதல் செயற்பாடு என்றில்லை. எதிர்கால வேலை உலகுக்கு தயார்ப்படுத்த வேண்டிய நிலையயும் உள்ளது. இதற்காக எம் இளம்சமூகத்திற்கு நவீன தொழில்நுட்பக் கல்வி வழங்கி இவர்களை இதற்கு ஈடுகொடுக்க வைத்தலும் ஆகும். இதற்காக தொழில் நுட்பக்கற்கை நெறியில் அதிகம் ஆர்வம் காட்டும் வகையில் வழியமைத்துக் கொடுக்க வேண்டியது. பெற்றோரின் கடமையாகும்.

மேலும் ஒவ்வொரு சமூகமும் கல்வி, கலை, விளையாட்டு, தொழில்நுட்பவேலையும் என்ற பகுதியில் தம்மை தயார்படுத்திக்கொள்வதன் மூலம் உலக சவால்களை ஈடுகொடுத்து நிமிர்ந்து நிற்க முடியும். இக்காலத்தில் தும்பளை மேற்கு சமூகம் தனது மூடிய கண்களை திறந்துள்ளது. இதற்கு நாட்டுச் சூழல்கூட ஒரு காரணமாக அமையலாம் போல் தெரிகிறது. இவ்வகையில் கல்வி என்பது முங்காலங்களில் எழும் எழுத்தாணியுமே ஆகும். ஆனால் தற்காலத்தில் முற்றுமுழுதாக தூக்கிவீசாமல் ஒரு புறமாக வைத்து நவீனயுக கணினியும், இணையமும் என்ற கல்வியே காணப்படுகின்றது. இதற்கு எம் எதிர்காலத் தலைமுறைகள் முதற் பாதச்சுவட்டினை பதிற்துள்ளனர் எனலாம். இவ் இணையக்கல்வியுடன் இணைந்த எம் வீடு தேடி எத்தனையோ பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் வீடு தேடி வந்ததைக்காணமுடிகிறது. இதற்கு பதிவுகள் முதல் கற்கைகளுடாக பெறுபேறுகள் வரை வீட்டிலிருந்தவாறே மேற்கொள் முடியும். இது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தம் கண்காணிப்பிலே கற்பிக்கமுடியும். இதற்கு மேலாக கணினியும் வீட்டுக்கொன்று என்ற நிலையில் எம்கிராமத்தில் உள்ளது. இது முன்னர் துவிச்சக்கரவண்டிகள் இந்நிலையில் இருந்ததை நினைவுபடுத்தலாம். இவ்வண்டியின் திருத்தங்களையும் இணைப்புக்களையும் பலர் தாங்களே செய்து வந்தனை அறிய முடிகிறது. இதே போல் கணினியில் கோலாறுகளை நாங்களே திருத்தவேண்டிய நிலை உருவாக வேண்டும். கணினி, இணையம் என்பது ஒரு சடப்பொருளாகும். இதற்கு நாம் வழங்கும் கட்டளைப்படியே செயற்படும். இச் சடப்பொருளுக்கு மென்பொருட்கள் மூலம் கட்டளையிடல் பிரதான செயற்பாடாகும். இவ் மென்பொருள் கற்கை நெறியினை ஆக்குதல் என்பது உலகத்தினை உள்ளங்கையினுள் கொண்டுவர முடியும். இதற்கான செயற்பாடுகளை தூண்டும் வகையில் எம் சமூக இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கி அறிவூட்டுவோம். இதற்காக எம் சனசமூகநிலையம் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் கலையானது முற்காலத்தில் எமது சமூகத்தில் முற்காலத்தில் சிறப்பாக அரங்கேறியதை அறியலாம். இதில் நாடகங்கள், வில்லிசைகள் மற்றும் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. எனினும் நவீன உபகரணங்களை பயன்படுத்தப்பட்டதாக அறிய முடியவில்லை. ஏனெனில் அக்காலத்தில் உள்ள சமூக அமைப்பு முறைகளே காரணமாகும். ஆனால் தற்காலத்தில் எம்முடன் நெருங்கி வந்துள்ளதை காணமுகிறது. எனவே இனிவரும் காலங்களில் எம் சனசமூகநிலைய கலைவிழாக்களில் இவ் நவீன உபகரணங்களான விசைப்பலகை (Organ), பல தட்டு மேளம் (Drums), நரம்புக்கருவிகள் (Kittar) போன்ற பலவற்றை இணைத்து எம் சமூகத்துக் கைகளின் இயக்கத்திலேயே கச்சேரிகள் அமைக்கப்பட்டால் எம் சமூக கலை உலகமயமாக்கலை நோக்கிச் செல்லமுடியும். இதுமட்டுமல்ல இக்கலைநிகழ்வுகளை கணினியுடன் இணைத்து செயற்படுத்துதல், வர்ண விளக்குகளால் அலங்கரித்தல் மற்றும் பல தொழில்நுட்பங்களை உட்புகுத்தி அரங்கத்தை ஆக்குதல் ஓர் எதிர்கால உலகிற்கு ஒப்புறவான எதிர்கால கலை நிலைக்கு இட்டுச்செல்லுதல் ஆகும்.

மேலும் விளையாட்டு நிகழ்வுக்கு தும்பளை மேற்கு சமூகம் விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தை அமைத்து செயற்பட்டு வருவதை காணமுடிகிறது. முற்காலத்தில் தனியாரின் சிறிய காணிகளிலும் ஸ்ரீவரத விநாயக முன்றலிலும் பயிற்சியில் ஈடுபட்டதை காணமுகின்றது. எனினும் உலகமயமாதலின் காரணிகளின் செயற்பாட்டால் மைதானம் நாடி விளையாடி வருவதைக் காணமுகிறது. இது ஒரு உலகமயமாக்கல் காரணியின் செல்வாக்கே எனலாம். மேலும் 1990 களுக்கு முன்னர் கிராமிய நட்புறவுப் போட்டிகளையே காணமுடிந்தது. எனினும் தற்காலத்தில் சர்வதேசத்தைத் தழுவிய பாணியிலே சுற்றுப் போட்டிகளையும் விழாக்களையும் நடாத்திவருகின்றனர். மேலும் இங்கு நடைபெறும் கழக கீதம் இசைத்தல் என்பது இப்பிரதேசத்தில் எங்கும் நடைபெறாத விடயமாகும். இது எம் சமூகம் உலகமயமாதலின் உச்சத்தில் உள்ளதை அறிய முடிகிறது. இவ்வகையில் மேற்குறிப்பிட்டது போல் இளைஞர்கள் இவ் பூலோக மயமாக்கலுக்கு ஈடுகொடுக்கின்றனர் என்பது தெளிவு. எனினும் இவ் உலகமயமாக்கலின் விளையாட்டினூடாக அடைய வேண்டிய பல செயற்பாடுகள் உள்ளன. எனவே இவ் விளையாட்டையும் மேலும் உலகமயமாக்கலுக்கு இட்டுச்செல்ல வழியமைக்கும் பொறுப்பு எம் சமூகத்திடமே உள்ளது. இதனூடாக எம் கிராம எதிர்காலத்தலைவர்களை வளர்த்திட முடியும்.

மேலும் தொழில்நுட்பமும் வேலைவாய்ப்பும் என நோக்கும் இடத்து இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததே ஆகும். இவ்வகையில் மனித முயற்சியாலேயே எம்மவர்கள் உழைத்து வந்தனர். ஏனெனில் இக்காலத்துக்கு முன்னர் தொழில்நுட்ப யுகத்தின் வேகம் குறைவாகவே இருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக எமது சனசமூகநிலைய தள்ளுவண்டி, குழாய்க்கிணறு அமைக்கும் கம்பி வாடகைக்கு வழங்கி வந்ததைக் காணமுடிந்தது. எனினும்

தற்காலத்தில் தள்ளுவண்டி வழக்கொழிந்தது. குழாய்கிணறு அமைக்கும் இயந்திரம் எம் ஊரில் உலாவி வருவதை காணமுடிகிறது. மேலும் பொறியியல், மருத்துவம், மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகள் தொழில்நுட்பத்தையே நம்பி நிற்கின்றது. எனவே இவற்றை வழிநடத்த தொழில்நுட்ப உபகரணங்களை வடிவமைத்தல், திருத்துதல் போன்ற தொழில்நுட்பத்தை வழங்குவதனூடாக இவற்றை எல்லாம் கையகப்படுத்திக் கொள்ளுதல் ஆகும். எனவே எம் சமூக எதிர்கால தலைமுறைகள் தொழில்நுட்ப கற்கைகளிலும் செயற்பாடுகளிலும் அதிக அக்கறை காட்டுவதன் மூலம் வேலை உலகிற்கு தயாராகுதல் என்ற சவாலை வெற்றி கொள்ள முடியும். அத்துடன் புதியன புனைதல் எனும் கருப்பொருள் சிந்தனை எம் இளஞ்சமூகம் தேடவேண்டும். இவ்வகையில் எமது பிரதேச மலிவான வளங்களை புதிய தொழில்நுட்பத்தினூடாக உலக தரத்திற்கு ஆக்கமுடியும் என்று எண்ணி செயற்பட வேண்டும்.

என்னால் எம்பிரதேசவளம் என்று குறிப்பிடுவது பனைவளம், முருங்கைக்காய், புளியமரம் மற்றும் சில இலகுவாக பெறக்கூடிய தாவரங்கள் மற்றும் பிற ஆகும். இவற்றிலிருந்து எத்தனையோ இரசாயன கலவைகள் ஆக்கவேண்டும். என்று சிந்தித்தல் மற்றும் பாவனையிலிருந்து முன்னர் தொப்பி, பனாட்டு, வீடுமேய்தல், கிழங்கு, ஒடியல், கூரையமைப்பு, பனங்கட்டி போன்றவற்றை பிரதானமாக பெற்றனர். எனினும் இவற்றுக்கப்பால் நவீன தொழில்நுட்பத்தை உட்படுத்தி ஆக்கமுடியும் என்று எம் எதிர்கால தலைமுறைகள் சிந்திக்க வேண்டும். எந்தவொரு விஞ்ஞானியும் அத்துறையில் நான் கண்டுபிடிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று செயற்படுவதில்லை. துறைசார்பான ஆர்வத்தின் காரணமாக மூழ்கும் போதுதான் அவர் ஞானத்திற்கு கிடைக்கும் புதைபொருள் அதுதான் அவரின் கண்டுபிடிப்பு ஆகும். அதுமட்டுமல்ல இவருக்கு அடிப்படை வசதிகள் அற்றநிலையில் கூட பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளதை நாம் அறிவோம். எனவே எம் இளஞ்சமூகத்திற்கு இதனை நினைவூட்ட விரும்புகின்றேன். இவ்வகையில் வெளிவரும் புத்தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியும் என்று மட்டும் எண்ணாது எமது சிந்தனை எண்ணமும் சிறிய ஆக்கம் என்ற உலகமயமாதலில் உட்புக வேண்டும்.

உலகமயமாதலில் முனைப்புடன் ஈடுபடுவார்கள் என்ற திண்ணம். இவைகள் அனைத்தும் சரியான பாதைதான் என்று பெரியோர் அவதானித்து தடைப்படுத்தாது. பொருத்தமற்றுக் காணப்படும் பாதைகளிற்கு மாற்றுப்பாதையமைத்து ஆக்கபூர்வமான சிந்தனை வழங்கி எமது எதிர்கால உலகில் ஈடுகொடுக்கக்கூடிய நற்பிரசைகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம் தும்பளை மேற்கு சனசமூகம் மட்டுமன்றி ஒவ்வொரு குடிமகனும் திறனுள்ள பிரசையாக மாறலாம். மேற்குறித்த துறைகள் எல்லாம் நெறிப்படுத்த எம் ஊர் பெரியோர்களும், புலம்பெயர்ந்த உறவுகள் மற்றும் அனைவரும் ஒன்றுபட்டு எம் சமூகத்து புரட்சிகரமான புத்தாக்கங்களுக்கு உதவ வேண்டும். இதன் மூலம் அனைத்து வழியிலும் எம்சமூகம் உலகமயமாதல் சவாலை சாதாரண மாற்றம் என்று என்னக்கூடியவாறு அமைக்க வேண்டும். இவ்வகை

எண்ணம் ஒவ்வொரு எம் சமூக பிரசைக்கும் ஏற்படுமாயிற் எம் சமூகம் ஒளிமயமாகும் என்பது ஆணித்தரம். எனவே இவற்றையெல்லாம் வெற்றிகொள்வோம். "சொர்க்கமே என்றாலும் எம்மூரைப் போல வருமா" என்ற பாடல் வரியினை ஞாபகமூட்டி சொர்க்கத்தைவிட எமது கிராமமே சிறந்தாக்குவோம் வாரீர், வாரீர்.

"நன்றி"

## பின்நவீனத்துவ சூழலில் வாசிப்பு தொடர்பான கருத்தாடல்

வாசிப்பு மனிதனைப் பூரணமனிதனாக்குகிறது என்னும் கூற்று பாடசாலை முதல் உரையரங்குகள் வரை வாய்பாடாக கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அவை இப்பொருளின் உள்ளார்ந்த ஆற்றலினையும் முக்கியத்துவத்தினையும் வெளிக்கொணரத் தவறிவிடுகின்றன. அதன் வெளிப்பாடாகவே வாசிப்பு பற்றிய மேல் நோக்கான பார்வை மலிந்து விட்டதனையும் சமுதாய முரண்பாடுகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் விலகி நிற்க முனைகின்ற அம்சமாகவே வாசிப்பு அமைந்துள்ளதை காணலாம்.

இவ்வாறானதோர் சூழலில் வாசிப்புப் பற்றி சிந்திக்கின்ற போது நெல்லுக்குள் அரிசி என்கின்ற பரம இரகசியத்தை கூறுவது போலத்தோன்றும். ஆனால் இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆழமாக நோக்குகின்ற போது பல புதிய விடயங்களையும் உண்மைகளையும் கண்டறியலாம்.

திரு.லெனின் மதிவானம்.

விஞ்ஞான பூர்வமான சிந்தனை என்பது சர்வசாதாரண விடயங்களைக் கூட மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு இது தெரிந்தவிடயம் தானே என முடிவு கட்டிவிடாமல் அதனையே ஆழமாகவும் பார்க்க வேண்டும் என்பதாகும். வாசிப்பு குறித்த தேடலையும் விஞ்ஞானபூர்வமான பார்வைக்குட்படுத்தி ஆய்வு செய்வதன் மூலம் இத்துறை சார்ந்த காத்திரமான விடயங்கள் பலவற்றினை வெளிக்கொணரலாம். நெல்லுக்குள் அரிசி என்ற விடயம் சிறுவர் முதல் பெரியோர் வரை தெரிந்த விடயமாகும். இதனையே ஆழ அகலப்படுத்தி நோக்குகின்ற போதுதான் அரிசி இல்லாத நெல்லும் உண்டு என்ற உண்மையை அறிய முடியும். அதனையே பதர் என்று குறிப்பிடுகின்றோம். இங்கு தேடலுக்குட்படும் விடயங்களிலும் பதர்கள் இனங்கண்டு அவற்றினை நீக்கி விடுவதற்கும் வாசிப்பு பற்றிய தெளிவுணர்பு அவசியமானதொன்றாகின்றது. மேற்குறித்த கருதுகோளின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற இக்கட்டுரை அதன் முனைப்புற்ற சில போக்குகளை அடையாளப்படுத்துவதாகவே அமையும். அவ்வகையில் இதனை நிரூபிப்பதற்காக நீண்ட பட்டியலை நீட்டவிரும்பவில்லை. அட்டவணைப்போட்டு இலக்கிய கணக்கெடுக்கும் இரகசிய விமர்சகர்களுக்கு அப்பணியினை விட்டுவிட்டு இலக்கிய வாசிப்பின் அவசியத்தையும், அதற்கு அனுசரணையாக உள்ள இலக்கிய குறிப்புக்களையும், இலக்கிய கர்த்தாக்களையும் சுட்டிக்காட்டிச் செல்வது இதன் சாராம்சமாக இருக்கும் என்பதையும் கூற விழைகின்றேன்.

### வாசிப்பு ஏன் அவசியம்

உலகில் தோற்றம் பெற்ற அனைத்துப் படைப்புக்களிலும் மனிதனே மேலான பொருள். மனிதனின் ஆளுமை, கம்பீரம், மேன்மை குறித்து உலக இலக்கிய விற்பன்னர்களில் ஒருவரான மார்க்ஸிம் கோர்க்கி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

மனிதன் எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கின்றது. எனக்கு மனிதனை விட சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டும்தான் எல்லாப்பொருள்களுக்கும், எல்லாக்கருத்துக்களும் படைப்பாளி, அற்புதம் செய்வோன் அவனே. இவ்வுலகில் அற்புத அழகுப்பொருள்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை. நான் மனிதனுக்கு தலைவணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவுக்கு கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை. மனிதனே எல்லாப் பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் படைப்பாளி.

புத்தகங்கள் என்பவை மனிதனைப்பற்றி மனிதனால் எழுதப்பட்டவையாகும். இதனால் தான் இவை மகத்தான ஆற்றல் பெற்று விளங்குகின்றன. அவை மனிதகுலத்தின் வரலாற்றினை, அனுபவத்தினை, வளர்ச்சியினை எடுத்துக்கூறுகின்றன. இன்றைய மனிதன் என்பவன் திடீரென வானத்திலிருந்து குதித்தவன் அல்ல. படிப்படியாக மனிதகுலம் தன்

உழைப்பாலும் அனுபவத்தாலும் கற்ற விடயங்களைக் கொண்டே இன்றைய வாழ்வினைச் சிருஷ்டித்துள்ளது.

ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இக்கண்டுபிடிப்பிலேயே அவனது வாழ்க்கை கழிந்துவிட்டது. இன்றைய மனிதன் தனது வாழ்நாளைச் செலவழித்து இதனைக் கண்டறிய வேண்டிய தேவையில்லை. அவன் நியூட்டனின் அனுபவங்களையும் சிந்தனைகளையும் உள்வாங்கிக்கொண்டு புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி முன்னேறிச்செல்லலாம்.

**எனவே தேடல் வாசிப்பு என்ற பதங்கள் மனித வாழ்க்கையின் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் கண்டு அவற்றிலிருந்து விடுபட்டு நிற்காமல் அவற்றினை எதிர்கொண்டு புதியதோர் நாகரிகத்தினை நோக்கி மனித வாழ்க்கையினை நகர்த்துவது இதன் தலையாய அம்சமாகும்.** வாழ்க்கை மீதான காதல், நம்பிக்கையுணர்வு. நேர்மை என்பன புதிய நாகரிகத்தின் உள்ளடக்கங்களாகும்.

**எவற்றை வாசிக்க வேண்டும்.**

மேற்குறித்த கருத்தினை அடிப்படையாகக்கொண்டு நோக்குகின்றபோது வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது என்ற கருத்து வெளிப்படும். **அப்படியாயின் வாசிக்கின்ற அனைவரும் பூரண மனிதர்களா? புத்தகங்கள் அனைத்தும் மனித ஆற்றலை வெளிப்படுத்துகின்றனவா?** போன்ற வினாக்கள் எழுகின்றன.

மனித நேயத்தின் ஆணிவேர்களைத் தின்று தீர்த்துவிட்டு மனிதனின் ஆற்றல்களை பண்புகளை எந்தெந்த வகையில் சிதைக்க முடியுமோ அந்த வகையில் சிதைக்கின்ற நசிவு இலக்கியங்களும் நம்மத்தியில் பல்கிப் பெருகிக்கொண்டிருக்கின்றன.

நெல்லுக்குள் அரிசி என்ற உதாரணத்துக்குள் வருவோம் அரிசி இல்லாத நெல், பதர்கள் என குறிப்பிட்டோம். இவ்வாறுத்தான் மனிதத்தன்மை இல்லாத புத்தகங்களும் காணப்படுகின்றன. அவற்றின் இனங்கண்டு நீக்குவதற்கும் வாசிப்புடன் கூடிய விஞ்ஞானபூர்வமான பார்வை அவசியமானதொன்றாகின்றது.

விஞ்ஞானபூர்வமான பார்வை என்றவுடன் எனது மாணவப்பருவ காலத்து நிகழ்வொன்று ஞாபகத்திற்கு வருகின்றது. நான் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் நானும் எனது நண்பர்களும் மர்மக்கதைகளையும் துப்பறியும் கதைகளையும் அதிகமான வாசிப்பதுண்டு இதனால் அவ்வப்போது ஆசிரியர்களின் தண்டனைகளுக்கும் ஆளாகினோம்.

பாடசாலை கல்வி முடிந்து வாழ்க்கையின் யதார்த்தத்தில் காலடி வைத்தபோது தான் நாங்கள் வாசித்த புத்தகங்களில் வெளிப்பட்ட வாழ்க்கைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையிலான இடைவெளியை உணரமுடிந்தது. எனவே அக்காலகட்டங்களில் இடம்பெற்ற வாசிப்பினால் வாழ்க்கையை புரிந்து கொள்வதற்கோ அல்லது புதியதொரு சிந்தனை தளத்தினை நோக்கிச் செல்வதற்கோ முடியாமல் இருந்தது. வாசிப்பு, பூரணத்துவம் என்பன பற்றி சிந்திக்கின்ற போது புத்தகங்களில் கற்ற விடயங்களை யதார்த்த வாழ்வோடு இணைத்தும் வரலாற்றுடன் இணைத்தும் தமது அனுபவங்களை பட்டைதீட்ட முனைகின்றபோதுதான் அவை அர்த்தமுள்ளதாகின்றன.

**எவ்வாறு வாசிக்க வேண்டும்.**

வாசிப்பினை மேல்நோக்காக, தகுந்த அடிப்படையற்ற நிலையில் மேற்கொண்டு மனம்போன போக்கில் பொருள் கொள்வதனால் எவ்வித பயனும் இல்லை. சில சமயங்களில் இதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை விட தீமைகள் அதிகம். எனவே **வாசிப்பு தொடர்பான செயற்பாட்டில் ஆழ்ந்து கற்றல், கிரகித்தல், குறிப்பெடுத்தல் போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.**

கேத்திரகணித பாடத்தில் ஒரு தேற்றத்தினை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். ஒரு முக்கோணியின் மூன்று கோணங்களின் கூட்டுத்தொகை 180 பாகையாகும் என்ற தேற்றத்தினை நிறுவும்போது முக்கோணியைப்பற்றி மேலோட்டமாக அறிந்து வைத்திருப்பதனாலோ அல்லது முக்கோணியின் உருத்தினைச் சிந்தனையில் கொணர்ந்து சிந்திப்பதனாலோ பூரணத்துவமான விடை இலகுவாகக் கிடைக்காது. ஒரு தாளில் ABC அல்லது PQR போன்று ஏதாவது மூன்று எழுத்துக்களைப் பயன்படுத்தி முக்கோணி ஒன்றினை வரைந்து சிந்திக்கும் போதுதான் ஏதாவது ஒரு பக்கத்திற்குச் சமாந்தரக்கோட்டினை வரைந்து அதன் துணைகொண்டு தேற்றத்தினை நிறுவலாம் என்ற விடயத்தினை உணரக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு புத்தகங்களை நுனிப்புல் மேய்ந்த நிலையில் வாசிப்பதனால் எந்தப்பயனும் பெறமுடியாது. ஆழ்ந்து வாசித்தல், வாசித்தவற்றின் மையக்கருத்தினை கிரகித்து குறிப்பெடுத்தல், அதனை சமுதாயத்துடன் இணைத்துப் பார்த்தல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக ஒரு புதிய சிந்தனையை நோக்கி நகரவும், வாழ்வினை இன்றைய நிலையைவிட முன்னேற்றகரமான நிலைக்கு எடுத்துச் செல்லவும் கூடியதாக அமையும்.

வாசிப்பதற்கு நேரம் உண்டா?

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மனிதனின் வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவே வாசிப்பதற்கான அவகாசம் இல்லை என நம்மில் பலர் முறையிட்டுக் கொள்கின்றனர். இவர்களின் கூற்றுக்கள் எந்தளவுக்கு பொருத்தப்பாடுடையது என்பதை மார்க்ஸிம் கோர்க்கி, பாரதி என்போரின் வாழ்க்கைச் சம்பவங்களை ஆதாரமாகக்கொண்டு நோக்குவோம்.

கோர்க்கியின் வாழ்க்கை வரலாறு மிகவும் சுவாரசியமானது. இவர் பாடசாலை சென்று கல்வி கற்கவில்லை. சிறு வயதிலே தாய் தந்தையரை இழந்து தாத்தாவின் வீட்டில் வாழ்ந்தவர். கடைச்சிப்பந்தியாக, சுமை கூலியாக, ஹோட்டல் தொழிலாளியாக, ரொட்டி சுடுபவராக, பறவைகளைப் பிடிப்பவராகப் பல தொழில்களைச் செய்தவர். இவர் தனது வாழ்க்கையினைப் பல்கலைக்கழகமாகவும், பயிற்சிக்களமாகவும் கொண்டு கல்வி கற்றார். இவரது வாழ்வில் இடம்பெற்ற சம்பவமொன்றினைத் தேவை நோக்கி இங்கொருமுறை குறித்துக்காட்டுவது அவசியமானதொன்றாகின்றது.

கோர்க்கி சிறுவயதில் கொடுமைமிக்க எஜமானியிடம் வேலைக்கமர்த்தப்பட்டார். இக்காலப்பகுதியில் வாசிப்பு ஆர்வம் அதிகமாக வளர்ந்தது. கடவுளுக்காகக் கொளுத்தப்பட்டிருக்கும் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் புத்தகங்களை வாசிக்கும் கோர்க்கி, சில சமயங்களில் அவற்றில் ஆழ்ந்துபோய் மேசைமீது தூங்கிவிடுவதுமுண்டு. இரவு நேரத்தில் அதிகநேரம் கண்விழித்துப் படிப்பதினால் எஜமானியம்மாவின் வேலைகளைச் சரிவரச் செய்யமுடியாமல் போனமைக்காக இவர் பல தடவைகள் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இவையொருபுறமிருக்க கோர்க்கியின் புத்தக வாசிப்பு என்பது தொடர்ந்து கொண்டேயிருந்தது. எனவே அவர் வேறு அறைக்கு மாற்றப்பட்டார். பழைய பொருட்களை பாதுகாக்கும் களஞ்சிய அறையாக அது காணப்பட்டது. எதிர்பாராத விதமாக கடவுளுக்காக கொளுத்தப்பட்டு எஞ்சிய மெழுகுவர்த்திகளும் அங்கு போடப்பட்டிருந்தன. எல்லோரும் தூங்கிய பின்னர் அவற்றினை கொளுத்தி அவ்வெளிச்சத்தில் தனது வாசிப்பினைத்தொடர்ந்தார் கோர்க்கி. எஜமானிக்கு இதிலும் சந்தேகம் ஏற்பட மெழுகுவர்த்தியின் உயரத்திற்கு ஏற்றவகையில் பலகை கீலங்களை அதனுடன் இணைத்து வைத்திருக்கின்றார். கோர்க்கி மிக தந்திரமாக உபயோகித்து விட்டு பலகைக்கீலங்களை சமன் செய்து விடுவார். இவ்வாறு வாழ்க்கையில் பல இன்னல்கள் தலைகாட்டிய போதும் இவற்றினை எதிர்கொண்டு வாசிப்பை தொடர்ந்தவர் கோர்க்கி. (My Apprenticeships and my University)

பாரதியின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிக்கூறவேண்டிய அவசியமேயில்லை. துன்பியலில் உழன்று ஏறாய் நின்ற பாரதி தன்வாழ்வில்

எத்தனையோ அவலங்களை சந்தித்துள்ளார். இந்நிலையில் வாசிப்பதற்கு நேரமில்லை என்ற முறையீடு எந்தளவு நியாயமானது? இன்றைய இயந்திரஉலகில் மனிதன் வேலைப்பளு, வாழ்க்கைப்பிரச்சினை என்பன அதிகரித்துள்ளன என்பது உண்மைதான். ஆனால் வாசிப்பதற்கு நேரமில்லை என கூறுமளவிற்கு நாம் இயந்திரங்களோடு இயந்திரங்களாகிவிடவில்லை.

**வாசிப்பு, தேடல் எனும் விடயங்களைக் கல்வி நாகரிகப்போக்காகக் கொண்டு சிற்சில விடயங்களைக் கற்று தலைவீங்கி திரிகின்ற உளநோயாளிகளாக அல்லாமல், மாறிவரும் சமுதாய சூழலைப் புரிந்துகொள்ளவும், நாகரிகமான வாழ்க்கையை சிருஷ்டிக்கவும் முனைகின்ற போதுதான் அவை அர்த்தமுள்ளதாகின்றன.**

(நன்றி - ஞாயிறு யாழ் தினக்குரல், 16 ஆகஸ்ட் 2009)

## சனசமூக நிலையங்கள் சமூக மேம்பாட்டின் குவிமையங்கள்.

**பகுதி – 1**

மனிதன்.

இயற்கை எனும் பரந்த விளைநிலத்தில் உருவாகி, இயற்கையுடன் இணைந்து போகவும், தனது பகுத்தறிவின் துணைகொண்டு சிலசமயம் இயற்கையை தனக்கு இசைவாக்கவும் ஆற்றல் பெற்ற இனம் என்ற வகையில் இவ்வுலகில் வாழும் உயிரினங்களுக்குள் உயர்வான ஓர் உயிர் மனிதன். **இயற்கையின் ஆற்றல்களுக்கு எல்லை காணமுடியாதது போன்றே மனிதனது ஆற்றல்களுக்கும் எல்லை காணமுடியாது என்பதை நித்தம் உணர்ந்து கொண்டிருப்பவன். அன்பு, இரக்கம், கருணை, பாசம், காதல், ஈடுபாடு, மரியாதை, பக்தி** போன்ற உயரிய மனிதப்பண்புகளை தன்னகத்தே கொண்டமையால் **மனிதன்** என அழைக்கப்படுபவன். அதேசமயம் ஏமாற்றங்களின் பாற்பட்டு கோபம், வெறுப்பு, குரோதம் போன்ற எதிர்மறை பெறுமானங்களுக்கு இலகுவாக ஆட்படக்கூடியவன். சிறு முகமலர்ச்சியில் கண்களின் பாவத்தில், இலேசான தலையசைப்பில்கூடத் தனது உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்தத் தெரிந்தவன்.

அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி
கல்விசார் நூலகர்,
யாழ் பல்கலைக்கழகம்.

கண்டவை, கேட்டவை, படித்தவை, உணர்ந்தவை, என புலன்களால் பெற்ற அறிவை புலனுக்கு புறம்பாக உள்ள பகுத்தறிவின் துணைகொண்டு அலசி ஆராய்ந்து, ஒப்புநோக்கி, உண்மை கண்டு, புதிய கருத்துக்களை உருவாக்கி, அவற்றை மேலும் ஆய்வு செய்து சரிபார்த்து, கோட்பாடு கண்டு, சட்டமாக்கி உலகை வழிநடத்தும் ஆற்றல் பெற்றவன் என்பதால் மனிதனுக்கு நிகர் மனிதனே. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவனுக்கு இன்றியமையாததாக இருப்பது அறிவு.

சமூகம்.

மனிதன் தனித்து இயங்கமுடியாத ஒரு சமூகப்பிராணி. அவனது தேவைகள் வரையறுக்கப்பட முடியாதளவுக்கு எண்ணிறைந்தவை. மேடும் பள்ளமும், கற்களும் முட்களும், வெளிச்சமும் இருட்டும் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் தனித்து நடைபோடும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை. சூழலுக்கு ஏற்பத் தன்னை சரிசெய்து கொள்ளாத எதுவுமே நிலைகொள்வது கடினம் என்பதை உணர்ந்து, அதற்கமைய கூடிவாழும் பண்பு கொண்டவன், தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பலரையும் நாடவேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு ஏற்படும் போது அது மனித சமூகத்தின் உருவாக்கத்துக்கு வழிவகுக்கின்றது. தன்னை சுற்றியுள்ளவைகள் மீதான அவதானிப்புக்களும், அவ் அவதானிப்புக்களை பரிசோதனைக்குள்ளாக்கித் தீர்வு காணவுதவும் மனித மூளையின் ஆற்றலுமே மனிதகுல வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பதனால் சமூகம் என்பது தனிமனிதனுக்கு முற்பட்டது. "ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காகக்கூடிச் செயற்படும் பல மனிதர்களின் கூட்டே சமூகம்" என்கிறார் கிட்டிங்ஸ் (Giddings) என்ற அறிஞர். "பாதுகாப்பு, புதிய அனுபவங்களைப் பெறல், பிறரது தூண்டல்களுக்கு ஏற்ப நடத்தல், பிறர் தம்மைப்போல் ஒருவராக எம்மை ஏற்றுக்கொள்ளல் ஆகிய நான்கு ஊக்கிகளே சமூகத்தொடர்புகளுக்கு அடிப்படை" என்கிறார் தோமஸ் என்ற அறிஞர். ஒரு மனிதனின் முழுவளர்ச்சிக்கும் சமூகம் இன்றியமையாதது, உணவு, உடை, உறையுள் போன்ற உடல் தேவைகளும், அன்பு போன்ற உளத்தேவைகளும், பாதுகாப்பு, பொழுதுபோக்கு போன்ற சமூகத்தேவைகளும் நிறைவுபெறுவதற்கு சமூகவாழ்க்கை மனிதனுக்கு அவசியமானது.

மனிதனும் சமூகமும்

ஒரு மனிதனின் முழுவளர்ச்சிக்கு சமூகம் இன்றியமையாதது, மரபு, வயது, பயிற்சி, சூழல் என்பன மனித உருவாக்கத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. பிறப்பால் விலங்காகயிருக்கும் மனிதன் மனிதனாக வளர்க்கப்படுவது குடும்பம் என்ற அச்சில்தான். மனிதன் சந்திக்கின்ற முதலாவது உறவான தாய் சேய் உறவு மனிதனுக்கு தன்னுணர்வையும், தன்னைச் சுற்றியுள்ள கூட்டாளிகளின் உறவு சமூக உணர்வையும்

தோற்றுவிக்கிறது. சமூகத்தின் வளம், சமூதாயத்தின் மரபு, சமூகத்தின் தேவைகள், சமூகத்தின் சூழல் என்பனவற்றின் அடிப்படையிலேயே மனிதனின் முன்னேற்றம் தங்கியுள்ளது. அதேசமயம் **தனித்தன்மைமிக்க மனிதர்கள் இன்றி சமூகம் வேரூன்றி நிலைத்து நிற்கமுடியாது.** தனிமனித வளர்ச்சியை சமூகமுன்னேற்றத்தினின்றும் பிரிக்கமுடியாதளவுக்கு அவை நெருங்கிப் பின்னிப்பிணைந்திருக்கின்றன. எனவே மனிதனின்றி சமூகமில்லை. சமூகமின்றி மனிதப்பண்புள்ள மனிதன் இல்லை.

### சமூகமும் பண்பாடும்.

மனிதனது குழு வாழ்க்கையினின்றும் எழுவது பண்பாடு. எனவே சமூகம் என்பது பண்பாடு இன்றி நிலைகொள்ளமுடியாது. எந்தவொரு மக்கள் குழுவிலும் உள்ள மக்களினதும் வாழ்க்கை முறை, பழகும் விதம், ஏனைய மக்கள் குழுவுடன் பழகும் தன்மை, அவர்களின் மொழி, எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு அம்மொழியைப் பயன்படுத்தும் விதம், பொருட்கள் கருவிகளை உருவாக்கும் முறை, அவற்றை பயன்படுத்தும் முறை. அவர்களின் சிந்தனைகள் அனைத்துமே பண்பாடு என்பதற்குள் உள்ளடங்கும் என்றார் போல்சியர்ஸ் என்ற அறிஞர்.

பண்பாடு உயிர்வாழ்வதற்கு பின்வரும் மூன்று அம்சங்களுக்கிடையில் இசைவுத்தன்மை அவசியமாகும்.

1. கற்கோடரி முதற் கொண்டு இன்றைய கணினி வரை மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதீக உபகரணங்கள். **பண்பாட்டின் முதிர்ச்சியானது இவ்வுபகரணங்களின் பரந்த பயன்பாட்டினால் அளக்கப்படுகிறது.** கருவிகள் வளர்வதற்கமைய அதனைப்பயன்படுத்துவதற்கான அறிவும் வளர வேண்டும்.

2. கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு கருவியும் எவ்வாறு எந்தளவிற்கு என்ன நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக சமூக உறுப்பினர்களிடையே உருவாக்கப்படும் கோட்பாடுகள், நம்பிக்கைகள், அனுபவங்கள், கட்டுக்கதைகள். புனைகதைகள், கற்பனை, புலமைத்துவம், இந்த புலமைத்துவத்திலிருந்து பெறப்படுகின்ற தத்துவம் ஒரு மனிதனை இன்னொரு மனிதனுடன் தொடர்புபடுத்துவதுடன் உலகம் எங்கணும் தொடர்பு படுத்துகின்றது.

3. இன்றைய செயலுக்குப்படுத்துகின்ற பண்பாட்டு யதார்த்தத்தைத் தருகின்ற சமூகநிறுவனங்கள், உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு சமூக உறுப்பினர்களால் ஒன்று திரட்டப்பட்ட அறிவு என்னும் இந்த புலமைத்துவமே மக்களின் நடைமுறைகள் பழக்கவழக்கங்களாக உருவாகி நிறுவனங்களினூடாக செயலுருப்பெற்று சமூகநடத்தையாக உருவாகிறது. எந்தவொரு சமயத்திலும் இந்த புலமைத்துவமானது பௌதீக உபகரணங்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். சமூக நிறுவனங்களின் எல்லைப்பரப்பையும் வரையறுக்கும்.

மேற்கூறிய மூன்று அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இசைந்து போவதன் மூலமே பண்பாடு என்பது உயிர்வாழ முடியும்.

சமூக நிறுவனங்கள்.

சமூகம் தனிமனிதர்கள் சேர்ந்து உருவாக்கப்பட்டது எனினும் அது பலதரப்பட்ட நிறுவனங்களின் கட்டமைப்பாலானது. **சமூகத்தின் தோற்றப்பாடுகள், மரபுகள், முறைசார்ந்த கட்டமைப்புகள் என்பவற்றின் தொகுப்பே சமூக நிறுவனங்கள்** ஆகும். தனிமனிதர் ஒவ்வொருவரும் பெற்றோராக, ஆசிரியராக, தொழிலாளியாக, தொழில் முயற்சியாளராக, சமூகசேவையாளராக என பலதரப்பட்ட வகையில் இந்நிறுவனங்களில் தமது பங்கை ஆற்றுகின்றனர். மனிதர்களின் தேவைகளை பூர்த்திசெய்யவென மனிதரால் உருவாக்கப்பட்ட **இந்நிறுவனங்கள் இன்று சமூக உறுப்பினர்கள் தமது விருப்பங்களை அமுல்படுத்துகின்ற ஒரு கருவியாக வளர்ந்தது** மட்டுமன்றி, இவற்றில் சில தமது சமூகத்தின் பரப்பெல்லைக்கும் அப்பால் சென்று ஏனைய சமூகங்களையும் கட்டுப்படுத்தும் அளவிற்கு பாரிய சக்திகளாக உருவெடுத்திருக்கின்றன.

சமூக நிறுவனங்களின் ஆதார (Primary) நிறுவனங்களாகக் கருதப்படுபவை **குடும்பம், கூட்டாளிக்குழு, சுற்றுப்புறச் சமுதாயம்** என்ற மூன்றுமே. இவை சமூக உறுப்பினரிடையே முழுக்க முழுக்க நேரடித்தொடர்பைப் பேணுபவை. மனித குலத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே இந்த ஆதார நிறுவனங்கள் தோற்றம் பெற தொடங்கிவிட்டன. பாடசா**லைகள்,** மத **நிறுவனங்கள்,** போன்றவை நேரடித்தொடர்பையும், மறைமுகத்தொடர்பையும் பேணுகின்ற **இடைநிலை (Intermediate)** நிலையங்களாகக் கருதப்படுகின்றன. முற்றிலும் மறைமுகத் தொடர்பைப் பேணுகின்ற அரசு, தொடர்பு சாதனங்கள் போன்றவை **வழிநிலை (Secondary)** நிலையங்கள் எனக்கூறப்படுகின்றன. மனித வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் இச்சமூக நிறுவனங்களின் செல்வாக்கு அளப்பரியதாகும். கருவறை தொடங்கி கல்லறைவரை ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் செல்வாக்குச் செலுத்தும் **வலிமைமிக்க இச்சமூக** நிறுவனங்களின் அளவு, தன்மை, ஆதிக்கம் என்பவற்றினூடாக ஒரு சமூகத்தின் தன்மையையும், அதன் சிக்கல் வாய்ந்த அமைப்பையும் இனங்கண்டுகொள்ள முடியும் இதிலிருந்து தனிமனித வளர்ச்சிக்கும், சமூகவளர்ச்சிக்கும் அடிப்படை இச்சமூக நிறுவனங்களே என்பது தெளிவு.

சனசமூக நிலையங்கள்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெருங்கிச் சேர்ந்து வசிக்கும் பல குடும்பங்கள் தமக்கு எண்ணங்கள், குறிக்கோள்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள் தொழில்கள் போன்ற ஏதாவது ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ சில

பொதுப்பண்புகளைக் கொண்டிருக்குமாயின் அது சுற்றுப்புறச் சமூகம் என்ற ஆதார நிறுவனமாக உருப்பெறுகிறது. இந்த ஆதார நிறுவனத்திலிருந்து சேவை மனப்பான்மைமிக்க உறுப்பினர் தமக்குள் ஒன்றுசேர்ந்து தமது மக்களுக்கு சேவைபுரிவதற்கென உருவாக்கும் நிலையங்களே சனசமூக நிலையங்களாகும். மனிதர் ஒருவருக்கொருவர் உதவுவதற்கும். உறவு கொண்டாடுவதற்கும், தோழமை கொள்வதற்கும், ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் தமக்குள் நேரடித்தொடர்பை பேணுகின்ற சிறிய எண்ணங்களாகும். இவை விவசாய சமுதாயங்களாகவோ, கடற்றொழிலை சிறப்பாகக் கொண்ட கடற்றொழில் சமுதாயங்களாகவோ இருக்க முடியும். மனித வாழ்வின் பெரும்பகுதி சுற்றுப்புற சமூகம் என்ற வட்டத்திற்குள்ளேயே சுழல்கின்றது. மனிதப்பண்புகளை விருத்தி செய்யும் இத்தகைய ஆதார நிலையங்களை மனிதப்பண்புகளின் "வளர்ப்புப் பண்ணைகள்" என சமூகவியலாளர் அழைக்கின்றனர்.

பகுதி 11.

## இன்றைய மனிதனும் சமூகமும்

இன்றைய சமூகம் தகவல் சமூகம் எனப்படுகின்றது. அறிவே ஆற்றல் என்ற கோஷம் முன்வைக்கப்பட்ட கைத்தொழில் சமூகத்திலிருந்து தகவலே ஆற்றல் என முழங்கும் தகவல் சமூகத்தில் நாம் வாழ்கின்றோம். குடும்பம், சுற்றுப்புற சமூகம், கிராமம் போன்றவற்றின் வரையறைகள் உலகக்கிராமம் என்ற கருத்து நிலைக்குள் தமது தனித்துவத்தை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன. உலகின் வேகத்தோடு ஒட்டி ஓடவேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு இருப்பதால் பம்பர வேகத்தில் சுழலும் இன்றைய உலகில் மனிதனின் உதடுகள் அதிகம் உச்சரிக்கும் வார்த்தை "நேரமில்லை" என்பதே. நேரமில்லாத உலகில் தன்னுணர்வையும், சமூக உணர்வையும் தக்கவைப்பதற்கு பாரிய பிரயத்தனம் தேவை. சாதனைப்படிகளின் உச்சியில் நிற்கும் மனிதனால் மனிதன் தலையை நிமிர்த்தும் தடவைகளை விட அம்மனிதனால் உருவாக்கிவிடப்பட்ட சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ஏற்றத்தாழ்வுகளின் அபாயகரமான விளைவுகளை சந்தித்துக்கொண்டிருக்கும் மனித சமூதாயத்தைப் பார்த்து மனிதன் தலைகுனியும் தடவைகள் அதிகமானவை.

அன்பு, பாதுகாப்பு, பரஸ்பர உறவு, என்பவற்றின் அடிப்படையில் உருவான குடும்பம் என்ற ஆதார நிறுவனம் இன்று அவற்றை புறந்தள்ளி பணத்துக்கும் அந்தஸ்துமிக்க தொழிலிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிறுவனமாக மாறிக்கொண்டு வருகிறது. தைரியம், பற்றுறுதி. பரந்த மனப்பாங்கு, பொதுநலப் பண்பை வளர்ப்பதற்கு உதவும் விளையாட்டுக்குழுக்களுடன் குழந்தைகள் செலவிட்ட காலம் மாறி, தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி நேரம் முடக்கப்பட எஞ்சியுள்ள நேரத்தில் கணினி விளையாட்டுக்களும் வியாபார

ரீதியான வர்த்தக மையங்களும் முக்கியத்துவப்படுத்தப்படுவதனால் குழந்தைகள் பிரதான அங்கத்தவராக கொண்ட விளையாட்டுக்குழு என்ற வலுமிக்க ஆதார நிறுவனம் நகர்புறச் சமூகங்களில் மெல்ல மெல்ல மறைந்து கொண்டு போகிறது. வாழ்க்கை படிப்படியாக புறந்தள்ளி ஏட்டுப்படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொண்ட பாடசாலை என்ற நிறுவனம், விரும்பத்தகாத மனவெழுச்சிகளை மனிதரிடம் குறிப்பாக குழநதைகளிடம் தூண்டிவிடும் திரைப்பட ஊடகங்கள், நின்று நிதானித்து சிந்தித்துப்பார்த்து செயற்பட நேரமற்ற பம்பர உலகில் தொகை ரீதியாகவும் தரரீதியாகவும் பெருத்துக்கொண்டு போகும் தகவல் வெள்ளத்துக்குள் நல்லதை, பொருத்தமானவை தெரிவு செய்வதற்கான நேரமோ, பொறுமையோ, அறிவோ அற்ற மனித சமூகம் இப்படி இன்றைய சமூகத்தின் எதிர்க்கணியப் போக்கை விரித்துக்கொண்டே போகலாம்.

உலகம் கிராமமாக சுருங்கிவரும் இன்றைய காலத்தில் ஒவ்வொரு சமூகமும் தமது தனித்தன்மையை வெளிக்கொணர்வதற்கு தம்மாலான வகையில் முயற்சி செய்கின்றன. கொடிய விலங்குகளிடமிருந்து தன்னை பாதுகாக்க, கூடிவாழ முற்பட்ட மனித சமூகம் இன்று மனிதர்களிடமிருந்து தம்மை பாதுகாக்க வேண்டிய தன்மைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. வலியது மெலியதை நசுக்கும் என்ற இயற்கையின் விதி மனிதனுக்கு விதிலக்கானதொன்றல்ல. எனவே நசுக்கப்படும் சமூகம் தன்னை காத்துக்கொள்ளவும், தனித்தன்மையை பேணிக்கொள்ளவும் சமூக மேம்பாடு அவசியமானது.

சமூக மேம்பாடு.

சமூக மேம்பாடு என்பது சமூகத்தின் நலனை மேம்படுத்தும் பொருட்டு சமூகத்தின் ஆதார நிறுவனமான குடும்பம் என்ற நிறுவனம் முழுமையான வளர்ச்சி பெறவும் குடும்பத்தின் உறுப்பினராக தனிமனிதர் ஒவ்வொருவரும் தன்னிறைவும் திருப்தியும் பெறவும் வேண்டி ஏற்படுத்தித் தருவதை நோக்கமாக் கொண்டது. தனிமனித வளர்ச்சிக்கு அறிவு எவ்வளவுக்கு அடிப்படையாக உள்ளதோ சமூக வளர்ச்சிக்கும் அடிப்படை அறிவே. விவசாயத்தை முதன்மையாக் கொண்ட நிலபிரபுத்துவ சமூகமொன்றில் "வரப்புயர" என்ற ஒற்றைச் சொல்லின் மூலமே சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழவுத் தொழிலின் அவசியத்தை ஔவைக்கிழவி வெளிக்கொணர்ந்தது போன்று, தகவலை முதன்மையாகக் கொண்ட இன்றைய சமூகத்தில் "அறிவுயர" என்ற ஒற்றைச் சொல்லின் மூலம் தனிமனித அறிவு குடும்பத்தின் மேம்பாட்டையும், குடும்ப உறுப்பினர்களது மேம்பாடு சுற்றுப்புற சமூகத்தின் மேம்பாடு அதன் வழியில் சமூகமேம்பாட்டையும் எவ்வாறு வளர்க்கமுடியும் என்பதை வெளிக்கொணர முடியும்.

எந்தவொரு சமூகமும் சமூக, பொருளாதாரத்துறைகளில் முன்னேறவேண்டுமாயின் பிறநாடுகளில் தங்கியிருக்கும் நிலைமாறி நாட்டின் இயற்கை வளங்களும் மனிதவளங்களும் பூரணமாகப்

பயன்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களின் நலனையும் வளர்ச்சியையும் அதிகரிக்க உதவும் வகையில் அவ்வளங்களை பயன்படுத்துவதுமே அபிவிருத்தியின் முக்கிய நோக்கமாகும். எந்தவொரு அபிவிருத்தியின் கர்த்தாவும் மனிதனே. மனிதனுக்காக மனிதனைச் கொண்டு மனிதனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளே அபிவிருத்தியைத் தரும்.

எங்கிருந்து தொடங்கலாம்?

சமூக மேம்பாட்டை எங்கிருந்து தொடங்கலாம் என்ற வினா எழுப்பப்படும்போது நாட்டு மக்களின் முக்கால் பகுதிக்கு அதிகமாக வசிப்பது கிராமங்களில்தான் என்பதற்கமைய கிராமம் தேசத்தின் அபிவிருத்தியை அளவிடுவதற்கான சிறந்த அளவுகோலாக பொருளியல்வல்லுநர்கள் கண்டனர். ஆனால் உலகமயமாக்கல், நகரமயமாக்கல், போன்ற சிந்தனைகள் காரணமாக கிராமம் என்ற கருத்து நிலை மெல்ல மெல்ல தனது வரையறைகளை இழந்து வருவதும் கிராமமா, நகரமா என்ற தெளிவு வரையறுக்கமுடியாதபடி இரண்டும் கெட்டான் நிலையில் கிராமங்கள் இருப்பதும் இதன் காரணமாக பட்டின சபைகள், கிராமசபைகள் என்பன இல்லாமல் ஆக்கப்பட்டு இரண்டையும் இணைத்து பிரதேசசபைகள் உருவாக்கப்பட்டிருப்பதும் கிராமத்திலும் பார்க்க குறுகிய வரைவெல்லை ஒன்றினை அபிவிருத்திக்கான அளவுகோலாக தெரிவு செய்ய வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது.

கிராமங்களை முன்னேற்றுவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக சமூக பொருளாதார, கல்வி, சுகாதார, கலாசார அபிவிருத்தியை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றதெனினும் கிராம மக்களின் உணர்வுபூர்வமான பங்குபற்றல் இல்லாத எதுவுமே அபிவிருத்தியை கொண்டுவராது என்பதற்கான எடுத்துக்காட்டுகளாக இவை காணப்படுவது கண்கூடு. இத்தகைய சங்கங்கள் உள்ளூர் சுயஉதவியிலேயே பெரிதும் தங்கியிருப்பதும் சனசமூக நிலையங்கள். கூட்டுறவுச்சங்கங்கள், விவசாய சபைகள், பெற்றோர் ஆசிரிய சங்கங்கள், சமய நிலையங்கள், மக்கள் சபைகள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டே கிராம அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டியிருப்பதும், ஒரு கிராமமானது ஒன்றிற்கு மேற்பட்ட சுற்றுப்புற சமூதாயங்களை உள்ளடக்கியிருப்பதனால் இவர்களிடையே காணப்படும் சமூக பொருளாதார, கலாசார ஏற்றத்தாழ்வுகள் கிராம அபிவிருத்தி என்ற கருத்து நிலைக்கு சரியான பங்களிப்பைச் செய்யமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. எனவே குடும்பத்திற்கு அடுத்ததாக சுற்றுப்புற சமுதாயத்தினின்றும் தோற்றம் பெறும் சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திக்கான தளமையமாக உருவாக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டாகிறது.

யார் தொடங்குவது?

சமூகமேம்பாட்டில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பங்குண்டு என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. முழுமையான சமுதாய ஈடுபாட்டின் மூலமே முழுமையான சமுதாய உயர்வு ஏற்பட முடியும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் இளைஞருக்கும் வயது வந்தோருக்கும் பாரிய பங்குண்டு வருங்கால சமூகத்தை தாங்கப்போகும் இன்றைய குழந்தைகளின் ஆய்வுக்கருத்துக்கு களமமைத்துக் கொடுத்தல், இறுதிக் காலத்தை அமைதியாக கழிக்க விரும்புகின்ற முதியோர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கல், இயற்கை செயற்கை காரணிகளின் தாக்கத்தால் உடல் உளத் தாக்கமுற்ற சமூக உறுப்பினர்களை அரவணைத்து, காத்தல், எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொரு சமூக உறுப்பினரிடையேயும் நாம் என்ற உணர்வை தோற்றுவிப்பதின் ஊடாக சமூகத்தில் தனது பங்கு பற்றிய சிந்தனையை உருவாக்குதல் போன்ற பாரிய பணிகளை ஏற்றுநடத்தும் பொறுப்பு சமூகத்தின் இளைய தலைமுறையிடமும், வயது வந்தவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொதிந்த செயலூக்கமும் உற்சாகமும் எதையும் கேள்விக்குட்படுத்தும் அறிவும், வேட்கையும்மிக்க இளைஞர் சமுதாயத்தின் ஒத்துழைப்பும், பொறுமையும் அனுபவ அறிவும் நிரம்பப்பெற்ற வயது வந்தோர்களின் ஒத்துழைப்பும் சரியான வகையில் ஒன்றிணையும் போதே சமூகத்தின் எந்தவொரு நோக்கமும் செயலுருப்பெறும் வாய்ப்பு உண்டாகிறது. இவ்வாய்ப்பைக் கொண்டுள்ள ஒரே ஒரு அமைப்பு சனசமூக நிலையமாகவே அமைய முடியும்.

## பகுதி - III

எப்படித் தொடங்குவது?

சமூக மேம்பாட்டை எப்படித் தொடங்குவது என்ற வினா எழுப்பப்படும் போது

மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாய் இருளைப்போக்கி
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் ஒரு சுவடிச் சாலை
புனித முற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

என்ற புரட்சிக் கவிபாரதிதாசனின் அர்த்தம் பொதிந்த வரிகள் இங்கு உயிர் பெறுகின்றன.

சிதைந்துகொண்டு போகும் மனிதப் பண்பை விருத்தி செய்வதற்கு அடிப்படையாக இருப்பது அறிவு. தொடர்ச்சியான கற்றல் செயற்பாட்டினூடாக ஒரு பொருட்துறை பற்றி ஒரு மனிதன் மூளையில் பதிந்து வைத்திருக்கின்ற அல்லது அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்படும் பொருட்டு பகிர்ந்து கொள்ளப்படுகின்றது தகவலும் அது தொடர்பான புரிதலும் அறிவு எனப்படுகிறது. இந்த அறிவை அடக்கிக்கொண்டிருப்பவை நூல்கள். ஒரு நூலானது கல்வியறிவு தந்து நடைமுறைநிலை தெரிவித்து கடமைகளைக் காட்டி, உரிமைகளைச் சேர்த்து, பொருளாதாரத்தை வளர்த்து கலாசாரத்தை காக்கும் செயற்பண்புகள் கொண்டது என்கிறார் இந்திய நூலகவியல் விற்பன்னர் வே.தில்லைநாயகம். ஒரு நூலகத்தில் இருக்கும் நூல்கள் தகவலை தருபவை, மன ஆறுதலைக் கொடுப்பவை, புத்துயிர்ப்பூட்டுபவை, அறிவைத் தருபவை என பலதரப்பட்டவையாக அமைகின்றன. இவை அனைத்தும் களிமண் பதிவுகள் முதற்கொண்டு இன்றைய கணினிப் பதிவுகள் வரை மனித வரலாற்றுக் கட்டங்களில் பல வளர்ச்சிப் போக்குகளைச் சந்தித்திருக்கின்றமையை நூலகங்களில் குவிந்துகிடக்கும் தகவல் சாதனங்கள் மூலம் கண்டுகொள்ள முடியும்.

நூல்கள் இருக்கும் இடம் நூலகம். நூலகங்களை அவற்றின் நோக்கத்தின் அடிப்படையில் கல்வி சார் நூலகங்கள் பொதுநூலகங்கள் சிறப்பு நூலகங்கள் என மூன்று பெரும் பிரிவாக வகைப்படுத்த முடியும். இவற்றில் பொது நூலகங்கள் மக்களால் மக்களுக்கு மக்களே முன்னின்று நடத்துவது பொதுநூலகம் எனப்படுகிறது. எமது சமூகத்தில் பொதுநூலகப் பணியை மேற்கொள்வதில் மாநகரசபை நூலகங்கள், பிரதேசசபை நூலகங்கள், கிராம நூலகங்கள், சனசமூக நிலைய நூலகங்கள் என்பன உள்ளடங்குகின்றன. மாநகரசபை பிரதேசசபை நூலகங்களின் பரப்பெல்லை விரிவடைந்ததன் காரணமாக சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பதற்கு மிகப்பொருத்தமான இடம் சனசமூக நிலையங்களினால் உருவாக்கப்படும் நூலகங்களாகவே இருக்க முடியும். எனவே சனசமூக நிலையம் ஒன்றின் நூலக உருவாக்கமானது அறிவு பரப்பும் மிகச் சிறந்த சாதனமாக இருக்கக்கூடிய வாய்ப்புண்டு. இந்த அறிவை பாடசாலைகள் வழங்க முடியாதா என்ற கேள்வி எழுகிறது.

## பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும்.

கற்றல் என்பது வாழ்க்கையின்றும் எழும் ஒன்று. வாழ்க்கை அனுபவங்களின் ஒரு பகுதியை மட்டுமே பாடசாலைகள் மனிதனுக்கு வழங்கமுடியும். கல்வி என்பது உயர்குடியினருக்கு மட்டுமே சொந்தமானது என்ற காலகட்டத்தில் ஆரம்பித்த குருகுலக்கல்வி முறையிலிருந்து தொடங்கி அனைவருக்கும் கல்வி என்ற கோஷம் முன்வைக்கப்பட்ட காலத்தில் ஆரம்பித்த நிறுவனமயப்பட்ட கல்வி முறையில் நடைபயின்று குழந்தை மையக்கல்வி என்ற கருத்து நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூக மையக் கல்வியில்

கல்விச் சிந்தனைகள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் மனிதனை மனிதனாக உருவாக்குவதே உண்மைக்கல்வியின் நோக்கம் என்ற சுவாமிவிவேகானந்தரின் சிந்தனை உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றின் சிறப்புமிக்க பண்புகளை வெளிக்கொணர உதவுவது கல்வி என்ற காந்தியின் சிந்தனை போன்ற பலதரப்பட்ட உயர் சிந்தனைகளையும், தொழில் நோக்கம் அறிவு நோக்கம், ஒருமைப்பாடுடைய ஆளுமையை வளர்த்தெடுக்கும் இசைந்த வளர்ச்சி நோக்கம், ஒழுக்க நோக்கம், ஓய்வு நோக்கம், சமூக நோக்கம் என பலதரப்பட்ட நோக்கங்களையும் சந்திக்கும் இன்றைய கல்வி முறையானது செயற்பாட்டளவில் செய்துள்ள சாதனைகள் மிக மிகக் குறைவு. கல்வித்திட்டங்களில் ஏற்படுத்தும் மாற்றங்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சியோ, அவர்களிடம் மனமாற்றத்தைக் கொண்டு வருவதற்கான தூண்டுதல்களோ மிகக்குறைவு. வறுமை, வேலையின்மை போன்ற பொருளாதார காரணிகளின் தாக்கம் மிக அதிகமாக உள்ள எமது தேசத்தில் கல்வியின் முழு நோக்கமுமே தொழில் நோக்கமாகவே உள்ளது. மேலைநாட்டு அறிவியல் கண்டுபிடிப்புக்களின் பாவனையாளராகவே இருக்கும் எமக்கு இக்கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்துவதற்கான தேடலில் வாழ்வின் பெரும்பகுதி கழிந்துவிட இக்கண்டுபிடிப்புக்களின் உண்மையான பயன்பாடு என்ன இதன் நன்மைகள் தீமைகள் போன்றவற்றை அறிவதற்கான வாய்ப்புகளை இழந்துவிடுகின்றோம்.

போட்டிமிக்க தொழில் சந்தையில் நின்றுபிடிப்பதற்கேற்ற வகையில் தான் எமது நகர்வுகள் இருப்பதன் காரணமாக வாழ்க்கைப் படிப்பிற்கான கால அவகாசமோ, சிந்தனையோ எம்மிடம் அருகிவருவதே கண்கூடு. தொழில் சந்தையில் போட்டிபோடக்கூடிய வல்லமையைத் தரும் பாடசாலைகளை நோக்கி தமது பிள்ளைகளை நகர்த்தும் பெற்றோர்கள் பாடசாலைகளைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரப்படுத்தும் கல்வித்திட்டங்கள், அந்தஸ்துமிக்க வாழ்க்கைக்குரிய மூலதனமாகக் கல்வியை கருதும் எமது சமூகத்தின் மனப்பாங்கு, என்பன மாறும் வரை பாடசாலைகள் சமூக மையக்கல்விக்குரிய மையத் தளங்களாக இருக்கும் வாய்ப்பு சாத்தியமற்றொன்றாகும். மாறாக தொழில் நோக்கம் உச்சநிலையடைந்து நாம் என்ற உணர்ச்சிக்குப் பதில் நான் என்ற உணர்வு மனிதனுக்குள் வேரோடி தான் பிறந்த தவழ்ந்த ஓடித்திரிந்த மண்ணையே மறந்துவிடும் இயல்பையே நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

மனித வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பம், சுற்றுப்புற சமூகம் என்ற வட்டத்துக்குள்ளேயே கழிகிறது "குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள் அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை" எனக்கூறும் பெஸ்டலோசி என்ற தலைசிறந்த கல்வியாளரின் கூற்று மனித வாழ்க்கையில் குடும்பமும் சுற்றுப்புற சமூகமும் வகிக்கும் பங்கை தெளிவாகக்காட்டப் போதுமானது. எனவே இவற்றுள் இருந்து உருவாக்கப்படும்

சனசமூக நிலையங்கள் சமூகமேம்பாட்டின் அடித்தளங்களாக உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி கருத்து முரண்பாட்டிற்கு வாய்ப்பில்லை என்றே கூறவேண்டும். பார்த்துச் செய்தல் குழந்தையின் பிரதான பண்பு என்பதால் தேடல் உணர்வுக்கான களம் இங்கிருந்து அமைவதே பொருத்தமானது. பாடசாலைக்கு செல்வதற்கு முன்னுள்ள குழந்தை பருவத்தின் ஆராய்வூக்கத்திற்கு களம் அமைத்து கொடுக்கக்கூடிய வாய்ப்பு சனசமூக நிலையங்களினால் நடத்தப்படும் பாலர் கல்வியும் சிறுவர் நூலகமும் சரியான முறையில் செயற்படுவதனூடாக அடையப்பட முடியும்.

நடைமுறை நிலை

தமது பலம் தமது முக்கியத்துவம் எத்தகையது என்பது தமக்கே தெரியாத நிலையில் இன்றைய சனசமூக நிலையங்கள் இருப்பதையே நாம் கண்கூடாக காண்கிறோம். பெரும்பாலான சனசமூகநிலையங்கள் ஓரிரு பத்திரிகைகளை வாசிப்பதற்கான வாசிகசாலைகளாக மட்டுமே தமது பணியைக் குறுக்கிவிடுகின்றன. சில சனசமூக நிலையங்கள் வாசிகசாலையுடன் பாலர் பாடசாலை, விளையாட்டுக்கழகம் என்று ஓரளவிற்கு தமது பணியை விரிவுபடுத்தியிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓரிரு சனசமூக நிலையங்கள் மட்டும் நூலகம் என்ற எண்ணக்கருவிற்கு ஓரளவுக்கு வடிவம் கொடுத்திருப்பதுடன் தற்போதைய தகவல் சமூகத்தின் இரு கண்கள் எனப்படுகின்ற கணினிப்பயிற்சி. ஆங்கிலக்கல்வி என்ற இரண்டையும் நோக்கி தமது பணிகளை விரிவுபடுத்தியிருக்கின்றன. நிதிபெறும் நோக்கத்துக்காக நூலகம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பெற்றுக்கொண்ட நூல்களையே அலுமாரிகளில் பூட்டிவைத்திருக்கும் சனசமூகநிலையங்களையும் இங்கு மறந்துவிட முடியாது.

வாசிகசாலை என்பது மிக ஆழமான உட்பொருளைக் கொண்ட ஒரு சொற்பதம் என்பதை உணர்ந்து கொள்ளாமலேயே சனசமூகநிலையங்களில் பெரும்பாலானவை வாசிகசாலை என்ற பெயராலே இன்று இனங்காணப்படுகின்றன. வாசிப்பு மனிதனை பூரணமனிதனாக்குகிறது என்ற புகழ்மிக்க வாசகத்தின் உட்பொருள் எதுவோ அந்த உட்பொருளைத் தருவதே வாசிகசாலையாகும். ஆனால் நடைமுறையில் நாம் காணும் வாசிகசாலைகள் ஓரிரு புதினப்பத்திரிகைகளை வாசிக்கும் இடமாகவே இன்று இருக்கின்றன. எவ்வளவுதான் கல்வியறிவு வீதத்தில் உலகில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக எமது சமூகம் இருப்பினும் எம்மிடையே வாசிப்புப் பழக்கம் என்பது மிக மிகக் குறைவு. இது எமது எண்ணங்களைக் குறுக்கி எம்மிடையே நான் என்ற உணர்வை மேலோங்கச் செய்கிறது. இதுவே சனகசமூக நிலைய நூலகங்களினால் வழங்கப்படும் சேவைகளினூடாக நாம் என்ற உணர்வை தோற்றுவிக்க முடியும்.

எம்மவர் மத்தியில் நூலகம் என்பது ஏதோ நெருங்க முடியாத இடம் மேதாவிகள், பெரிய மனிதர்கள் மட்டுமே செல்லக்கூடிய இடம் என்ற உணர்வு உண்டு. அதே போல் நூலகம் செல்வது வேலைமினைக்கேடு என்று எண்ணுபவர்களும் எம்மிடையே உள்ளனர். நூலகத்திற்கு விரும்பிச் செல்பவர்களின் அறிவுத் தேடலை அப்படியே நசுக்கிவிட முடியுமளவுக்கு சில நூலகர்களின் மனப்பாங்கு இருப்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

நூல்கள், வாசகர், நூலகர் என்ற மூன்று கூறுகளும் ஒன்றுடன் ஒன்று சரிவர இணையும் போதே நூலகம் ஒன்றின் நோக்கமானது நிறைவேறுகிறது. இதில் நூலகர் என்பவரின் பங்கே பிரதான ஊக்கியாக செயற்பட வேண்டும். நூலகத்தினால் வழங்கப்படக்கூடிய சேவைகளை இங்கு கணிசமானளவுக்கு பட்டியலிட்டுக்கொண்டு போகலாம். ஆனாலும் வாசிப்புப் பழக்கத்தை சமூக உறுப்பினர் அனைவரிடையேயும் ஏற்படுத்தலே எல்லாவற்றிலும் பிரதான பணியாகும். இலாபநோக்கம் உள்ள நிறுவனம் ஒன்று தனது வாடிக்கையாளரை கவருவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனை நடவடிக்கைகளையும் நூலகர் என்பவர் இலாபம் எதுவுமற்ற நூலக சேவையில் மேற்கொள்வதன் மூலமே சமூகஉறுப்பினரிடையே வாசிப்புப்பழக்கத்தை உருவாக்க முடியும். கவர்ச்சியான நூலகக் கட்டடமோ வசதியான நூலக தளபாடங்களோ, பெருந்தொகையான நூல்களோ, இலகுவான நூலக ஒழுங்கமைப்போ, வாசிப்பு பழக்கமற்ற சமூகத்தில் பயன்பாடற்றது. நூலகத்தை மக்கள் நாடாத ஒரு சமூகத்தில் வாசிப்புப்பழக்கத்தை உருவாக்குவதற்கு நூலகம் தான் மக்களை நோக்கி நகர வேண்டிய தேவை உருவாகிறது. களைத்து விழுந்து வேலையால் வரும் குடும்பத்தலைவன் குழந்தைகள், குடும்பம் என்று நாள் முழுவதும் போராடும் குடும்பத்தலைவி ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழிக்க வகை தெரியாமல் திண்டாடும் முதியோர்களை நோக்கி நூலகம் நகர வேண்டும். ஒரு தடவை அவர்களுக்கு நூலுணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி பெறின் பின்னர் தாமாகவே அவர்கள் நூலகத்தைப் பயன்படுத்த தொங்கிவிடுவர். ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகுதிக்கென சேவையாற்றும் சனசமூகம் நூலகங்களுக்கு ஒவ்வொரு உறுப்பினரிடையேயுள்ளும் தனிப்பட்ட தொடர்பை பேணும் வாய்ப்பு உண்டு.

நூலக சேவை பற்றிப் பேச்செடுத்தாலே முதலில் வருவது நிதிப் பற்றாக்குறை என்ற அம்சம்தான். தமது சமூகத்தை தாம் மேம்படுத்துவதற்கு சமூகஉறுப்பினர்கள் தம்மில்தான் தங்கியிருக்க வேண்டுமேயன்றி அரசாங்கத்தையல்ல. சமூக உறுப்பினரின் உணர்வுபூர்வமான பங்குபற்றுதலில்லாமல் எந்தவொரு சமூக மேம்பாடும் சாத்தியமில்லை என்பதையே சமூக அபிவிருத்திக்கு கோடிக்கணக்கில் செலவழித்துக்கொண்டிருக்கும் அரசோ அல்லது உதவி தரும் நிறுவனங்களோ கண்டுள்ள அனுபவபூர்வமான உண்மை.

நெருக்கடிக்கு உட்படும் மனிதர்களிடம்தான் மேம்பாடு தொடர்பான சிந்தனை உருப்பெறுவது இயல்பு என்பதையே வரலாறு எமக்கு எடுத்துக்காட்டியருக்கிறது. வசதியான சூழல்கள் எப்போதுமே வலிமையான மனிதர்களை வளர்த்தெடுப்பதில்லை. அரசியல் சூழலோ பொருளாதாரச் சூழலே எதற்குமே இது பொருந்தும்.

குறிப்புதவு நூல்கள்.


(1). Harrison, K.C. First steps in Librarianship. London: Crafton, 1960

(2). Harrod, L.M. Harrod's librarians' glossary of terms used in librarianship documentation and the book craft and refernce book. Compiled by Ray prytherch 6th ed... London: Gower, 1987

(3). Mittal, R.L. Library administration. Theory and practice, 5th ed.. New Delhi: Metropolitan book, 1983

(4). Shera, Jesse,H. (1976) Introduction to Librarary Science : Basic elements of Library science. Littletone : Libraries unlimited. p14.

(5). சந்தானம், எஸ். கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள். சென்னை: பழனியப்பா, 1987, பக்.605.


{Special souvenir published by Parathasan Library. Alvai, 2003}

(நன்றி நூலக தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை - 2008)

எனது பிறந்த மண்ணின்
இளைய சமுதாயத்தினரின்
மிகக்குறுகிய கால வேண்டு
கோள்களின் நிமித்தம்
இக்கட்டுரையை வரையலானேன்.
எனது வயதுக் கோளாறினால், எனது
ஞாபகசக்தியும் ஒத்துழைக்க மறுக்கும்
இச்சந்தர்ப்பத்தில் நூலகத்துடன் எனது
நேரடிப் பங்களிப்பும், 65வருடகால
தொடர்புகளும், இதனை
எழுதத்தூண்டுகின்றன என்பதனை
மறுப்பதற்கில்லை.

இதில் சொற்குற்றம்,
பொருட்குற்றம், மற்றும் ஏதேனும்
குற்றங்கள் இருந்தால் எதனையும்
பொருட்படுத்தாது என்னை
மன்னித்தருளுமாறு விநயத்துடன்
வேண்டிக் கொள்கின்றேன்.



"நடா"
(வே.நடராசா)

## ஒரு நூலகத்தின் கதை "நடா"வின் நினைவு "நாடா"க் களிலிருந்து 20ஆம் நூற்றாண்டு – தமிழ் நிலையம்.

கடந்த ஏழு தசாப்த காலத்தில், தனக்கென ஒரு எலிவளையோ! தனிவளையோ அமையாமல் அல்லாடிக்கொண்டிருந்த எமது கடந்தகால நூல்நிலையத்தின் தலைவிதியை எண்ணிப்பார்க்கிறேன்.

ஆரம்பத்தில் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1943ஆம் ஆண்டு) அமரர்.வ.செல்வரத்தினம், ஆசிரியர் அவர்களின் வழிகாட்டலில் கூடிய ஓர் ஆசிரியர் குழுவொன்று வெகு சிரத்தையோடு நூல்களை வாசிக்கும் நற்பழக்கத்தை மக்கள் மத்தியில் நிலைப்படுத்தும் சீரிய நோக்கோடு "தமிழ் நிலையம்" எனும் பெயரால் வாசிகர் சாலை என்றும் பின்னர் நூல்நிலையமும் ஸ்தாபிதம் செய்தனர். மாதாந்த, வாராந்த சஞ்சிகைகளை தென்னிந்தியாவிலிருந்து நேரடியாகவே வரவழைத்தனர். உள்ளூர் செய்திப் பத்திரிகைகளுக்கும் பஞ்சமில்லை, வருடந்தோறும் முக்கிய நிகழ்வுகளாக - (1) ஆண்டுவிழா (2) நாயன்மார் குருபூசைகள் (3) சரஸ்வதி பூசை (4) தைத்திருநாள் (5) தீபாவளித்திருநாள், இன்னோரன்ன பிற பெருவிழாக்களை விமரிசையாக கொண்டாடினர். காலத்திற்கு காலம்

இந்தியாவிலிருந்து வருகைதரும் பிரபல்யம் மிக்க சொற்பொழிவாளர்களை எம்மூருக்கு வரவழைத்து மேடையேற்றி பெருமை சேர்த்த காலங்களுமுண்டு. மேன்மைமிக்க வி.வி.கிரி, கி.வா.ஜகந்நாதன், ரா.பி.சேதுப்பிள்ளை ஆகியோர் இவர்களுட்சிலர்.

இந்த சூழலில் அடியேனும் ஒரு எடுபிடியாக சேர்ந்த பொற்காலம் என்னை ஓர் தீவிர வாசகனாக்கியது. எனது பத்தாவது வயதிலிருந்தே கல்கியின் சரித்திரத்தொடர் நவீனங்களை - "பார்த்தீபன் கனவு", பொன்னியின் செல்வன்" முதலியவற்றை அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

## தும்பளை மேற்கு சனசமூக நிலையம்.

காலவோட்டத்தில் "தமிழ் நிலையம்" தனியார் நிர்வாகத்திலிருந்து விலக்கப்பட்டு தும்பளை மேற்கு சனசமூக நிலையமாக (1949ஆம் ஆண்டு) பொதுமக்கள் நிர்வாகத்திற்கு மாற்றம் பெற்று அரச அனுசரணையும் பெற்றது. அதன்பின் மீண்டும் பூனைக்குட்டிகளை காவித்திரிகின்ற கதையாக எல்லாமாக ஐந்து ஆறு இடங்களுக்கு மேல் இடமாற வேண்டிய பரிதாபநிலை.

பெரும்பாலும் இளைஞர்களே நிர்வாகசபையில் அங்கம் வகித்த காரணத்தால், நேரம் காலம் வசதியாகவர அவர்களும் மேற்படிப்பு, வேலைவாய்ப்பு, வெளிநாடு, திருமணம் என்று ஊர்விட்டு, நாடுவிட்டு செல்ல வேண்டிய கட்டாய நிலையில், அடிக்கடி நிகழ்ந்த நிர்வாகசபை மாற்றங்கள் தவிர்க்கப்படாத நிகழ்வாக மாறிவிட, நிர்வாகத்தின் ஸ்திரத்தன்மை கேள்விக்குறியானது. இந்நிலை துர்ப்பாக்கியமானது. எமது கிராமத்தில் பொருளாதார மேன்மையோ! வாழ்க்கைத் தராதரம் உயர்ந்தவர்களோ! தகுந்த வழிகாட்டியாக கல்வியாளர்களோ! சொல்லும்படியாக இல்லாத காரணத்தையும் பின்னடைவாக குறிப்பிடலாம்.

## 21ஆம் நூற்றாண்டு

நிலைமை இவ்வாறு தொடர, 21ஆம் நூற்றாண்டிலும் ஒரு தசாப்தம் கழிந்தது. இக்காலப்பகுதியல் முற்போக்கு எண்ணங்கொண்ட இளைஞர் அணியொன்று கூடி நிலைமையை ஆராய முற்பட்டு. எப்படியேனும் நூல்நிலையத்திற்கு - ஒரு சொந்தமான இடத்தில். சொந்தமான கட்டடம் ஒன்ற அமைத்தே தீருவோம் என்று சபதம் செய்து கொண்டு போர்க்கால நடவடிக்கையாக பொருத்தமான காணியொன்றை தேடித்திரிந்தவேளை மிகுந்த தாய்நாட்டுப் பற்றுக்கொண்டவரும், தற்சமயம் கனடா நாட்டை வாசஸ்தமாகவும் கொண்ட திருமதி.பவானி தர்மலிங்கம் அபயகரம் நீட்டி, இளைஞர்களின் நன்முயற்சிகளை வெகுவாகப் பாராட்டி வேண்டிய பொருளுதவிகள், செய்வதற்கு முன்வந்த கையோடு தனது சொந்தக்காணியின் ஒரு பகுதியையே நன்கொடையாக கொடுத்ததோடல்லாமல் தாராளமனதுடன் மேலும் பண உதவியும் செய்ய முன்வந்தமை பாராட்டுதற்குரியது.

அவர்போன்றோரது இனம் என்றும் வாழவேண்டும். அதற்குப்பின் கட்டட வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பெற்று உள்நாட்டு, வெளிநாட்டு நலம்விரும்பிகளின் பொருளாதார உதவிகளுடன் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடம், எமது இக்கிராமத்திலே முதலாவது மாடிக்கட்டடமாக திகழ்கின்றது என்று பெருமைப்படுவோமாக. மேற்படி சாதனைகட்கெல்லாம் காரணகர்த்தாக்களாக திகழ்ந்த இளைஞர் குழுவினர் - மெய்வருத்தம் பாராது - பசி நோக்காது கண் துஞ்சாது - எவரெவர் அருமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணாக தோளோடு தோள்நின்று உழைத்தமையாகும்.

இவர்கள் பணிகள் தொடரட்டும். ஏனெனில் எதிர்காலம் இவர்களின் தோள்களிலேயே! விடைபெற்றுக்கொள்ளும் நேரத்தில் முக்கியமான செய்தியொன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய நாட்டு தேசபிதா மஹாத்மா காந்தியடிகள் பாடசாலை கட்டமொன்றை அங்குரார்ப்பணம் செய்ய இலங்கைக்கு (ஸ்ரீலங்கா) வந்தபோது (காலம் ஞாபகமில்லை) கூறியதாவது :- "வானுயர்ந்த மாடிக்கட்டடங்கள் மாத்திரம் பாடசாலையாகமாட்டாது" என்பது அவர்களுடைய கூற்று எவ்வளவு தூரம் ஆழமானதும் மெய்யானதும் என்பதை எல்லோரும் அறிந்திருப்பீர்கள்

நன்றி

எல்லாப்புகழும் இறைவனுக்கே!

## அனுபந்தம்

☐ 20ம் நூற்றாண்டில் "தமிழ் நிலையம்" உருவாக முன்னின்று உழைத்தவர்கள்.

அமரர்கள் :-
1. திரு.வ.செல்வரத்தினம், ஆசிரியர்
2. திரு.ந.நாகேந்திரம், ஆசிரியர்
3. திரு.ச.ஆழ்வாப்பிள்ளை, ஆசிரியர்
4. திரு.வே.மதிபாலசிங்கம், ஆசிரியர்
5. திரு.கி.குமாரசாமி, வைத்தியர்

சீவியவந்தர்கள் :-
1. திரு.ச.கந்தசாமி, ஆசிரியர்
2. திரு.ச.சிவஞானசுந்தரம்
3. திரு.வேலாயுதம், ஆசிரியர், பண்டிதர்
4. திரு.வே.நடராசா, தொண்டர்

☐ 20ஆம் நூற்றாண்டில் - தமிழ்நிலைய பாவனைகட்டகாக தென்னிந்தியா (தமிழ்நாடு) விலிருந்து நேரடியாக வரவழைக்கப்பட்ட வாராந்த, மாதாந்த சஞ்சிகைகளின் பட்டியல்

1. கல்கி
2. ஆனந்தவிகடன்
3. கலைமகள்
3. கண்ணன்
4. மஞ்சரி
5. பிரசண்டவிகடன்
6. காவேரி

(விபரங்கள் சம்பூரணமானதல்ல)

"நன்றி"


## நான் கண்டுகொண்டிருக்கும் தும்பளை மேற்கு கலட்டியூர்

தும்பளை மேற்கு சனசமூகம் இப்படி ஒரு பெருமைமிக்க செயற்பாட்டை செய்து சாதித்திருப்பதை நினைக்க பெருமையாகவும், மகிழ்வாகவும் உள்ளது.

எல்லாத் துறைகளிலும் அனுபவமும் திறமையும் கொண்ட சனசமூக நிர்வாகம் தூரநோக்கான பார்வையில் நிகழ்வை திட்டமிட்டு அதை எமது ஊரக வெளிநாட்டில் வாழும் மக்களின் பெருநிதியுடனும், ஊரவர்களின் பெருஒத்துழைப்புடனும் அவர்களது நிதியுடனும் இத்தகைய பெரும்பணியை மிகவும் சாதுரியமாக செய்து முடித்துள்ளனர்.

எமது சனசமூகநிலையத்திற்கான காணியை அன்பளிப்பாக தந்துதவிய திரு.திருமதி.தர்மலிங்கம் பவானி(கனடா) குடும்பத்தினரை நினைக்க பெரும் நிறைவாக உள்ளது. அவர்கட்கு எனது தனிப்பட்ட நன்றியை இதன் மூலம் சமர்ப்பிப்பதில் பெரும் அகநிறைவடைகின்றேன்.

பாராட்டப்பட வேண்டிய நிர்வாகம், எமது வெளிநாடு வாழ் நண்பர்களின் தூண்டுதலாலும் தொடர்ந்த தொடர்பாடல் மூலம் எல்லோரையும் ஒரு குடையின் கீழ் அரவணைத்து செயற்பட்டார்கள்.



**திரு.வீரசிங்கம் பாலகிருஸ்ணன்**
(ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு அதிகாரி, திருகோணமலை)

குறிப்பாக திரு. சுப்பிரமணியம் குமாரகுலசிங்கம் (ஜேர்மனி) திரு.கந்தசாமி பாலேஸ்வரன் (கனடா) திரு. தம்பிராசா சிறீஸ்கந்தராசா (கனடா) திருமதி நிர்மலா சிவா (பிரபல பல்மருத்துவர் கனடா) ஆகியோரின் பெருமுயற்சியால் தம்மால் முடிந்த பலரையும் இணைத்து செயற்பட்ட பாங்கு மிகவும் பாராட்டிற்குரியது. அதன்பால் நிர்வாகத்தினரின் உறுதியான செயற்பாட்டினால் ஊரவர்களையும் இணைத்து இப் பெருமை மிகு கட்டுமானத்தையும் வளத்தையும் வழங்கியுள்ளார்கள்.

இதன் முழுப் பலனையும் எல்லோரும் நுகர வேண்டும். ஆதலால் இந்த சனசமூகநிலையத்தை மிகவும் நன்றாக பராமரித்து செயற்படுவார்கள் என்கின்ற தூய நன் நம்பிக்கை நம் ஊரவர்கள் யாவர்க்கும் ஏற்பட வேண்டும். எங்களின் இளைஞர்களையும் அவர்களை வழி நடத்துபவர்களையும் ஊர் மக்கள் முழு நம்பிக்கை கொண்டு அவர்களின் நிறைகுறைகளை எடுத்துக் கூறி ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட எதிர்பார்ப்பாகும்.

எனவே ஊர்மக்களின் பாராட்டிற்குரிய இந்த இளைய சந்ததிகளை நன்கு ஊக்குவித்து நமது தொடர் பராமரிப்பில் வைத்திருக்க உதவவேண்டும். உதவுவார்கள் எனும் நம்பிக்கையும் எனக்கு உண்டு.

கலட்டியென ஏளனம் செய்தவர்கள் வியந்துரைக்க ஒரு அரும்பெரும் விருட்சத்தை உருவாக்கி சகலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ள எம்மவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

எங்கள் ஊரில் நான் அறிய நடந்த அல்லது நடாத்தி காட்டப்பட்ட சில நிகழ்வுகளை இங்கு பகிர்வது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். அண்ணளவாக 50 வருடத்திற்கு முன்பு வாசிகசாலை நிர்வாகத்தால் திரு. வைத்திலிங்கம் பீதாம்பரம் (ஓய்வு பெற்ற கணக்காளர்) அமரர். திரு. சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் செல்லத்தம்பி (வங்கியாளர்) போன்றவர்களின் முயற்சியால் பசும்பால் காய்ச்சி சிறார்களிற்கு பரிமாறப்பட்ட நிகழ்வு இன்னமும் பசுமையாக நினைவில் உள்ளது.

மேலும் அடுத்து வந்தவர்களினால் பரியாரிவளவில் சிவராத்திரி அன்று அரங்கேறிய நாடகங்களில் திரு. நாகலிங்கம் வரதராஜா (உதவிப் பணிப்பாளர், கல்வி அமைச்சு), திரு. செல்வராஜா சுந்தரமூர்த்தி (வைத்தியர்), திரு. செல்வராஜா சிதம்பரநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்), தியாகராஜா மாணிக்கம் ஆகியோருடன் இன்னும் பலர் இணைந்து இந்நாடகம் மேடையேற்றப்பட்டது நினைவு கூறத்தக்கது.

எமது வாசிகசாலையின் ஆண்டு விழாவை சிறப்பாக பல கலை நிகழ்வுடன் நடாத்தியுள்ளதை இந்த வேளையில் பதிவு செய்வது பொருத்தமாக இருக்குமென நம்புகின்றேன். எனது நண்பர்களான திரு. கந்தசாமி யோகநாதன் (கனடா), திரு. கந்தசாமி பாலேஸ்வரன் (கனடா), திரு.செல்வராஜா சிறீகாந்தா (கனடா), திரு.பரமானந்தன் மகேந்திரன் (அபுதாபி), திரு.கிருஸ்ணபிள்ளை கெங்காதரன் (பட்டதாரி ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி), மேலும் திரு.சுப்பிரமணியம்

விவேகானந்தன் (சின்னப்பு), திரு.திருநாவுக்கரசு பேரின்பநாதன் (ஜேர்மனி) திரு.சுப்பிரமணியம் குமாரகுலசிங்கம் (ஜேர்மனி), சந்திரசேகரம் ஞானசேகரம் (ஜேர்மனி), திரு.சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் (கிராமசேவையாளர்), அமரர் சிவகடாட்சம் ரவீந்திரன் ஆகியோரால் தயாரித்து மேடையேற்றப்பட்ட சமூக சரித்திர நகைச்சுவை நாடகங்கள் வெகு சிறப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அந்த நேரம் திரு. பாலகிருஸ்ணன் திரு.இரகுவரன் (ஆசிரியர் ஹாட்லி கல்லூரி) அவர்களின் கையெழுத்துப் பிரதியாக "குயிலோசை" எனும் சஞ்சிகையும் வெளிவந்து பலரின் பராட்டைப் பெற்றது. இதில் கேள்வி பதில் பகுதியை திரு. திருநாவுக்கரசு பேரின்பநாதன் (ஜேர்மனி), திரு.சுப்பிரமணியம் விவேகானந்தன் (சின்னப்பு) ஆகியோரின் நகைச்சுவையான பதிலால் நிரவியிருந்தார்கள்.

பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகமாக தும்பளை மேற்கு "நாவலர் விளையாட்டுக்கழகம்" விளங்கியது. இந்த பதிவை செய்ய உந்துதல் தந்தவர்களில் முதன்மையானவர் அதிபர் அமரர்.தங்கராசா ஆவார். இதை பதிவு செய்வதில் திரு. இராசதுரை மகேந்திரன் (இளைப்பாறிய கடற்படை மின் இணைப்பாளர்) அவர்களுடன் நானுமாக இவ் விளையாட்டு கழகத்தை பதிவு செய்தோம்.

மேலும் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தோம். இதில் திரு, கார்த்திகேசு வேந்தன். (வவுனியா) அவர்களின் தலைமையில் நானும் திரு.இராசதுரை மகேந்திரன், திரு.சதாசிவம் சிறீகாந்தன் (நியூசிலாந்து), திரு.சதாசிவம் உமாகாந்தன் (ஆசிரியர் அவுஸ்ரேலியா) அமரர் திரு. தங்கராசா ஆகியோர் பங்கு பற்றியிருந்தோம்.

எமது துடுப்பாட்ட அணியில் ஆரம்பப் பந்து வீச்சாளர்களாகவும் ஆரம்ப துடுப்பாட்ட வீரகளாகவும் திரு,சு.விவேகானந்தன்(சின்னப்பு), திரு.தி.பேரின்பநாதனும் விளங்கினர். மேற்குறிப்பிட்டவர்களுடன் திரு.சபாரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா (வீதி அபிவிருத்தித் திணைக்களம், அனுராதபுரம், திரு. கணபதிப்பிள்ளை தவயோகநாதன் (ஆசிரியர் வட இந்து மகளிர் கல்லூரி), அமரர் அருட்பிரகாசம் (ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) சகோதரர்களான அமரர் சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா (பிரதம லிகிதர் மீன்பிடித் திணைக்களம் மன்னார்), சுப்பிரமணியம் அருட்கந்தராசா (பிரான்ஸ்) திரு.சிவசுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா (நில அளவைத் திணைக்களம் யாழ்ப்பாணம்), திரு.கந்தசாமி பாலச்சந்திரன் (ஜேர்மனி) இவர்களுடன் சில போட்டிகளுக்கு இளையவர்களான திரு. சிவசுப்பிரமணியம் ஜெயராஜா (ஜேர்மனி), திரு.சிதம்பரநாதன் அருளானந்தம் (புலிக்குட்டி) போன்றோர்களையும் இணைத்து போட்டிகளில் பங்கு பற்றினோம்.

அத்துடன் அஞ்சலோட்டம், மரதனோட்டங்களில் கூட அணியின் ஓட்ட வீரர்களான நானும் திரு. இராசதுரை மகேந்திரன், திரு.பா.இரகுவரன், திரு.சதாசிவம் ஸ்ரீகாந்தன், திரு.கார்த்திகேசு பத்மநாதன் (லண்டன்) ஆகியோர் பங்கு பற்றியிருந்தோம்.

மேலும் கழகத்தினரால் ஊர் இளையோரையும் இணைத்து ஊர் மத்தியிலுள்ள வயல் வெளியில் பாரியளவில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. அதில் பல வகையான விளையாட்டு நிகழ்ச்சிகளுடன் வினோத உடைப் போட்டியில் திரு. கந்தசாமி யோகநாதன், திரு. பரமானந்தன் மகேந்திரன் இருவரும் பறையும் தம்பட்டமும் முறையாக அடித்து அந்த சமூகத்தார் போல வேடிக்கையாக சம்பாஷணை செய்து பிரதம விருந்தினர் உட்பட பலராலும் பாராட்டப்பட்டு முதல் பரிசையும் தட்டிக் கொண்டனர்.

எம்முடைய பயிற்சிப் போட்டிகளுக்கு திரு.செல்வராஜா உமாபதி (தேசிய நீர் வழங்கல் அதிகார சபை யாழ்ப்பாணம்) திரு சதாசிவம் உமாகாந்தன் திரு. நடராஜா இரகுநாதன் (ஆசிரிய ஆலோசகர் வவுனியா) ஆகியோர் முழு ஆதரவையும் ஆலோசனையையும் வழங்கியிருந்தனர்.

வாசிப்புப்புத்தாகம் கொண்டவர்களாக திரு.நடராசா ரகுநாதன், திரு செல்வநாயகம் அருண்மொழி (தலைமை ஆசிரியர் ஆறுமுகத்தான் புதுக்குளம்), திரு.பாலகிருஸ்ணன் இரகுவரன் (ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி), அமரர் நடராசா கணேஸ்வரன் (விவசாய பட்டதாரி நியூசிலாந்து) போன்றோர் அவ் அறிவை சக நண்பர்களுடன் சுவையுடன் பகிர்ந்து கொள்ளும் பாங்கானது வியக்கத்தக்கது.

எமது காலத்தில்தான் பெரியதம்பிரான் கோயிலில் முதன் முதலில் சூரன் போர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தோம். இந்த நிகழ்வு அமரர் ஏகாம்பரநாதன் சிவானந்தன், திரு.ஏகாம்பரநாதன் அருள்செல்வம் (அரசஒப்பந்தக்காரர் வவுனியா) திரு.சபாரத்தினம் சிறீஸ்கந்தராசா, திரு.தம்பிராசா உதயமூர்த்தி (மக்கள் வங்கி பருத்தித்துறை) ஆகியோரின் பெரும் உந்துதலினாலும் முயற்சியினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்போதும் இந்த நிகழ்வு தொடர்ந்தும் நம் இளையோர்களினால் மிக சிறப்பாக நடாத்தப்படுவது சிறப்பாக உள்ளது.

சனசமூக நிலையம், கோயில் உற்சவங்கள், விளையாட்டுக்கழகம் என ஈடுபாடு கொண்டவர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் பிரிவினை இன்றி ஒற்றுமையுடன் இருந்த எனதான இனிய நண்பர்களை நினைக்க உவகையாக உள்ளது.

எமது காலகட்டத்தில் எமது சிந்தனைக்கும் செயலிற்கும் அப்பாற்பட்ட விடயமாக இருந்த சொந்த நிலம், கட்டிடம் என்கின்ற தொலைநோக்கமானது எமது இளைய சந்ததியின் கனவாக உருவாகி இன்று நனவாகி திறப்பு விழாவும் ஆண்டு விழாவும் ஒன்று சேர நடைபெற இருப்பதை (16.04.2012) எண்ணும்போது பேருவகை கொள்ளாமல் யார்தான் இருக்க முடியும்.

அதன் செயலாக்கத்திற்காக நவீன விஞ்ஞான சாதனத்தின் சமூகத்தளமாகிய முகநூலிலும் இணையத்தளத்திலும் அதன் சகல பரிமாணங்களையும் உள் வாங்கி சரியான முறையில் பதிந்து அதை உலக வலத்தில் வாழும் எமது

மக்களிடம் சேர்ப்பித்து பெரும் பணிசெய்த எமது இளையோர்களின் பெயர் விபரங்களை வெளியிடாமல் இந்த ஆக்கத்தை முடிப்பது நிறைவாகாது. அந்த வகையில் இணையத்தை உருவாக்கியவர்களில் திரு. இராசேந்திரா பாலேந்திராவும் (பொறியிலாளர்) திரு. பஞ்சாட்சரம் குமணனும் மற்றும் செயற்பாட்டாளர்களில் சதாசிவம் சிறீகாந், சிறீ சங்கநாதன், கமலநாதன் சுதர்சன், நந்தகுமாரன் நிதர்சன், ஆகியோரை குறிப்பிடலாம்.

சனசமூக நிர்வாக சமூகம் தூய நோக்குடன் தமது உறுப்பினர்களுடன் புலம் பெயர்ந்த நம்மவர்களையும் ஊரவர்களையும் இணைத்து பெருமுயற்சியுடன் இந்த நிலையத்தையும் தரப்பட்ட வளங்களையும் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கிய நிகழ்வினை மீண்டும் ஒரு முறை மானசீகமாக பாராட்டுவதோடு தொடர்ந்து நன்கு பராமரிக்கப்படவேண்டும் என எங்களின் பெரியதம்பிரானை வேண்டி இச்சிறு ஆக்கத்தினை நிறைவெழுதுகிறேன்.

"நன்றி"

## எனது முயற்சியும் ஊரவர்களின் உந்துதலும்

இன்று காத்திரமாக பெரு எழுச்சியுடன் வீற்றிருக்கும் இந்த சனசமூகநிலையத்தை பார்க்கும்போது நானும் இதன் வளர்ச்சியிலும் உருவாக்கத்திலும் ஆற்றிய சிறு பங்களிப்பை ஆத்மார்த்தமான செயற்பாட்டை பதிய முனைகின்றேன்.

சனசமூக நிலையத்திற்கான நிதி சேர்ப்பதில் எமதூரவர்களை தேடி அவர்களுக்கு எமது நிலைபற்றி விபரிக்கவும், தொடர்பாடவும் நவீன விஞ்ஞான சாதனம் பெரு உதவி புரிந்துள்ளது.

ஆம்!

சமூகத்தளமான முகநூலின் உதவி பல சாதகமானதும் சில பாதகமானதுமான பங்களிப்பை வழங்கியுள்ளதென்றால் அது மிகையாகாது.

நான் இந்த வலைத் தொடர்பாடல் மூலமே ஊரவர்களினூடான தொடர்பை பேணினேன். இதன் மூலமே எனக்கு தேவையான சகல தகவல்களையும் பெற்றுக் கொண்டேன்.

ஆரம்ப காலங்களில் தொடர்பாளராக திரு. பஞ்சாட்சரம் குமணன் ஆற்றிய சேவையையும் நினைத்துப் பார்க்கின்றேன்.



பதிவுகள் தொடரும்,
ஜேர்மனியிலிருந்து தொடர்பாளர்,
என்றும் ஊரவன்,
சு.குமார்.

எமது சனசமூக நிலையத்திற்கான ஒரு பக்கத்தை சமூக வலைத்தளத்தில் நிர்மாணித்து தமக்கு தெரிந்த தகவல்களையும் சில வரலாற்றுப் பதிவுகளையும் மேற்கொண்டு இதை சகலரும் பார்க்கத்தக்க வகையில் அதை விரிவாக்கி உலக வலத்தில் உலவ விட்ட எமதூரக இளையோரின் பங்களிப்பையும் இந்த தருணத்தில் நெகிழ்வுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

(இணைய உருவாக்கம் திரு. இராசேந்திரா பாலேந்திரா (பொறியியலாளர்)

ஆரம்பத்தில் இந்த கட்டுமானப் பணியில் பங்கேற்கும் மனோபாவம் உடனடியாக எனக்கு ஏற்படவில்லை. ஆண்டு 2009ல் திரு.திருநாவுக்கரசு பேரின்பநாதன் (ஜேர்மனி) அவர்களின், சனசமூகநிலையம் சார்பான ஒரு அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றது. இதில் வெளியிடப்பட்ட தகவலின் பிரதிகளை நாம் கனடா சென்றபோது அங்குள்ள ஊர்மக்களிடமும் எனக்குத் தெரிந்த நண்பர்களிடமும் விநியோகம் மட்டுமே செய்தேன். நிதிபற்றி எவ்வித உரையாடலையும் அந்த சந்தர்ப்பத்தில் நான் ஏற்படுத்தவில்லை. அதற்கான அக,புற காரணிகளும் எனக்குள் முழுமையாக அமையவில்லை.

பலநாள் சிந்திப்பின் முடிவில் திடகாத்திரமான முடிவொன்றை எனக்குள் ஏற்படுத்திக்கொண்டு நிதி சேகரிக்கும் நற்பணியை ஆரம்பித்தேன்.

எனக்கு ஏற்கனவே மிகவும் தெளிவாகத் தெரிந்த விடயம் இந்த நிதியை உடனடியாக பெருமளவில் எம்மவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது அவ்வளவு சாத்தியமற்றது. எனவே நாம் ஆரம்பகட்ட நிதி சேகரிப்பை எவ்வித சஞ்சலமுமின்றி தொடர எண்ணினோம். இதன் மூலம் எம் கலட்டிவாழ் மக்களின் நிலைப்பாட்டையும், அவர்களின் காத்திரமான எண்ண, செயலோட்டங்களையும் அவதானித்து அதன்பின் இவர்களின் பங்களிப்பு நிலையில் என்ன மாதிரியான ஊடாட்டம் உள்ளதென்பதையும் அறிய இந்த ஆரம்பகட்ட நிதி சேகரிப்பு உதவியது.

ஆயினும் எம் ஊரவர்களின் மனவோட்டத்தில் அவ்வளவு காத்திரமான பிடிமானம் உள்ளதாக அறியமுடியவில்லை. அதுதான் நிஜமென்பது பல உரையாடல்கள் மூலம் அறிய முடிந்தபோதும் எக்காரணம் கொண்டும் எடுத்த காரியத்திலிருந்து பின்வாங்குவதில்லை என்ற பெருமுனைப்பையே என்னால் எனக்குள் கட்டமுடிந்தது. இது தந்த வைராக்கியமும், வேறுசில முன்னணி நண்பர்களின் தொடர்பும் எனக்குள் இன்னமும் ஆழமான ஆதங்கத்தை விதைத்தது. அந்தரீதியில் முன்மாதிரியாகவும் பலரீதியில் பின்னணி செயற்பாட்டாளனாக எனது ஆதர்ச நண்பன் திரு.கந்தசாமி பாலேஸ்வரன் (கனடா) அவர்களின் செயற்பாடும், கருத்தாடலும் ஊக்குவிப்பும் ஒரு முன்னேற்றப்பாதையை, பெருநம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தியிருந்தது என்பது வெகு யதார்த்தம். இந்த ஆக்கத்தின் மூலம் எனதான பெரு நன்றியை நண்பனிற்கு சமர்ப்பிப்பதில் மன நிறைவடைகின்றேன்.

என்னால் இந்த சமூக வலைத்தளத்தில் சனசமூக நிலையத்திற்கான நிதி சேகரிக்க எழுதப்பட்ட வரைபுகள் பல உண்டு. அவற்றை பின்னிணைப்பாக வெளியிடலாமென எண்ணுகின்றேன்.

1. எனதான முகநூலில், சுயவிபரத்தில் எனது எதிர்பார்ப்பு என்னவென்பதை மிகவும் விளக்கமாகவும், துல்லியமாகவும் எழுதி எம்மவர்களது பார்வைக்கு வைத்தபொழுது யாரிடமிருந்தும் உடனடியாகவோ அன்றி காலதாமதமாகவோ எவ்வித பிரதிபலிப்பும் ஏற்படவில்லை அல்லது எவ்வித கருத்தும் முன்வைக்கப்படவில்லை. தொடர்ந்து நானும் ஒவ்வொருவரிற்கும் தனித்தனியாக தகவல்களை அனுப்பியும் ஒளியூடகத்தினூடாக கதைத்தும் எதிர்பார்ப்பைக் கூறியிருந்தேன்.

2. சரியான சாதகமான பதிலென்பது கிடைக்கவில்லை. எனவே ஆரம்பகட்டமாக ஆளிற்கு 100யூரோ என அறிவிக்கவேண்டிய தேவையேற்பட அதுவே முதற்கட்ட பங்களிப்பாக நாம் இயங்கு நிலைக்குள் இறங்கினோம். ஜேர்மனியில் நிதிசேகரிக்க திரு.திருநாவுக்கரசு பேரின்பநாதன் அவர்களுடன் நானுமாக சுயமாகவே இயங்கவேண்டிய நிலையேற்பட நாம் செயல்படத் தொடங்கினோம்.

3. இதற்குள் சிலர் எனதான சனசமூகநிலைய தொடர்பிலிருந்து விலகுவதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

4. எனினும் திரு.தி.பேரின்பநாதன் தன்னுடன் தொடர்பை பேணியவர்களுடன் நிதியை சேகரிக்க, அத்துடன் நான் சேகரித்ததுமாக முதற்கட்ட நிதியை சனசமூக நிலைய நிர்வாகத்திற்கு அனுப்பி பணியை ஆரம்பிக்கும்படி கூறியிருந்தேன்.

5. முழுநிதியையும் சேர்க்காமல் பணியை ஆரம்பிப்பது நன்றல்ல என்றும், யாரைக்கேட்டு இப்படி முடிவெடுத்தாய்? என ஒருவர் என்னுடன் அங்கலாய்க்க அவருடனான தொடர்பை நான் முற்றாகவே நிராகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். காரணம் இவரோ ஒரு வித பங்களிப்பும் செய்வதும் இல்லை. மேலும் எனக்கு வாரமொருமுறை தொடர்பில் வந்து அழுத்தங்களைக் கொடுக்க, நான் தவிர்க்க முடியாமல் அப்படி செய்ய வேண்டியதாயிற்று.

6. மேலும் எனக்கு தனிப்பட்ட ரீதியில் தெரிந்த ஒரு சிலருடன் நமது எதிர்பார்ப்பையும் சனசமூகநிலைய தேவையையும் எடுத்துக்கூறியபோது விளைவாக எதுவுமே விளையவில்லை என்பதுவும் பெரும் ஏமாற்றமாக தென்பட அதுவே இன்னமும் வேகமாக இயங்க வேண்டிய தேவையை எனக்குள் ஏற்படுத்தியது. என்றால் மிகையாகாது.

7. இவர்கள் முன்னின்று எமக்கு தமதான பெரும் நிதிக் கொடுப்பனவுகள் மூலமும், வழிகாட்டியாகவும் செயற்பட்டு எமதூரவர்களை உள்வாங்கி கட்டுமானப்பணியை துரிதப்படுத்த தங்களது கால பங்களிப்பை ஆற்றியிருக்கலாமே என எனக்குள் எழும் தார்மீக ஆதங்கத்தை தவிர்க்கவே முடியவில்லை.

8. இது எங்கள் ஊர். நாம்தான் இதை எமதான காத்திரமான நிதிக்கொடுப்பனவால், கருத்துக்களால் மக்களை வென்றெடுத்து அவர்கள்பால் ஒரு தார்மீகமான உணர்வுகளை ஏற்படுத்தி அதன் அனுகூலமாக இப்பணியை அரங்கேற்றி முடிக்கவேண்டும் என்ற எவ்வித முற்போக்கான எண்ணமே அற்றிருந்தது. ஆகவே இவர்களின் நடைமுறைக்கு அப்பாற்பட்ட எண்ணங்கள் எனக்குள் இன்னமும் ஒருவித தார்மீக கோபத்தை ஊரவர்கள் என்கின்ற ரீதியில் இவர்கள்பால் ஏற்படுத்தியது. ஆயினும் யாருடனும் எவ்வித தர்க்கமும் பண்ணாமல் அவர்களின் பங்களிப்பை எதிர்பார்த்தேன். இப்போதும் எதிர்பார்த்தபடியே உள்ளேன். விளைவு சாதகமாகவே அமையவில்லை. அமையலாம். எதிர்வு கூறமுடியாத அவிபாகமது.

9. பொது வேலைத்திட்டத்தில் இயங்க குமார் யார்? இவரிற்கு என்ன தகுதி? என சில குரல்கள் சீறின. சிலர் திட்டினர். கண்டிக்கப்பட வேண்டிய சூழல், இருந்தும் கடிமுகம் விலக்கி காந்தளாக கருக் கொண்டேன்.

10. இப்போது கனடாவிற்குள் எனதான தொடர்பை பதிவெழுதுவது காலக்கடனாகின்றது.

11. கனடாவில் நிதி சேகரிக்க திருமதி.நிர்மலா சிவா அவர்களை பரிந்துரை செய்து அவர் வீட்டில் ஊரவர்களினுடனான சந்திப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள கனடாவில் நிதி சேகரிப்பு சூடு பிடித்தது.

12. அங்கு நடந்த கருத்துப்பரிமாற்றத்தில் எமதூரவர் ஒருவரின் கருத்து பின்வருமாறு அமைய மனம் கனத்துப்போகின்றது. ஊரில் வாழும் மக்கள் எவ்வளவு? "இத்தனை பேருக்கு இத்தனை செலவில் சனசமூக நிலையம் தேவையா? முதலில் எங்காவது வாடகை வீட்டில் சனசமூகநிலையத்தை நடத்தட்டும், அப்புறம் பார்த்து ஏதாவது செய்யலாமென"

இவ்வாறான கருத்துக்கள் மத்தியிலும் இன்னமும் மும்முரமாக ஒரு குறிப்பிட்டவர்களின் இலங்கல்களால் எமது எண்ணம் பெரும் பொறிமுறையாக, எனதான ஆரம்ப கால வேண்டுதலை உள்வாங்கி செயற்பட்ட கனடாவாழ் இன்னிதயம் கொண்ட எமதூரவர்களால் ஆளிற்கு 1000 கனேடிய டொலரென எதிர்பார்த்த நிதியைவிட மேலதிகமாக 1500 கனேடிய டொலரை முன்மாதிரியாக கொடுத்து மற்றவர்களிடமும் தன்னாலான ஆதங்கத்தை வெளிப்படுத்தி இப்பணியில் முன்னின்ற திரு.தம்பிராசா சிறீஸ்கந்தராசா.
நன்றி ஐயா.

மேலும் எனதான தொடர்பாடலில் உடனடியாக எவ்வித சங்கோசமும் இன்றி பெருமெடுப்பில் இணைந்த திரு.கந்தசாமி பாலேஸ்வரன், பாலேஸ்வரன் செல்வராணி, திரு.கார்த்திகேசு தர்மலிங்கம், திரு.திருநாவுக்கரசு தேவகுமார், எனது சகோதரன் சுப்பிரமணியம் குகன், தியாகராஜா புவிதரன், தில்லைநாதன் தங்கநாதன் ஆகியோரின் பெருநிதியுடன் மருத்துவர் நிர்மலா சிவாவும் தனதான பெருநிதியையும் உவந்தளித்து, மேலும் மற்றவர்களிடமும் சிறிய தொகையாயினும்

அவைகளையும் பெற்று தேவையறிந்து சேவை செய்து அப்போதைய உடனடி தேவையை பூர்த்திசெய்த அந்த மகத்தான விருப்பை நிறைவாக மீட்டிக் கொள்கின்றேன். இதை பதிவெழுத என் வார்த்தைகள் தடுமாறுகின்றன. அவ்வளவு காத்திரமான இயங்கல்கள் இதற்காகவே ஒரு பக்கத்தை ஒதுக்கினாலே இதன் தார்மீகம் புரியும்.

நிற்க! இந்தவேளையில் தங்களாலான நிதி தந்து எம் ஊரகஉறவுகளின் கரங்களை இறுகப்பற்றிக்கொண்ட அத்தனை நிதியாளர்களையும் இந்த பதிவின் மூலம் மீண்டும் அகங்கொள்கின்றேன். இந்தவேளையில் கனடாவில் மருத்துவர் திருமதி.நிர்மலா சிவா அவர்களது வீட்டில் நடந்த கூட்டத்தின் சாராம்சம் முகநூலில் வெளியான எனதான பார்வையில் என்கின்ற சிறுகுறிப்பை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என தாராளமாகவே நம்புகின்றேன்.

விபரம் கீழே!
கனடாவில் நடந்த தும்பளை மேற்கு சனசமூகநிலைய கட்டட நிர்மாணப்பணிக்கான கலந்துரையாடலின் போது நடந்த வாதப்பிரதிவாதங்கள் பற்றிய ஒரு பார்வை.

19.02.2011 சனிக்கிழமை மாலை 7மணியளவில் Dr.நிர்மலா சிவா அவர்களின் தலைமையுரையுடன் ஆரம்பித்த கலந்துரையாடல் சுமார் 6மணித்தியாலங்கள் வரை நீடித்தது. தொடக்க உரையின் போது Dr.நிர்மலா சிவா அவர்கள் சனசமுகநிலையத்திற்குத் தேவைப்படும் நிதிபற்றியும் அரசால் வழங்கப்பட இருந்த நிதி கிடைக்காமை பற்றியும் எடுத்துரைத்தார். அடுத்தகட்ட நடவடிக்கையாக கனடாவாழ் கலட்டிச் சமூகத்திடமிருந்து மீண்டும் நிதி திரட்டுவதுப்பற்றிப் பேசினார். அதைத்தொடர்ந்து திரு.த.சிறீஸ்கந்தராசா அவர்கள், எல்லோரும் இயலுமான நிதியுதவி வழங்கவேண்டும் என்பதை நயமாகவும் நகைச்சுவையுடனும் எடுத்துரைத்தார். அதனைத்தொடர்ந்து பேசிய திரு.மு.கணேந்திரன் அவர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் எம்கிராமத்தவர் 20 வருடத்திற்கு மேலாக வாழ்ந்து வந்தபோதிலும் கிராம வளர்ச்சியில் எவ்வித பங்களிப்பும் வழங்கவில்லை என்பதை வேதனையுடன் வியந்துரைத்தார். திரு.தி.தேவகுமார் மற்றும் திரு.மங்களரூபன் ஆகியோரும் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறினார்கள். இதற்கிடையே தாயகத்திலிருந்து கணினி ஊடாக தொடர்பை ஏற்படுத்தி திரு.த.சிறீஸ்கந்தராசா, தும்பளை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகப் பொருளாளர் திரு.கு.பஞ்சாட்சரத்துடன் பேசுமாறு கேட்டுக்கொண்டார். பலரின் கேள்விகளுக்கு அமைதியாகவும் புள்ளிவிபரங்களுடனும் பதிலளித்தார். அதன்பின் பேசிய ஒருவர் 120 குடும்பங்கள் அங்கத்தவர்களாக இருக்கும் சனசமூகநிலையத்தில் வாசிப்பவர்கள் 360பேர் இருப்பார்கள் என்று வைத்துக்கொண்டாலும் இவர்களுக்காக 70இலட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு சனசமூகநிலைய கட்டடம் கட்டுவது அவசியம்தானா? என்று கேள்வி எழுப்பியவர், முதலில் வாடகைவீடொன்றில் சிறப்பாக ஒரு சனசமூகநிலையத்தை இயக்கி நிரூபித்துக்காட்டிய பின் இப்படியான ஒரு கட்டடத்தை கட்டலாம் என்ற கருத்தை முன்வைத்தார். இவரின் இக்கருத்து பலரின் கவனத்தை ஈர்த்ததுடன்

கூட்டத்தில் ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தியது. இதற்கு Dr.நிர்மலா சிவா அவர்கள் பதிலளித்து உரையாற்றினார். அடுத்து திருமதி.பவானி தர்மலிங்கம் 69வருடங்களாக ஒரு நிரந்தரகட்டடம் இல்லாது நிலையத்தை நடத்தும் எமது கிராமத்து மக்களுக்கு இந்த கட்டடம் அவசியம்தான் என்பதை எடுத்துரைத்தார்.அமைதியாக அமர்ந்திருந்த திரு.க.யோகநாதன் எழுந்து சனசமூகநிலையத்தின் அவசியம் பற்றி விளக்கமளித்தார். திரு.தி.தேவகுமார் (Babi) அவர்கள் கிராம வளர்ச்சிக்கு சனசமூகநிலையம் அவசியம் தேவையென்றும், எதையும் தொலைநோக்குப் பார்வையில் பார்க்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். அடுத்து இங்கு தொடர்ந்து செயல்பட ஒரு நிர்வாகசபை தேவை என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர். அதன்பின் நிர்வாகசபைத் தெரிவு நடைபெற்றது.

நன்றி.

இவ்விடத்தில் இது பற்றி ஏதும் நான் விதந்துரைக்க தேவையில்லைஎன கருதுவதால் இதை வாசகர்களின் கவனத்திற்கே விடுகின்றேன்.

இப்படியான பதிவுகள் ஒரு ஆவணமாக எம் எதிர்கால சந்ததியினருக்கு உதவும் என்பதால் இவைகளையும் பதிவேற்ற விழைகின்றேன்.

சாராம்சம்.
நிதி சேகரிப்பு என்பது கல்லில் நாருரிப்பதைவிட கடினமானது எமது ஊரவர்களிடம்.

சிந்தித்துப்பாருங்கள் இந்தக்கட்டுமானத்தை முடிக்க இருவருடத்திற்கு மேற்பட்ட காலம் தேவைதானா?

வெளிநாடுகளில் வசிக்கும் எம் ஊரவர்கள் ஒருங்கே திரண்டால் இது ஆறுமாதம் கூட தேவையில்லாத வேலைத்திட்டமாகும்.

இங்கு எழும் வினாக்கள் யதார்த்தமானது. என்னை நானே இன்றுவரையும் கேட்டுக்கொள்ளும் கேள்விகள் இவை.

1. எமது ஊரகவளர்ச்சியில் ஊரில் இயங்கும் இளைய தலைமுறைகளிற்கு உள்ள அதீத ஈடுபாடு வெளிநாட்டில் வாழும் எமதூரவர்களுக்கு இல்லாமல் போனது ஏன்?

2. ஒற்றுமையாக இயங்கும் வல்லமையோ அன்றி சேவை மனப்பான்மையோ அறவே அற்றுப்போனதன் காரணம் யாது?

3. ஊர், சமூகம், பொது வேலைத்திட்டம் ஆகியவற்றில் ஈடுபாடோ அன்றி ஒத்துழைப்போ அற்றுப் போனதன் மூலக் கூறு யாது?
4. உதவிதான் செய்யாவிடினும் உபத்திரம் தரும் மார்க்கம் கூட களையப்படாதது ஏன்?

5. எமது கடந்தகால சந்ததி செய்யத் தவறிய பாரிய சில பொது வேலைத்திட்டங்களை எமது சந்ததியும் செய்யமுடியாமல் விலகுவது அல்லது பாராமுகம் காட்டுவது ஏன்?

6. எமது வாழ்நாளில் நாம் எமது எதிர்கால சந்ததிகட்கு, ஊரவர்க்கு ஆற்றும் இப்படியான வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய இச்சந்தர்ப்பத்தை நழுவ விடுவது முறையானதுதானா?

7. வெளிநாட்டில் வாழும் நாம் எமது ஊரிற்கு, நாட்டிற்கு எதைச் செய்து கொடுத்தோம்? அல்லது செயலாற்ற வேறு என்ன திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வைத்துள்ளோம்?

8. வெந்ததை திண்டு வேளை வந்தால் சாகும் மனப்பான்மையை எப்போது களைவதாக உள்ளோம்? சமூக காவியாக வாழ்வதிலும், சமயச் சடங்குகளை கைக்கொள்வதிலும் நாம் சாதித்தது என்ன? சாதி, மத பேதத்தை தவிர???

9. பிறந்து, தவழ்ந்து, எழுதப்படிக்கவைத்து, எமை ஆளாக்கிய பெற்றோர், உற்றார், உறவினர், ஊரவர் இப்படி நற்றோர் வாழும் நம் நானிலத்திற்கு நல்ல உருப்படியான காரியம் எதுவும் ஆற்ற வக்கற்றவர்களாக வெளிநாட்டில் வாழுதலில் நாம் கற்றுக்கொண்ட நற்பாடம்தான் யாது?

10. புரிதலும் உணர்தலும், உதிரத்தால் உணரப்பட்டாலன்றி மாற்று வழி ஏதும் இல்லை. இதற்கு கல்விமானாகவோ, அன்றி பெருமகனாகவோ இருக்க வேண்டும் என்பதில்லையே.

11. பத்தும் பெற்றும் பெருவாழ்வு இல்லை நாம் உற்ற ஊரிற்கு பிறவிக்கடனாற்றாமல்,
புரிந்துணர்வுகளும், தெரிந்து கொள்ளலும் அனுபவச் சான்றுகள்.

எமது நிதியாளர்களின் நிலைப்பாட்டில் மேலதிக பற்றுப்பாடு மிளிரும் இந்த நல்நம்பிக்கை வீண்போகாது. காரணம் நாம் இப்போது எமது இலக்கின் இறுதிப்படியில் நிற்கின்றோம். இந்த ஆக்கம் அச்சேறமுன் நற்சேதிகள் நமை வந்தடையும். அந்த ஆரோக்கியமான நிலைப்பாட்டின் படிக்கல்லில் நிற்கின்றேன். தொடர்ந்தும் இவர்களின் பற்றுதியான நிதிக் கட்டுமானம் தொடரும் என தார்மீகமாக எதிர்பார்க்கின்றேன்.

முக்கிய குறிப்பு:

இதில் தாங்களாகவே நிதியனுப்பியவர்கள் விபரம் இணைக்கப்படவில்லை. இந்த நிதியை தங்களது ஆத்மார்த்த செயற்பாடாக்கி எமது சனசமூகநிலைய

கட்டுமானத்திற்கு நிதிவழங்கிய அத்தனை உணவர்வாளரிற்கும் சனசமூகநிலையம் சார்பாக எனது நன்றிகள். இதுவரையில் கனடாவிலிருந்து கிடைத்த மொத்த நிதி 13420 கனேடிய டொலராகும்.

இக்காத்திரமான நிதிகள் தந்த அத்தனை இணைந்த உள்ளங்களையும் நெகிழ்வுடனும், கனிவுடனும் அவர்களின் கரங்களை நேசத்துடனும் ஊரக பாசத்துடனும் பற்றிக்கொள்கின்றேன்.

தொடர்ந்து இவர்களின் நிறைவான நிதி கிடைக்கும் அதற்கான ஆயத்தங்களில் எனது தொடர்பாளர்கள்.

ஆக!

என்னாலான தொடர்பாடல்கள் மூலமும், ஆத்மார்த்த நண்பர்கள் மூலமும் இப்பெரு நிதிகளை சேகரிக்கக்கூடியதாக இருந்தது என்றால் அது மிகையாகாது. அனைவருக்கும் எனது சிரம் தாழ் வணக்கங்களும், என்றென்றும் இலங்கும் நன்றிகளும்

மேலும்!

எமது சனசமூகநிலைய விழா மலரிற்கான செலவுகளை பகிர்ந்துகொள்ள முன் வந்தவர்களாக ஜேர்மனியில் நானும் திரு.சிவஞானம் வாசன், திரு.செல்வரத்தினம் சாந்தலிங்கம் அத்துடன் இவர்களை தவிர நான் வாழும் இம் மாநகரில் (ஜேர்மன்) உணவகம் வைத்திருக்கும் எனது நண்பர்கள் இருவரை அணுகி விழாமலர் பற்றிக் கூறினேன்.

அவர்களின் இனிய ஒத்துழைப்பும் உடனே கிடைத்தது. அவர்களையும் இந்த பதிவில் சேர்ப்பதே பண்பான காலக்கடன் ஆகும்

கணேசா உணவகம்.

உரிமையாளர் : திரு.சுப்பிரமணியம் விக்கினேசுவரன்

முகவரி : Lemverg str-19, 70186 Stutgart, Germany.

விநாயகா உணவகம்.

உரிமையாளர் : திரு.நல்லையா சிவானந்தம்

முகவரி : Ostend str -20, 70190 Stutgart, Germany.

கனடாவிலிருந்து திரு.கார்த்திகேசு தர்மலிங்கம், திரு.கந்தசாமி பாலேஸ்வரன், திரு.தம்பிராசா சிறீஸ்கந்தராசா

மீண்டும் நன்றிகள்.

இணைவோம் என்றும் இலங்குவோம்
ஊரகம் உயர உழைப்பு வழங்கினர்
தாரக சந்தமாய் மலைப்பால் விளங்கினர் தெளிவாக
பார் அதில் பலனும் அளித்து தேரிழுத்த செம்மல்களே!
தெரிவானீர் நற்பயனாலே செறிவாக நீவிர் செழிப்பீரே.

இன்று திறப்பு விழாவும் ஆண்டு விழாவும் ஒருங்கே அமைய நிமிர்ந்தெழும் இந்த சனசமூகநிலையத்தின் நிறைவான செயற்பாடு மக்கள்பால் ஒரு காத்திரமான முன்மாதிரியாக என்றும் திகழும் என பரிபூரணமாக மனநிறைவாக வாழ்த்துவதில் அக நிறைவடைகின்றேன்.

பின்னிணைப்பு

**ஜேர்மனியிலிருந்து முதற்கட்டமாக திரட்டப்பட்ட நிதி விபரம்**

ச.சந்திரகுமார், சி.ஜெயராசா, சி.வாசன், க.பாலச்சந்திரன், செ.அமிர்தலிங்கம், செ.சாந்தலிங்கம், செ.சந்திரலிங்கம், கு.பிரசாத், கு.சுஜிதாப், கு.ராஜமலர், சு.குமாரகுலசிங்கம் இவர்கள் 100யூரோ வீதமும் ரா.கணேசராசாவிடமிருந்து 50யூரோவும் மொத்தமாக1250யூரோ வீதமும் பெறப்பட்டது.

**ஜேர்மனியிலிருந்து முதற்கட்டமாக திரு.தி.பேரின்பநாதனிடம் நிதி கொடுத்தோர் விபரம்**

த.குலேந்திரா (லண்டன்) -200, தி.பேரின்பநாதன்-150, தி.ஜெயக்குமார் (கிளிஅம்மான்)100, க.ஜெயசங்கர் 100, சி.குவேந்திரராசா 100, மா.சுரேஸ்குமார்100, ச.திலீப்குமார் 100, வ.கலாராணி 100, சி.லோகேஸ்வரன் 70 யூரோவீதமும் மொத்தமாக 1020 யூரோவும் பெறப்பட்டது.

**2ம் கட்டம்**

சி.வாசன் -500 செ.சாந்தலிங்கம் -200 சு.குமாரகுலசிங்கம் -1000 சி.ஜெயராசா -100 த.திரௌபதி -35 ப.தர்சன் -100 யூரோவும் சபா.வசீகரன் (டோகா) 26 943ரூபாவும் பெறப்பட்டது.

**கனடா முதலாங்கட்ட நிதி விபரம்**

s.சபேசன் -100 சிவஞானம் -100 s.விசாகன் -100 தர்மிளா -50 மிருளாளினி -50 புவிதரன் -200 கிரிதரன் -100 தேவகுமார் -100 K.தர்மலிங்கம் -100 தி.விஜயகுமார்100 K.யோகநாதன்-100 த.ஜெகநாதன்-100 சஞ்சீவன், பார்தீபன்-100 S.சிவக்கண்ணன்-100 R.தவராசா-50 S.இரட்ணவதி-50 K.பாஸ்கரன்-50 மு.கணேந்திரன்-100 செ.சிறீக்காந்தா100 பா.செல்வராணி-100 சி.மங்களபவானி-100 த.கார்த்திகா-100 க.சத்தியபாமா-50 ஜீ.சந்திரா100 வி.சாந்தகுமார்-100 க.வாகீசர்-100 சு.சிறீனிவாசன்-100 தி.தங்கநாதன்100 க.பாலேஸ்வரன்-50 நி.சிவா-300 சு.குகன்-100 இ.நிர்மலன்-100 பி.நளினி-100கனடிய டொலர் வீதமும் மொத்தமாக 3050கனடிய டொலரும் பெறப்பட்டது.

**கனடா இரண்டாங்கட்ட நிதி விபரம்**

சி.மங்களபவானி-1500 சி.நிர்மலா-1000 சு.குகன்-1000 கா.தர்மலிங்கம்-1000 தி.தேவகுமார் (அரசு)-1000 பா.செல்வராணி-500 சி.சபேசன்-500 தி.புவிதரன்-500 க.யோகநாதன்-500 தி.தங்கநாதன்-500 சு.தேவராசா-250 மு.கணேந்திரன்-200 ம.நிருபாளினி-200 தி.கிரிதரன்100 சி.கிருட்டினராசா-100 இ.தவராசா-100பா.கிருபாளினி-100 ஜனார்த்தனன-100 சி.புனிதவதி100 சா.ஜெயராணி-100 ஜெ.தர்மிளா-100 பி.நளினி-100 தி.விஜயகுமார்-100 கனடியடொலர் வீதமும் து.ராசபதி-50 து.கலாவதி-50 து.தேவிகா-50 து.ரேணுகா-50 ப.இரத்தினவடிவேல50 இ.நந்தினிதேவி-50 இ.சுலோசனா-50 இ.ராகினி-50 இ.பிருந்கா-50 கனடியடொலர்வீதமும் மெத்தமாக 10 370 கனடியடொலரும் பெறப்பட்டது.

"நன்றி"

## எனது பார்வையில் எமது சனசமூக நிலையம்

கலை, கலாசார மேம்பாட்டிற்கு முதற் படியாக விளங்குவது சனசமூகநிலையமாகும். இந்த நிலையம் சொந்த இருப்பிடமின்றி 2008ம் ஆண்டு வரை இயங்கி வந்தது.

இக் காலகட்டத்தில் கலட்டி வாழ் பொது நல விரும்பிகள் தங்களால் இயன்ற உதவிகளை செய்து இடைவிடாது இயங்க வைத்துக் கொண்டிருந்த செயற்பாட்டை பாராட்டாமல் இருக்க முடியாது.

எம்மூர் மக்களிடையே இருந்த கருத்து வேற்றுமை, ஆர்வக் குறைவு, ஈடுபாடின்மை, நாட்டின் போர்ச் சூழல் என்பன எமது இருப்பிட தேடலை பல மடங்கு பின் தள்ளியது என்றால் மிகையாகாது.

இத்தேடலின் போது எமது ஊரவர்களால் ஒரு நிர்வாகக் குழுமம் அமைக்கப்பட்டு நிரந்தர இருப்பிடம் அமைப்பதற்காக மிகவும் காத்திரமான கருத்தாடல்கள் முன் வைக்கப்பட்டன.

அத் தருணத்தில் தற்போது கனடாவில் வசிக்கும் திரு.கா.தர்மலிங்கம் பவானி குடும்பத்தினரின் நில கொடுப்பனவால் எமது நிரந்தர கட்டிட நிர்மாணம் நிர்ணயிக்கப்பட்டது. இந்த ரீதியில் இந்த குடும்பத்தினரை நன்றியுணர்வுடன் நினைவு கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.



என்றும் ஊரவன்
**திரு.க.பாலேஸ்வரன்** (கனடா)

புலம் பெயர் உறவுகளினதும் உள்ளூர் உறவுகளினதும் ஆலோசனையின் படி இளையோர்களால் நிர்ணயிக்கப்பட்ட இணையக்குழுமம், அனுபவமும் அறிவாற்றலும் மிக்க எமதூர் மக்களின் ஆக்கபூர்வமான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் வியக்கத்தக்க செயற்பாடென்பதை மிகவும் தெளிவாக விளங்கிக் கொண்டு நான் இங்கு செயற்பட்டேன்.

மேலும் இயந்திர வாழ்விற்கு முகம் கொடுக்கும் புல வாழ் மக்களில் நானும் ஒருவன். எனவே எனக்கு இவ் புலவாழ்வின் ஒவ்வொரு மக்களின் பின்புலமும் நடைமுறையும் தாராளமாகவே புரியும்.

நான் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டில் பாரிய நிதியுதவியையும் பேராதரவு அளித்து தமக்கென ஒரு பாணியிலே எமது மக்களை ஒன்றிணைத்து எமதூர் மக்களின் உதவியோடு கட்டுமானத்தை இன்று நடைமுறையான பெரும் பங்களிப்பை நிறைவேற்றிய பெருமை திரு, தம்பிராசா சிறீஸ்கந்தராசா அவர்கட்கும் பல் மருத்துவர் திருமதி நிர்மலா சிவா அவர்களையும் மேன்மைப்படுத்தி முன்னிலைப்படுத்துவதில் பெரு நிறைவடைகின்றேன்.

அத்தருணத்தில் ஜேர்மனியை தற்போதைய வாழ்விடமாக கொண்ட சனசமூக நிலையத்திற்கான திரு சுப்பிரமணியம் குமாரகுலசிங்கம் அவர்களின் பெரும் பணியை பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக ஜேர்மனி, லண்டன், கனடா, பிரான்ஸ், அரேபிய நாடுகளென அவரின் தொடுதளம் நீண்டிருந்தது. அதனால் அவரால் மற்றவர்களின் தொடர்பை பேணி நிதியளிப்பை உலகளாவிய ரீதியில் முன்னெடுத்த பாங்கு பாராட்டத்தக்கது. மேலும் தன்னாலான பெரு நிதியையும் தந்து ஊரகத்தை பெருமைப்படுத்திய பெரும் பங்கு ஈடிணையற்றது.

இந்த சந்தர்ப்பத்தில் தங்களால் இயன்ற நிதிகளையும் தந்து எம்தூரவரின் கரங்களை அத்தனை நல்லுள்ளங்களின் பெருந் தன்மையை வலுப்படுத்தியதை சிலாகிக்காமல் இருக்கமுடியாது. எனது நன்றியுணர்வை அனைவருக்கும் சார்பாக தெரிவித்துக் கொள்வதில் பெரு நிறைவடைகின்றேன்.

முடிவாக எமது புலம் பெயர் மக்களின் செய்திகளை செவிமடுத்து எமது சார்பாக நிர்வாக சேதிகளை யாபேரும் அறிய உடனுக்குடன் எமக்கு அறியத்தந்த திரு, பஞ்சாட்சரம் குமணன் (நில அளவையாளர்) அவர்கட்கு எனதான பெரு நன்றியை தெரிவித்துக் கொண்டு சனசமூக நிலையம் பற்றிய எனது பார்வையை முடித்துக் கொள்கின்றேன்.

எத்தனை இடையூறு கண்டோம்.

எம் முயல்வால் அத்தனையையும் அடக்கி
இன்று எழுதி விட்டோம் எம் நிலையத்தை
ஒற்றுமையே பலமென உணர்த்தி

அரும்பணியும் அர்ப்பணிப்பும் செய்துள்ளோம்
எக்கறை காண்பினும் அக்குறை நீக்க
அறு துணை செய்திடுவீர்

எமதூர் செழித்து
எம்மக்கள் அறிவுவளர

உறுதுணை நின்றிடுவீர்
நம் சனசமூக நிலையம் வளர்த்திடுவீர்.

பகைமை நீங்கி ஒற்றுமை ஓங்கட்டும்

பங்களிப்பு தொடரட்டும்.
நல்ல ஆக்கசிந்தனை என்றும் வளமாகும்.

"நன்றி"

## சமூக உணர்வின் சங்கமம் சாதனைகள் படைத்திடல் வேண்டும்

செந்தமிழ்ப்பற்றும், நெறிப்பற்றும் ஒருசேரப்பெற்று, மனிதநேய ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்து வாழ்கின்ற மக்கள் பலரை ஈன்றெடுத்த பெருமையும், சிறப்புமிக்க ஊராகவிளங்கும் கலட்டிமண்ணின் விதைகள் இன்று பல்வேறு நாடுகளிலும் வேருன்றி வளர்ந்து விருட்சமாக செழிப்புடனும் வனப்புடனும் வாழ்ந்துவருவது இவ்வூருக்கு பெருமையாகும்.

மானிடவாழ்வில் அழியாத செல்வமாக விளங்கும் கல்வியை திறம்படக் கற்ற பல அறிஞர்களையும், கல்விமான்களையும், கல்வி வளர்ச்சிக்காக தம்மையே உரமாக்கிக் கொடுத்த நல்லாசிரியர்களையும், பல பொறுப்புமிக்க உயர்பதவிகளை கண்ணியத்துடன் செயலாற்றிய சிறப்புடையவர்களும், சிந்தனையாளர்களும் ஒரு சேரப்பெற்று வளமாகவும் மகிழ்வுடனும் செல்வச் செருக்குடனும் செழித்த கிராமம் என்றால் மிகையல்ல.சொந்த வாழ்வில் வந்துவிழும் தாக்கங்கள் மனிதனின் சிந்தனைக்கு தூண்டுகோல்கள் ஆகின்றன.



என்றும் தோழமையுடன்
கார்த்திகேசு தர்மலிங்கம்
றொறன்ரோ
கனடா.

தன்னைத் தாக்கும் நிகழ்வுகளால் நிலைகுலைந்து தன்வாழ்வினை வீணாக்குபவன் மனித மாண்பை உணராத சாதாரணமனிதன். அவற்றைக் காரணம் காட்டி சமூகத்தைவெறுத்தோ, பகைத்தோ மதிப்பளிக்காமலோ தன் போக்கில் காலத்தை ஓட்டுபவன் சமூகவிரோதி. தான் வாழும் காலத்தில் தன்னாலான உதவிகளைச் சமூகத்திற்கும் ஏனைய மனித உடன்பிறப்புகளுக்கும் செய்ய வேண்டும் என்று சிந்திப்பவனே மனித நேய சிந்தனையாளன். அந்த மனிதநேயக்கருவே பரிமாணவளர்ச்சியடைந்து சமுதாயத்தை உருவாக்க உதவுகிறது.

தும்பளை மேற்கு சனசமுக நிலைய நிர்வாகத்தினர் சமுக உணர்வு காரணமாகவும், கிராம அபிமானம் காரணமாகவும் சமூகமனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றி வருவது கண்டு வெளிநாடுகளில் வாழும் கலட்டியின் உறவுகள் பெருமிதம் அடைகின்றனர். நான் 2010 ஆம் ஆண்டு கலட்டி கிராமத்திற்குச் சென்ற போது சனசமூகநிலைய நிர்வாகத்துடனும் இளைஞர்களுடனும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக்கிடைத்தது. இக்கிராமத்து இளைஞர்கள் பலரின் சிந்தனைப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணரமுடிந்தது. மிகுந்த நெஞ்சுரத்தோடும், திடமானநம்பிக்கையோடு சுயமாக சிந்தித்து சிந்தனையின் வெளிப்பாடுகளுக்கு செயலுருவம் கொடுத்து கிராம வளர்ச்சிக்காகவும் சமூகமுன்னேற்றத்திற்காகவும் தங்கள் நேரத்தை அர்ப்பணித்து சேவையாற்ற தயாராகிவருகிறார்கள் என்பதை என்னால் உணரமுடிந்தது.

தும்பளை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகத்தினரின் விடாமுயற்சியின் பயனாக அறுபது வருடங்களுக்கு மேலாக சிறப்பாக இயங்கிவந்த போதும் அதற்கென சொந்தமாக ஒரு கட்டடம் இன்மை ஒரு குறையாகவே இருந்தது. இதை நிவர்த்தி செய்ய எண்ணிய நிர்வாகத்தினர் மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயற்பாட்டின் காரணமாகப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் கலட்டி மண்ணின் உறவுகளின் பெரும் பங்களிப்பினால், இன்று விழாக்காணும் இச்சனசமூக நிலையத்தின் சேவை தொடரவாழ்த்துவதுடன் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளிடம் நிதிசேகரித்து அனுப்ப உதவிய சேவையாளர்களை இங்கு பதிவு செய்வதில் பெருமிதமடைகிறேன்.

ஜேர்மனியில் வாழ்ந்து வருபவரும், தும்பளை மேற்கு சனசமூகநிலைய கட்டட நிதி சேகரிப்பில் முன்னின்று உழைத்து வருபவரும், சமூகசிந்தனையாளருமான திரு.சுப்பிரமணியம் குமார் இக்கட்டட நிர்வாகப்பணிக்காக ஜேர்மனியில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் வாழும் கலட்டி கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நிதி சேகரிப்பதற்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை நல்கியவர் என்றால் மிகையல்ல. இவரது சமூகப்பணி தொடர வாழ்த்துகிறேன். கனடாவில் பல ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் திருமதி.Dr.நிர்மலா சிவா அவர்கள் சமூகசேவைகளிலும், சமயப்பணியிலும் உத்வேகத்துடன் செயற்பட்டு வருபவர். ஊரோடு உறவாடி இளமை மாறாத நினைவோடு தான் பிறந்த தாய் மண்ணிற்காக உதவி புரிவதில் என்றும்

தயங்காதவர். இச்சனசமூகநிலைய கட்டட நிர்மாணப்பணிக்காக கனடாவில் நிதி திரட்டுவதற்கு முன்னின்று உழைத்தவர். இவரின் சமூகசேவை தொடர பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.மங்களபவானியை கரம்பற்றி கலட்டி மண்ணின் மருமகனாக வந்த தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் கனடாவில் நிதி சேகரிப்பதற்கு ஆக்கத்துடிப்புடன் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சமூகசேவையாளர் கனடாவில் கலட்டி மக்களுடன் கைகோர்த்து உறவாடி வரும் ஒரு பெருமைக்குரியவர். வருடாவருடம் கலட்டி ஒன்றுகூடல் என்னும் நிகழ்வை நடாத்தி எல்லோரையும் சேர்த்து மகிழவைக்கும் பெருமைக்குரியவர். இவரது சேவை தொடர வாழ்த்துகிறேன்.

இன்று புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்து நேசித்த அக்கிராமங்களின் வளர்ச்சிக்காக தாம் வளமாக வாழ்கின்ற நாடுகளிலிருந்து கொண்டு ஊர்சார்ந்த அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலம் பல சேவைகளை புரிந்துவருகின்றனர். இலங்கையின் வடபுலத்தில் சீரழிந்த பல கிராமங்கள் இன்று புனரமைக்கப்பட்டு வருவதற்கு அவ்வூரைச் சேர்ந்த வெளிநாட்டு உறவுகளின் பங்களிப்பே காரணம். கலட்டி மண்ணின் உறவுகளும் எதிர்காலத்தில் இக்கிராம வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற பங்களிப்பை நல்கி. கிராம முன்னேற்றத்திற்கு கைகொடுக்க முன்வர வேண்டும்.

தும்பளை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகத்தினரின் அயராத உழைப்பும், விடாமுயற்சியும் கொண்டு இதயசுத்தியுடன் செயலாற்றியமையாலும், வெளிநாடுகளில் வாழும் எம் கலட்டி மண்ணின் உறவுகளின் பங்களிப்பாலும் இன்று விழாக்காணும் இச்சனசமுகநிலையமும் இவ்வூரும் மென்மேலும் பிரகாசித்து ஓங்கி வளரவேண்டும் என ஆத்மசுத்தியுடன் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நன்றி"

## தும்பளை மேற்கு சனசமூகநிலையம் திரும்பிப்பார்க்கிறேன்.

2007ஆம் ஆண்டு நான் NECCDEP கூட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலப்பகுதி. மாலை வேளைகளில் கோயிலடி நண்பர்களுடன் பலதும் பத்தும் கதைப்பது வழக்கம். அவ்வாறன ஒரு நாளில் எமதூரில் உள்ள உட்கட்டுமான விடயங்கள் சம்பந்தமான கதையொன்று நண்பனான திரு.மு.காண்டீபனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவ்வாறான வேளையில்தான் எமதூரில் ஒரு புதிய சனசமூகநிலையமொன்றை அமைக்க வேண்டும் என்று நண்பர்கள் அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தோம். ஆயினும் அரசாங்கத் திட்டங்களில் இருந்து முடிவைப்பெறுவதற்கு ஒரு சொந்தமான காணி ஒன்று சனசமூகநிலையத்திற்கு அவசியம் என என்னுடைய NECCDEP திட்ட அனுபவத்தினை நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டேன். இதனைத் தொடர்ந்து பல காணிகள் ஒவ்வொருவராலும் முன்மொழியப்பட்டு ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் நண்பன் திரு.வேலாயுதம் கபிலன் திடீரென "ஏன் பாலேந்திரா நாங்கள் இந்த முல்லைக் காணியை கேட்டுப்பார்ப்போம் என்று வினாவினார்.




திரு.இ.பாலேந்திரா,
பொறியியலாளர்,
தும்பளை மேற்கு.

ஒரு நல்ல வழிகாட்டுதல். இது ஒரு சிறு தீப்பொறி. அனைவரும் அதனை ஆமோதித்து இக்காணியினை பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தோம். அதனைத் தொடர்ந்து காணியும் வழங்கப்பட்டு, கட்டடம் கட்டியெழுப்பப்பட்டு இன்று திறப்பு விழா காண்கிறது.

மேலும் இக்கட்டட அமைப்பில் பொறியியல் ரீதியாக என்ன என்ன விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. முதலாவதாக கட்டடம் அமைந்துள்ள காணியில் பயன்படுத்தக்கூடிய மூலப்பரப்பில் இருந்து 40'x 20' அகலம் கொண்ட பகுதியை கட்டடமாகக் கட்டலாம் என தீர்மானிக்கப்பட்டது. (பின்னர் வாஸ்துசாஸ்திர ரீதியாக 42' மூலபாகம், நகரசபையின் நியமங்களுக்கு அமைய 18' ஆகவும் மாற்றப்பட்டது)


ஏன் ஒரு மாடிக்கட்டடமாக அமைக்க திட்டமிடப்பட்டது, எமதூரில் மையப்பகுதியில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியின் உச்சப் பயன்பாட்டை உறுதிப்படுத்தி மாடிக்கட்டடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. அத்துடன் மேல் மாடியானது மக்களின் கல்விசார் விடையங்களுக்காக கீழ் மாடி மக்களின் வாசிப்பு திறனுக்காக அமைக்கப்பட்டது. மாடிக்கட்டடம் கட்டுவது என்ற முடிவை எடுத்தபடியாலே அதற்குரிய அத்திவாரம் (Footing) கம்பிகள் என்பன இன்னுமொருமாடியை அமைக்கக்கூடியவாறே மதிப்பீட்டில் உள்வாங்கினோம். அவ்வாறே அமைக்கப்பட்டது. மேலும் கட்டடத்தின் மாடிப்படிகனை அமைக்க பல இடங்கள் முன்மொழிந்து இறுதியாக கட்டடத்தின் வடக்குப்பகுதி பொருத்தமாக அமையும் என்று முடிவெடுக்கப்பட்டது.

கீழ்பகுதியானது வாசிப்புப்பகுதிக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டது.




அனேகமாக எமதூர் மக்கள் நிலைகள், யன்னல்கள் அமைக்க பெரும்பாலும் முதிரை, பாலை, வேம்பு, மரங்களையே பயன்படுத்தி வருவது வழமை. எனவே முதிரை மரங்களை நிலை, யன்னல், கதவுகளுக்கு பயன்படுத்த தீர்மானித்தோம். ஆயினும் எதிர்காலத்தில் கட்டுமான பணிகளுக்கு அலுமினிய நிலை, யன்னல் பாவனையே பெரிதும் நம்பியிருக்க வேண்டிவரும். எனவே சனசமூகநிலையத்தின் கிழக்குப்பகுதியில் அலுமினிய வேலைகள் பயன்படுத்தி, மக்களுக்கு ஒரு முன்னோடியாக செயற்படுவது என தீர்மானிக்கப்பட்டு அமைக்கப்பட்டது. கிழக்குப்பகுதியில் தள்ளு கதவு முறையை பயன்படுத்திய (Aluminium sliding door) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

மேல்மாடிப்பகுதியானது பெரும்பாலும் மாணவர்களினதும் பொதுமக்களினதும் கல்விசார் நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்டது. மேற்படி சனசமூகநிலையத்தின் கட்டுமானத்தில் ஆழகுபடுத்தும் சீமேந்துக்கலை வளைவு அமைப்புக்கள் (Arch) என்பனவற்றிற்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாலேயே நிலைகள், யன்னல்கள் என்பன வளைவு முறையில் அமைக்கப்பட்டன. கட்டடம் அழகானதாகவும் உறுதியானதாகவும் மிகநீண்டகாலமிருந்து எமது மக்களின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்குப் பயன்படும் என நம்புகிறேன்.




இரண்டிற்கு மேல் இன்னுமொரு மாடி அமைக்கவேண்டும் என பல அன்பர்களின் விருப்பமாக அமைந்துள்ளது. ஆகவே இதன் போது எம்மால் அமைக்கப்பட்ட சனசமூகநிலையத்தின் மேலேயே மீண்டும் ஒரு மாடியைக் கட்டி இதே கூரை மரங்கள் மேலே பயன்படுத்தக் கூடியதாக இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளன. தரமான (SLS சான்றிதழ் பெற்ற) கம்பிகள் மற்றும் பிற கட்டுமானப்பொருட்கள் என்பன கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"நன்றி"

# எமது சனசமூகநிலையம் சில நினைவுக்குறிப்புக்கள்

துமபளை மேற்கு சனசமூகநிலையம் என்றதும் எனக்கு நினைவில் வருவது வரதவிநாயகர் கோவிலுக்கு முன்பாக இருந்த அந்தக் கட்டடம்தான். மிகவும் அழகாகவும் நேர்த்தியான முறையிலும் அமைந்திருந்த அக் கட்டடத்தில் வாசிகசாலை மற்றும் விலங்குகளின் நோய்களைத் தீர்ப்பதற்காக இலவசசிகிச்சை வசதிகள் இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததாக எனக்கு ஓர் ஞாபகம். விலங்கு சம்பந்தமான நோய்களைப் பதிவதற்கென ஒருகொப்பி இருந்ததது. ஒருநாள் நான் அக் கொப்பியிலே ஆடு சினைப்படுத்த வேண்டும் எனப் பதிவு செய்து எனது நண்பனின் வீட்டுவிலாசத்தையும் குறிப்பிட்டேன். அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைத்தியர் எனதுநண்பனின் வீட்டிற்கு சென்ற போது அங்கே ஆடு வளர்க்கப்படுவதில்லை என அறிந்து கோபித்துக்கொண்டு சென்றது. இன்னமும் என் ஞாபகத்தில் உள்ளது. இதை நான் இங்கு குறிப்பிடுவது ஏனென்றால் அக்காலத்தில் நிலையச் செயற்பாடுகள் சிறப்புடன் நடந்திருந்தன என்பதைக் குறிப்பிடுவதற்காகவே. பின்னர் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் கட்டடங்கள் சேதமுற்றபோது அக்கால இளைஞர்களினால் திருத்தம் செய்யப்பட்டதாக எனக்கு ஓர் நினைவு இருக்கிறது.



திரு.சதாசிவம்.சிறீகாந்,
துமபளை மேற்கு.

அதில் திரு.இ.தயாபரன் அவர்கள் தலைவராக இருந்தவேளையில் மின்னிணைப்பு நிலம் போடுதல் என்பன செய்யப்பட்டு இரண்டு புதிய சரிவுமேசைகளும் செய்யப்பட்டன. அக்காலத்தில்தான் கல்லரியும் அச்சுக்கள் சனசமூகநிலைய நீண்டகால வருமானத்தை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அவ்வச்சுக்கள் இப்போதும் வாடகைக்கு விடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. 2006 மார்கழிமாதம் 2ம் திகதியோடு இக்கட்டடம் கைவிடப்பட்டு தற்போதைய தற்காலிககட்டடத்திற்கு (திருமதிபகவதிகணேசன் அவர்களுடையவீடு) மாற்றப்பட்டதாக நண்பன் ஒருவன் மூலம் அறிந்தேன். பின்னர் நிலையக் காணி பற்றி பார்க்கும் போது காணிக் கொள்வனவிற்காக பலர் முயன்றுள்ளனர். அவர்களில் என் மனதில் நிற்பவர்களாக திரு.இ.பாலேந்திரா, திரு.மு.காண்டீபன், திரு.வே.கபிலன், திரு.மு.குணநேசன், திரு.இ.லோகேந்திரா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். வரதவிநாயகர் ஆலயச்சூழலில் உள்ள ஒரு காணியை வாங்குவதற்கு முயன்றும் கைகூடாமல் போய்விடவே திரு.வே.கபிலன், திரு.மு.காண்டீபன் ஆகியோர் தற்போதைய நிலையக்காணியை வாங்கினாலென்ன எனகருத்துக்கூற பின்னாளில் அதுவே சாத்தியமாயிற்று. பொறியியலாளர் திரு.இ.பாலேந்திரா அவர்களால் நிலையத்திற்கென உருவாக்கப்பட்ட இணையத்தளத்தில் திரு.ப.குமணன் போன்ற இளைஞர்கள் துடிப்புடன் செயற்பட நிதி திரண்டு வந்து கட்டடம் பூரணமாயிற்று. வெளிநாட்டு நிதிபற்றி குறிப்பிடுகையில் அசார்பஜான் நாட்டிலிருந்து திரு.க.புலேந்திரன் அவர்களின் முயற்சியால் முதன் முதலில் ஒரு தொகை நிதி அனுப்பிய திரு.க.புலேந்திரன் மற்றும் திரு.ம.சுரேஸ், திரு.ர.இந்திரஜித், திரு.சி.ரமேஸ் ஆகியோரை இலகுவில் மறந்துவிட முடியாது. அடுத்ததாக சனசமூகநிலையத்திற்கென ஒரு குழாய்கிணறு அமைத்ததைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இது இவ்வூர் இளைஞர்களின் உடலுழைப்பால் அமைக்கப்பட்டது. இதிலே திரு.இ.வெங்கடரமணா, திரு.கா.பிரசாத், திரு.ப.ஸ்ரீஅரவிந்தன் திரு.ச.நீலாம்பரன், திரு.வே.ஞானசேகர், திரு.சி.புஸ்பராசா, திரு.இ.நிரஞ்சன் மற்றும் பல இளைஞர்களின் பங்களிப்பு வியந்து நோக்கற்குரியது. பொறியியலாளர் திரு.இ.பாலேந்திரா அவர்களின் பொறியியற்துறை சார்ந்த அறிவின் மூலமான பங்களிப்பு சனசமூகநிலையத்தின் கட்டட உருவாக்கத்தின் ஒவ்வொருபடியிலும் மிக்க உறுதுணையாக விளங்கியதென்பது மறுக்கமுடியாததது. வெளிநாட்டு உள்நாட்டு உதவி யோடுகட்டடம் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்ற கேள்விதான் என் மனதில் எழுகின்றது. தனியே பத்திரிகைகள் புத்தகங்கள் போடுதல் முற்று முழுதானதாக அமையாது. மிகவிரைவில் அடுத்தகட்டத்திற்கு இட்டுச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையுடன.

"நன்றி"

# நினைவு கொள்ளும் ஆரோக்கியமான நினைவுகள்

இன்று தனக்கென ஒரு சொந்தக் காணி, கட்டிடம், சுத்தி வர மதில் என்று எழும்பி நிற்கும் சனசமூக நிலையத்தை பார்க்க இளைஞர்களின் கனவுகள் அன்றைய முயற்சிகள் நினைவுகளாய் கவிய.........

ஊர் மீதான இளைஞர்களின் அக்கறை அன்றிலிருந்து இன்றுவரை ஆரோக்கியமான நிலையிலே இருந்து வந்துள்ளது என்பது பெருமைப்பட வேண்டிய விடயம். முன்னுள்ள காலத்தில் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. இன்றைய இளைஞர்கள்தான் முயற்சி அதிகமுடையவர்கள் என்ற கருத்துக்கள் ஆணித்தரமாக மறுக்கப்படவேண்டியவை. ஒவ்வொரு சந்திக் காணிகளும் வெறுமையாக இருந்த போது "இந்தக் காணியை எங்கட லைப்ரரிக்கு அமைச்சா என்ன? "என்ன மச்சான் எங்கட வெளிநாட்டுக்காரர் ஏதும் இளக்கிற மாதிரி இல்லை" பக்கத்து ஊருகளைப் பார்க்க வெட்கமா இருக்கு" போன்ற ஆதங்கப் பேச்சுக்களை எமக்கு மூத்த இளைஞர்களிடம் கேட்டிருக்கிறோம். நாமும் பேசியிருக்கிறோம்.

அந்தக் காலத்தில் எமது புலம் பெயர் உறவுகளை இணைக்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் சரியாக அமையவில்லை.

திரு.பஞ்சாட்சரம் குமணன்

அவர்களே புலத்தில் சுயாதீனமாக இயங்கி எமக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என்பதும் யதார்த்தமாகப்படவில்லை. ஆனால் அயலூர்களில் இவ்வாறான அமைப்பு இருந்திருக்கிறது.

நானறிந்த காலத்தில் நாளேடுகளின் செலவை ஈடுசெய்ய குழாய்க் கிணறு இடிக்கும் கம்பி, கல்லரியும் அச்சுக்கள், தள்ளுவண்டி போன்றவற்றை வாடகைக்கு விட்ட காலங்கள் உண்டு.எமக்கான செலவை நாமாகவே ஈடு செய்து நிலையத்தை இயக்க வேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தது. இந்தக் காலம் நிர்வாகம், செயற்பாடுகள் அனைத்தும் முற்று முழுதாக இளைஞர்களின் கையிலே இருந்தது. இதற்கு முன்னைய காலங்களிலும் அவ்வாறே என்று எங்கள் வரலாற்றுத் தகவல்களும் கூறுகின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் நிலையத்துக்காக முன்னின்று உழைத்தவர்கள் கூட குறித்த வயதை அடையும் போது ஒதுங்குவது ஏற்றுக் கொள்ள முடியாது. "எங்கட காலம் முடிஞ்சுது இனிமேல் வாற பெடியள் செய்யட்டும்" என்ற மனநிலை பல பேருக்கு இருந்திருக்கிறது.

எது எவ்வாறோ சனசமூக நிலையம் இன்று தனக்கென ஒரு கட்டடத்தை உரிமையாக்கிக் கொண்டதற்கு நாமெல்லாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பது எமதூர் மாற்றுக் கருத்துக் கொண்ட நல்லுள்ளங்களுக்கே. இவர்களால் முக்கியமாக எங்களுக்குள் சனசமூகநிலையம் சார்ந்த கனவு, வெறி, அதிகரித்தது என்றுதான் கூற வேண்டும் என்பது மறுக்கப்படமுடியாது.

"எங்கட சனம் அவ்வளவுக்கு வந்திட்டுதோ இவ்வளவு பெரிசா சனசமூக நிலையத்தைக் கட்டிப் போட்டு இதை நிர்வகிக்கக் கூடிய ஆட்கள் ஊரில இருக்கிறாங்களோ?"

"உது சரிவராது"

"காசை சுருட்டிப் போட்டாங்கள்"

"இப்படிப் பெரிசா துவங்கியிருக்கிறீங்கள் ஆர் காசு தரப் போறான்?"

எத்தனை நக்கல்கள், நளினங்கள்

மேலும் எமதூர் மக்கள் செய்த பங்களிப்புக்கள், அர்ப்பணிப்புக்கள் எதுவுமே பாராட்டப்படவோ அன்றி, நன்றி சொல்லவோ தேவையில்லை என்பது மாத்திரம் அழுத்தமான என் கருத்து.

எங்கட ஊருக்கு பங்களிப்பு செய்தவரை பாராட்ட நாங்கள் யார்?

ஊரின் தலைவர்களோ அல்லது வேற ஊர்க்காரங்களோ இல்லை. எங்கட ஊருக்கு நாங்களெல்லாம் சேர்ந்து கட்டின சனசமூக நிலையம் எவர் நன்றியையும் பாராட்டையும் எதிர்பார்த்து செய்யப்படவில்லை. ஒரு குடும்பத்தில் வீடு கட்டுகிறோம் ஆளாளுக்கு நன்றி சொல்லிக் கொண்டா இருக்கிறோம்.இவ்வாறான ஒரு கருத்தை நான் பகிர்ந்து கொள்வது.

இது எங்கட என்ற உணர்வு எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காக ஆனாலும் காணி என்று வரும் போது சகோதரம் என்று கூடப் பார்க்காம சண்டை பிடித்து ஒன்றிரண்டு தலைமுறை கூட உறவு பாராட்டாமல் இருக்கக் கூடிய, நிலங்கள் மேல் ஆறாத பற்றுக் கொண்ட மக்களை அதிகமாகக் கொண்ட ஊரிலே தங்களுடைய காணியை சனசமூக நிலையத்திற்காக வழங்கியது தான் இன்றைய கட்டிட உருவாக்கத்திற்கான திருப்புமுனை. காணி கொடுத்த குடும்பத்தினரையும் நான் பாராட்டவில்லை. இவர்களை போன்ற மனோபக்குவம் ஊருக்குள் முளையாவது விடவேண்டும்.

எங்களுக்கு என்றொரு சனசமூக நிலையத்தை கட்ட நிறையப் பிந்தி விட்டோம் என்பது ஒரு குற்ற உணர்வாக எல்லோருக்கும் இருந்தாலும் அதற்குரிய காரணமாக சொல்லக் கூடியவிடயங்களாக நாட்டின் யுத்த சூழலும் புலம் பெயர் எமதூரவர்களை இணைக்கக் கூடிய தொலைபேசி, இணைய வசதிகள் அரிதாக இருந்தமையே.

சனசமூக நிலையமும் இணையமும்

சனசமூக நிலைய செயற்பாடுகளை உடனுக்குடன் வெளியே கொணர்வதற்கும் ஊரை விட்டு வெளியிடங்களில் வெளிநாடுகளில் வசிப்பவர்களையும் ஒருங்கிணைப்பதற்கு திரு. இராசேந்திரா பாலேந்திரா (பொறியியலாளர்) அவர்களால் http: //thumpalaiwest. blogspot. com/ என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டு அதில் வரலாற்றுத் தகவல்கள் இப்போதைய நிர்வாகம் மேலும் புலத்தில் நிதி சேகரிப்போர் சார்ந்த விடயங்கள் பதிவேற்றப்பட்டன. இந்த இணையத்தின் நிர்வாகத்தை உருவாக்கி சிறிது காலத்தின் பின் திரு.இ.பாலேந்திரா அவர்கள் என்னிடம் ஒப்படைத்திருந்தார். இணையத்தளங்களை கொண்டு செல்வதற்கு திரட்டிகள் இருப்பது போல நட்பைப் பேணும் நோக்கிலோ ஒரு விடயம் சம்பந்தமாகவோ ஆர்வமுடையவர்களை இணைப்பதற்கு சமூகத்தளங்கள் பெரிதும் உதவிபுரியக் கூடியவையாக இருந்தன. இன்றைய காலத்தில் அடிக்கடி Facebook இல் நேரத்தை வீணடிப்பதால் எங்கட சனசமூக நிலையத்துக்கு குழுமம் ஒன்றை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. குழுமத்தின் இணைப்பு
வருமாறு http: //www.facebook.com/groups/228857055911.

இந்தக் குழுமத்திற்கான வசதிகள் எதிர்பார்த்தது போல அமையவில்லை. அதாவது சனசமூக நிலையம் சார்பாக ஏதாவது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள முற்படும் போது அது ஒருவரின் தனிப்பட்ட பெயரிலேயே வெளியானது. மேலும் புகைப்படங்களை ஒளித்தொகுப்பாக வெளியிடுவதும் முடியாது போனது. ஆனால் குழுமத்தின் அங்கத்தவர் அனைவருக்கும் தகவல்களை ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதற்கு பொருத்தமாக இருந்தது. மேற்குறித்த குறைகளை உருவாக்கப்பட்ட பக்கம் தீர்த்து வைத்தது.

இணைப்பு:http:/www.facebook.com/pages
EO%AE%A4%EO%AF%81%EO%AE%EO%AF%8D%EO%AE%AA%EO%AE%B3%AF%88-
% EO% AE% AE% EO% AF% 87% EO% AE%
AF%82%E0%AE%E0%AF%8D-Thumapalai - west- Communty - Centre/
235824852299

உருவாக்கப்பட்ட இந்தப்பக்கம் நிர்வாகம் சார்ந்த தகவல்களை வெளியிடுவதற்கும் நிர்வாகத்தின் உத்தியோகபூர்வமான ஒரு தளமாகவும் இயங்க ஏதுவாகியது. உருவாக்கப்பட்ட குழுமம் இரண்டிலும் ஆங்கிலத்தில் thumpalai என வரவேண்டிய ஊரின் பெயர் thumapalai ஆக இருந்தது. குழுமத்திலோ பக்கத்திலோ விரும்பிகளாக இணைக்கப்பட்ட பின் பெயரை மாற்ற facebook அனுமதி வழங்குவதில்லை. ஏனெனில் நாங்கள் ஒரு பெயரில் பக்கம் ஒன்றை உருவாக்கி நண்பர்கள் பலரை இணைத்த பின், பக்கத்தின் பெயரை மாற்றும் போது ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத பெயரைக் கொண்ட பக்கத்திலோ, குழுமத்திலோ உறுப்பினர் ஆக்க முடியும் என்கிற காரணத்தினாலாகும்.

மேலும் எமது இந்தப் பக்கம்!

நிர்வாகம் சார்ந்த தகவல்களை வெளியிடுவதற்கும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் பெரிதும் உதவியது. இப்பக்கத்தை உருவாக்கும் போது இவ்வாறான தூர நோக்குகள் இல்லாவிட்டாலும் கட்டட நிர்மாணத்தில் இதன் பங்கு அளப்பரியது. இங்கு வெளியிடப்பட்ட பதிவுகள், புகைப்படங்கள், கருத்துக்கள், விமர்சனங்கள் எல்லாம் நிச்சயமாக பேணி பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்று ஆவணமாக்கலாம்.

புலம்பெயர்ந்த ஊரவர்கள் ஆகிய திரு.சுப்பிரமணியம் குமாரகுலசிங்கத்திற்கும் (ஜேர்மனி), திரு.கந்தசாமி பாலேஸ்வரனுக்கும் (கனடா) பெருநன்றிகள். அவர்களின் நிதியுதவிகளுக்காகவோ, ஆற்றிய கடமைகளுக்காகவோ அல்ல, எப்போதும் இணையத்தினூடு தொடர்பு கொள்ளும் போது சனசமூகநிலையம் பற்றியே கருத்துக்களை பகிர்ந்து கொண்டு சண்டை பிடித்து என் மனதில் சனசமூகநிலையம் சார் பிடிப்பை மிகவும் ஆழமாக அதிகரித்தமைக்காகவே.

"நன்றி"

# எம் சனசமூகநிலையமும் இளைஞர்களாகிய நாமும்....

ஒரு பாடசாலையை ஆரம்பிப்பதென்பது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடுவதற்கு சமன் என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் ஒரு கிராமத்திற்கு சனசமூகநிலையத்தை ஆரம்பிப்பது என்பது அதைவிட சாலச்சிறந்த பணி என்றே நான் கூறுவேன். நான் அறிந்த பொது அமைப்புக்களில் சனசமூகநிலையம் என்பது ஓர் உயிரோட்டமான, உணர்வுபூர்வமான அமைப்பாகும். இதை நம் கிராமங்கள் செவ்வனே பயன்படுத்தினால் மிக உன்னதமான ஓர் நிலையை அடையலாம். உலக சனத்தொகை கணக்கீட்டு அறிக்கையை நோக்குவோமானால் விடலைப்பருவத்தினர் அதாவது இளைஞர், யுவதிகள் தொகையே அதிகம் என புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. விடலைப்பருவத்தினரே உலகின் சக்தி என்றே நான் கூறுவேன். "இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்" என்பதற்கு இணங்க எம் இளைஞர்கள் எம் கிராம அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது கண்கூடு.



திரு.அ.அன்ரனி யசிந்தன்,
மாணவன்,
பிரயோக விஞ்ஞானபீடம்,
சப்பிரகமுவா பல்கலைக்கழகம்.

முக்கியமாக நான் இந்த ஆக்கத்தை ஆக்க நினைத்து ஏன் என்றால் நானும் ஓர் இளைஞன் என்ற வகையில் இந்த சனசமூகநிலையத்தைப் பற்றி சிறிதளவேனும் தெரிந்து கொண்டதாலும், என் பழைய நினைவுகளையும் இத்தருணத்தில் வெளிக்கொணர்வதற்கு விரும்புகின்றேன். எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் அழகான அமைதியான ஓர் ஆலயம் தும்பளை மேற்கு ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தானம், அறிவை அள்ளிவழங்க தும்பளை மேற்கு சனசமூகநிலையம், ஒற்றுமையை ஓங்கச் செய்ய தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டுக்கழகம், "என்ன தவம் செய்தனோ இந்த மண்ணில் பிறந்திட" என்றுதான் கூறுவேன்.

நான் அறிந்த எனது அறிவுக்கு எட்டிய காலத்தில் எனது சனசமூகநிலையம் தும்பளை மேற்கு ஸ்ரீவரத விநாயகர் தேவஸ்தானத்துக்கு முன்றலிலே உள்ள கட்டடத்திலேயே இயங்கியது. 1999ஆம் ஆண்டிலே எமக்கு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் இச்சனசமூகநிலையத்திலேயே நடத்தப்பட்டது. இவ்வகுப்புக்கள் அமரர்.ஆசிரியர்.வே.விமலன் அவர்களால் நடத்தப்பட்டது. இவ் முன்னோடி வகுப்பானது எம் கிராம சிறார்களுக்கும் பெரும் பயனாக அமைந்தது. இவரின் ஞாபகார்த்தமாகவும் தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தால் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வருடா வருடம் நடாத்தப்பட்டு வருகிறது என்பதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். 2003ஆம் ஆண்டளவில் எமது சனசமூகநிலையத்தினால் நடத்தப்பட்ட "பட்டம் கட்டுதல் போட்டியில்" நான் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டதுடன் என்னால் மறக்கமுடியாத ஓர் நினைவாகும். இக்காலகட்டங்களிலேயே எமது சனசமூகநிலையத்தினால் மாதனை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதிநாளன்று கோயிலிலே கடை ஒன்று போடப்படும் நானும் அக்கடையிலே சிறுபராயத்தில் ஓர் உதவியாளராக இருந்து சேவைபுரிந்துள்ளேன்.

பின்னர் 2006 காலப்பகுதியில் எமது சனசமூகநிலையம் தற்போதுள்ள தனியார் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில்தான் சனசமூகநிலையத்தின் மீது எனக்கு ஓர் அதீத உந்துதல், ஓர் விருப்பம் ஏற்பட்டது எனலாம். ஏனெனில் நான் அப்போதுதான் புரிந்துகொண்டேன் இளைஞர்களாகிய எங்களது கையில்தான் எமது கிராமத்தின் வளர்ச்சி இருக்கிறது என்று. இளைஞர்கள் எப்போதும் புரட்சிகரமான முற்போக்கான சிந்தனையுடையவர்களாக சமூகத்திற்கான உதவிகளை வழங்குபவர்களாக மாற்றும் களமாக தும்பளை விளையாட்டுக்கழகம் இருக்கிறது என்றால் மிகையாகாது. ஏனெனில் இளைஞர்களாகிய எம்மையெல்லாம் ஓர் அணியில் திரளவைத்தால் தான் எதையும் எம்மைக்கொண்டு சாதிக்கமுடியும். அப்பாரிய அளவிடமுடியாத பணியை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் செய்தது, செய்கிறது, செய்யும்.

1994ஆம் ஆண்டளவில் எமது சனசமூகநிலைய அபிவிருத்தி நிதிக்காக விவேகானந்த விளையாட்டுக்கழக உறுப்பினர்களால் ஓர் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது.

எம்மூர் சிறார்களின் அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கு தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழக கல்விக்கழகத்திற்கான தளபாட உதவிகளையும், கழக கூட்டத்திற்கான மண்டப உதவிகளையும் சனசமூகநிலையமே வழங்குகின்றது.

எமது சனசமூகநிலையத்தின் எதிர்காலத்திலும் என்போன்ற இளைஞர்குழு முழு அர்ப்பணிப்புடன் சேவை செய்து எமது கிராமத்தின் உன்னத வளர்ச்சிக்கு உதவுவோம்.

"நன்றி"

# தும்பளை மேற்கு சனசமூகநிலைய வரலாறு

1930 களின் நடுப்பகுதியிலிருந்த புத்தக தர்மாலயத்தில் எம் முன்னோர்கள் இணைந்திருந்தனர். கலாநிதி யந்திரசாலையின் அச்சுவாகனமேற்றல் பணிகளோடு விதந்துரைக்கப்படவேண்டிய பணியாக புத்தகதர்மாலயம் செயற்படுத்தப்பட்டமையை குறிப்பிடலாம். அத்துடன் இங்கு தொழில்புரிந்தோர் புத்தகங்களை கட்டுவதிலும் சிறந்து விளங்கி உள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வாறானதோர் பின்புலமே தும்பளை மேற்கு மக்களால் 1939 களின் கடைக்கூறில் தமிழ்நிலையத்தினை ஸ்தாபிக்க வழிவகுத்தது.

இத் தமிழ் நிலையம் எம்மூரவர்களுடைய அறிவுப்பசிக்கு ஒரு ஆரம்ப விதையாக அமைந்ததென நாம் கூறலாம். இந்நிலையமானது பெரியதம்பிரான் ஆலயத்திற்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ள ஆலயக் குருக்களுக்கு சொந்தமான ஒரு கட்டடத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அதாவது தற்பொழுது தற்காலிகமாக இயங்கி வரும் அதே கட்டடத்தில் தெற்குப் பக்கமாக உள்ள ஒரு அறையில் ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

திரு.சி.சங்கநாதன்,
திரு.க.சுதர்சன்,
தும்பளை மேற்கு.

முகப்பு அட்டையில் வலது கீழ் மூலையில் உள்ள கட்டடம். அதன் பின்னர் இக் கட்டடமானது வேறு தேவைக்கு பயன்படுத்தப்பட்டமையால் நிலையத்தின் இடத்தை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கமைய திகிரி ஒழுங்கையில் உள்ள பிரதான நாற்சந்தியில் கிழக்கு (பரியாரிவளவு ) புறமாக உள்ள ஒரு வீட்டிற்கு ( தற்போது "நிதர்ஷனம்" என்ற பெயரில் உள்ள வீடு) மாற்றப்பட்டது இக்கால கட்டத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், என சிறப்பாக இயங்கியதாக அறிய முடிகிறது.

சிறிது காலத்தின் பின்னர் இந் நிலையத்தை வேறு ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது இதற்கமைய தற்போது நிலையத்திற்கென நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் முன்னர் அமைந்திருந்த மண் குடிசையில் சிறிது காலம் இயங்கி வந்தது.

அடுத்து தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு எதிரில் அமைந்துள்ள அதிபர் சிவஞானசுந்தரம் அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் இயங்கி வந்ததையும் குறிப்பிட்டு கொள்ள முடியும். இதற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வைரமுத்துவிற்கு சொந்தமான வீட்டிலும் ஆசிரியர் திரு.ந.நாகேந்திரராசா அவர்களின் வீட்டின் ஒரு பகுதியிலும் பிராமண வீதியில் நாகேந்திரக்குருக்களினுடைய ''சரபணபவன்" இல்லத்திலும்ஆசிரியர் ச.சிவஞானசுந்தரம் அவர்களின் வீட்டிலும் தற்காலிகமாக இயங்கி வந்துள்ளது.

இவ்வாறு இந்நிலையமானது பல இடங்களில் மாறி மாறி இயங்கினாலும் கூட தனது நூலக சேவையினை தளராமல் வழங்கி வந்தது. (இந்த இடப்பெயர்வு கிடைத்த தகவலின் படியே தரப்பட்டுள்ளது. எனினும் இதன் தெளிவான காலத்தை அறிய முடியவில்லை)

1949ம் ஆண்டளவில் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னான காலப்பகுதியிலே வழங்கப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைவாக சமூக நலனைக் கருத்திற் கொண்டு சனசமூக நிலையம் எனும் அமைப்புக்கள் உருவாக்கம் பெற்றன. அவ்வகையிலேயே இப்பிரதேசத்து சமூக நலன் கருதிய செயற்பாடாக தமிழ் நிலையம் என உருப் பெற்றிருந்த சிந்தனை விதையானது விருட்சமாகி விழுதுகளை பரப்பி சனசமூகநிலையமாக விசாலித்துக் கொண்டது.

இந் நிலையத்தின் முதலாவது தலைவராக ஸ்ரீமான் த.இராமநாதப்பிள்ளை (B.A) அவர்களும் காரியதரிசியாக வைத்தியார் கி.குமாரசாமியும் பொறுப்புக்களை செவ்வனே ஆற்றி வந்துள்ளார்கள். அச் செயற்பட்டிற்கு துணை நின்ற உறுப்பினர்களாக திரு.வே.கணபதிப்பிள்ளை (சோதிடர்) மற்றும் தும்பளைக் கிராம தலைமைக்காரர் ஸ்ரீமான் இ.சு.கந்தையா, திரு.நா.கந்தசாமி, திரு.இ.சுப்பிரமணியம் ஆகியோர் அறியப்படுகின்றார்கள்.

மற்றும் இந்த ஆரம்ப காலகட்டத்திவ் முதல் தசாப்தங்களில் இந் நிலையத்தோடு முன்றின்று உழைத்தவர்களாக பின்வருபவர்களை குறிப்பிட முடியும். அந்தவகையில் திரு.வே.மதிபாலசிங்கம், திரு.வ.செல்வரத்தினம், திரு.பொ.தங்கராசா, திரு.ந.நாகேந்திரம், திரு.கந்தசாமி, திரு.கு.கந்தவேள், திரு.செல்வவிநாயகம், திரு.விநாயகம்பிள்ளை, திரு.சே.சோமசுந்தரஜயர், திரு.ச.ஆழ்வாப்பிள்ளை, திரு.ச.சிவப்பிரகாசம், திரு.மு.இரத்தினசிங்கம், திரு.த.திருஞானசம்பந்தர், திரு.திசைவீரசிங்கம், திரு.பொ.நடராசா போன்றவர்களை அறிய முடிகின்றது.

இக்காலகட்டத்தில் குமாராசாமி பரியாரியாரின் முயற்சியால் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் தொடராக வெளிவந்த நாவல்களை ஒன்றாக சேர்த்துக்கட்டி புத்தகமாக்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடமுடியும்.

அந்நேரத்தில் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் எடுப்பதற்கான செலவை ஈடுகட்டுவதற்காக சந்தாப்பணமாக மாதம் ஒரு ரூபாவாக தீர்மானிக்கப்பட்டது. இக் காலத்திலே சமூக அக்கறை மிகுந்தவர்களாக இவர்கள் வாழ்ந்திருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. விளையாட்டு மற்றும் பிற நிகழ்வுகள் கலை சம்பந்தமான ஈடுபாடுகள் சமூக சீர்திருத்தம் சார்ந்த விடயங்கள் போன்றவற்றில் ஆர்வமுடன் ஈடுபட்டிருப்பதை அறிகின்றோம்.

இந்நிலையத்தில் ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட பத்திரிகைகளாக வீரகேசரி, தினகரன், Daily News, சுதந்திரன், Times, ஆகியவற்றையும் இந்தியாவிலிருந்து சஞ்சிகைகளுக்கான சந்தா மூலம் நேரடியாக தருவிக்கப்பட்டவைகளாக கலைமகள், ஆனந்தவிகடன், கல்கி, கல்கண்டு போன்றவற்றையும் கண்ணன், மஞ்சரி, பேசும் படம், நல்வழி, குண்டூசி போன்ற இதழ்களையும் குறிப்பிடலாம்.

நல்ல கருத்துக்களை கேட்பதிலும் மற்றும் சிறந்த கலை உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் கொண்டிருந்த நாட்டத்தால் ஆண்டு விழாக்கள் பெருவிழாக்களாக கொண்டாடப்பட்டிருக்கின்றன. வருடாந்தம் கலை நிகழ்வுகள் பெரிய ஆலய முற்றலிலும் சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் நடந்தேறியுள்ளன. இவ்வாறான நிகழ்வுகளில் பிரசங்கங்கள், சங்கீதம் மற்றும் மேளக்கச்சேரிகள் உள்ளிட்ட நிகழ்வுகள் முக்கியம் பெற்றுள்ளன. இங்கு புகழ் பெற்ற பேச்சாளர்கள் இடைக்கிடையில் பல பாகங்களிலிருந்து மட்டுமன்றி ஏன் இந்தியாவிலிருந்து கூட சில சமயங்களில் வருகை தந்திருக்கிறார்கள். மேன்மைமிக்க இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு.V.V.கிரி அவர்கள் மற்றும் புகழ்பெற்ற பேச்சாளர்கள் வித்துவான் க.வேந்தனார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

ஊர் மக்களிடமிருந்தும் நிர்வாக உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்ட வாசிப்பு நாட்டம் காரணமாகவும் நூல்களை சனசமூக நிலையத்திற்கு

கொண்டுவந்து பாவனைக்கு விட்டுள்ளனர். தளபாடங்கள் குறித்து நோக்கும் போது அனேகமாக அச் செயற்பாடுகளில் முன்நின்ற உறுப்பினர்களே இதன் பெரும் பகுதியை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதனை நாம் குறிப்பிட வேண்டும்.

1959இல் வல்லிபுரம் என்று அழைக்கப்படும் வைத்தியர் க. சுப்பிரமணியம் (RPM) அவர்களால் வரதவிநாயகர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் எமது சனசமூக நிலையம் நிரந்தரமாக இயங்கத் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

எமக்கு கிடைத்த நிர்வாக கூட்ட அறிக்கைகளின் பிரகாரம் 1949ம் ஆண்டு தொடக்கம் 1962ம் ஆண்டு வரை கூட்டம் நடைபெற்ற பதிவினை ஆதாரமாகக் கொண்டும் வரலாற்றின் நிகழ்கால சாட்சிகளாக இங்கு எம்மிடையே நடமாடிக் கொண்டிருக்கும் ஒரு சில பெரியோர்களின் நினைவுக் குறிப்புக்களையும் கேட்டறிந்து இவ் வரலாற்றினை தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஏற்கனவே நிகழ்ந்த வரலாறு ஒன்றை 60 ஆண்டுகளின் பின்னர் மீட்டிப் பார்க்கும் போது அறிக்கையிலிருந்தும் மனிதர்களின் நினைவில் தடத்திலிருந்தும் சில நிரப்பப்படாத பக்கங்கள் இருப்பதனை நாம் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

எமது சனசமூக நிலைய வரலாற்றினை தொகுத்து நோக்குகின்ற போது தொப்புள் கொடி உறவுகளான தென்னிந்தியாவிற்கும் எமக்கும் இடையிலிருந்த இடையறாத தொடர்பினை நாம் மனம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆயினும் கலை நிகழ்வுகள் கலந்து கொண்ட பெரியார்கள் ஆயினும் அதற்கு தக்கதோர் சான்றாக விளங்குவதினை நாம் காணலாம். இத்தகையதோர் நிலையே இன்றுவரை நீடிக்கின்றது. என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இவற்றிலிருந்து எம்முன்னோர்கள் பெற்றுக் கொண்டவற்றின் வெளிப்பாடாக தாமே அவ்வாறான சஞ்சிகைகளை ஆக்கவும் முற்பட்டிருப்பதனை நாம் 70 களில் காண முடிகின்றது. இத்தகைய முயற்சிகளாக "குயிலோசை" "தென்றல்" "கலைமதி" போன்ற கையெழுத்து சஞ்சிகைகளின் உருவாக்கம் கணிப்பிற்குரிய ஒன்றாக திகழ்கின்றது. அச்சு வசதிகள் அற்ற அக்காலத்திலே எம்மூர் படைப்புக்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் எனும் பேரவா வெளிப்பட்டு நிற்பதனை நாம் காண்கின்றோம்.

இக் கையெழுத்து சஞ்சிகைக்கும் ஆண்டு விழாவிற்குமான முன்னறிவித்தல்களை சென்றல் தியேட்டரில் பணிபுரிந்த எம்மூரவரான தர்மதுரை குணராசன் (VTKR) திரைப்படக் காட்சிகளின் இடையிலான விளம்பரங்களில் இடம்பெறச் செய்தமையானது கவர்ச்சி மிக்கதோர் செய்தி கடத்தும் உத்தியாகவே கொள்ளப்பட வேண்டும்.

இவ்வூர் மக்கள் நாடக கலை தொடர்பாக பெரு ஊக்கம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். அனேக சந்தர்ப்பங்களில் ஊர் இளைஞர்கள் பங்களிப்போராகவும் பிற இடங்களிலிருந்தும் நாடகக் குழுக்களை ஊருக்கு அழைத்து வந்து கலைப்பணி பரவ வழிவகை செய்துள்ளதை காணுகின்றோம். குறிப்பாக மல்லாவியிலிருந்து வருகை தந்துள்ள நாடகக் குழுவொன்று "கசங்கிய றோசா" எனும் நாடகத்தை அரங்கேற்றியமையும் மற்றும் "சாணக்கியர் சபதம்", "வீரபாண்டியன்" மற்றும் "பேய்க் கூத்தும் ஆமணக்கங் தடியும்" எனும் நகைச்சுவை நாடகம் போன்றவையும் அரங்கேற்றியுள்ளன.

இந்நாடகங்களில் இக்கால கட்டத்தில் பங்குபற்றியவர்களாக திரு.க.யோகநாதன், திரு.க.பாலேஸ்வரன், திரு.செ.சிறீகாந்தா, திரு.இ.ரவீந்திரன், திரு.தி.புவிதரன், திரு.குணராசன், திரு.தி.இரவீந்திரன் (GS) திரு.ச.ஞானசேகரன், திரு.சி.சிவச்சந்திரன், திரு.ப.மகேந்திரன், திரு.சு.குமாரகுலசிங்கம் திரு.சு.விவேகானந்தன் மற்றும் பலர் சிறப்பாக நாடகங்களில் பங்குபற்றியிருப்பதைக் கூற முடியும்.

ஆலய முன்றலில் உள்ள நிலையக் கட்டடமானது அடிக்கடி சேதமாகிக் கொண்டு சென்றது. இதற்கான காரணம் அருகில் உள்ள பெரிய மரங்களின் வேர்களில் தாக்கம் எனவும் கொள்ளலாம். எனினும் காலத்திற்கு காலம் வந்த நிர்வாகத்தினரின் முயற்சியில் திருத்த வேலைகள் மின்னிணைப்பு என்பன மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடிகின்றது.

சனசமூக நிலையமானது பொருளாதார ரீதியாக ஸ்திரம் பெறுவதற்கான அனைத்து வழி வகைகளையும் கையாண்டிருக்கிறார்கள். சந்தாப்பணம் மற்றும் பழைய பத்திரிகைகள் விற்றல் மூலமாக இவை அன்று தொட்டு இன்று வரையான காலம் முழுவதற்கும் பொருத்தப்பாடு உடையது. எனினும் சில் கால கட்டங்களில் சமயோசிதமான உத்திகளையும் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் நிலையத்திற்கென நிரந்தர வருமானத்தைப் பெறும் நோக்கோடு 80களின் கடைக்கூற்றில் வங்கி உத்தியோகத்தர் உதயமூர்த்தி அவர்களால் குழாய்க்கிணறு துளைக்கும் கம்பி ஒன்று செய்யப்பட்டு அதை வாடகைக்கு விடுவதால் பெறப்படும் வருமானம் நிலையத்திற்குக் கிடைக்கக் கூடிய வகையில் எமக்கு வழங்கப்பட்டது.

அடுத்ததாக ஒரு தள்ளுவண்டில் ஒன்று ஊர்மக்களுக்கு அவசியமான தேவையாக இருந்தது. இதற்கமைய ஒரு தள்ளுவண்டில் செய்யப்பட்டு இதன் மூலம் கிடைக்கும் வருமானம் நிலையத்திற்கு பெறப்பட்டது. அதுமாத்திரமன்றி இக் காலகட்டத்தில் மாதனை கண்ணகை அம்மன் ஆலய விழாக்கால கடையினை அமைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் நிலையத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதற்கு எமதூர் இளைஞர்களின் பங்களிப்பும் ஆதரவும் நிறையவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் 90களின் ஆரம்பப் பகுதியில் மக்களின் ஒத்துழைப்புடன் 10 ரூபா பெறுமதியான அதிஸ்டலாப சீட்டிழுப்பை நடாத்தி அதன் மூலம் பெற்ற வருமானமும் நிலையத்திற்கு பெறப்பட்டது. இத்துடன் நின்று விடாமல் 2004ம் ஆண்டளவில் எமது ஊர் இளைஞர்களால் சனசமூக நிலையத்தின் வருமானத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கமாகக் கொண்டு சீமெந்து கற்கள் அறுக்கும் அச்சுக்கள் (6மர அச்சு) செய்யப்பட்டு நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ்வாறு பல வழிகளிலும் வருமானம் பெறப்பட்டு பத்திரிகைச் செலவுகள் மற்றும் கட்டடத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. என்பதையும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

90களில் இவ்வூர் இளைஞர்களால் ஆலய முன்றலில் உள்ள கிணறு சுத்திகரிக்கப்பட்டு புனருத்தாரணம் செய்தமை இக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வாக கால்நடைகள் சினைப்படுத்தல் மற்றும் நோய்கள் தொடர்பான வைத்தியர் ஒருவரைத் தெரிவு செய்து இதற்கென ஒரு பதிவுக்கொப்பி மற்றும் பெரு பெட்டி ஒழுங்கை களிமண் போட்டு செப்பனிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. தும்பளை மே.சி.க. கூட்டுறவுச் சங்கம் ஊடாக போரூட் நிறுவனத்தில் திருத்த வேலைகளால் சிறுதொகையும் வங்கி உத்தியோகத்தர் உதயமூர்த்தியிடம் சிறு தொகைகளும் பெறப்பட்டு கட்டிட திருத்த வேலைகள் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகர் தரும் நிதியத்தினூடாக சில வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும் மக்களுக்கு உதவி செயதனர். மற்றும் இந்த நிதியத்தின் ஈழநாதம் பத்திரிகை எடுப்பதற்கான நிதியினையும் மற்றும் குறிப்பிட்ட சில புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1989ல் சனசமூக நிலையங்கயங்களின் சமாசத்தின் உறுப்பினரான எமது நிலையத்தையும் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதன் ஆண்டுச் சந்தாவாக ரூபா 10 செலுத்தப்பட்டு வந்தது. மற்றும் 90களில் பின்னரும் பகுதியில் ஆசிரியர் வே. விமலன், ஆசிரியர் சு. இராமகிருஸ்ணர் ஆகியோர்களால் இலவச ஆங்கில மற்றும் கணித வகுப்புக்கள் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும் சிறப்பாக நடைபெற்றன.

1992ல் தும்பளை மேற்கு பாலர் பாடசாலை எனும் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு அதற்கு பொறுப்பாசிரியையாக திருமதி. ரஞ்சினி கௌரிபாலா மற்றும் செல்வி.க.ரதிவதனா அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

ஆலய முன்றலில் உள்ள கட்டடம் சேதமுற்று தொடர்ந்தும் அதனைப் பாவிக்க முடியாத நிலமை ஏற்பட்ட போது 2006ம் ஆண்டும் திரும்பவும் சனசமூக நிலையம் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதாவது

வரதவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பகவதி கணேசன் அவர்களுடைய வீட்டிற்கு மன்றம் பெற்ற ஒரு வாசிகசாலை இயங்கி வந்தது.

இவ்வூர் இளைஞர்களின் முயற்சியால் திரு.திருமதி பவானி தம்பதியினர் 2008ல் நிலையத்திற்கென ஒரு காணியை அன்பளிப்புச் செய்தார்.

2009ல் திருபாலேந்திரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளத்தில் தரவுகளை இடவேண்டிய தேவை ஏற்பட்டபொழுது சிலரிடம் வரலாற்றுத் தரவுகள் வாய் மூலம் சேகரிக்கப்பட்டு இணையத் தளத்தில் இடப்பட்டது நினைவுகொள்ளத்தக்கது.

தற்காலிகநிலையத்தில் இளைஞர்களின் சிரமதானப்பணிகள் மூலம் அழகுபடுத்தப்பட்டதுஅதாவது இளையோர்களின் முயற்சியினால் தற்காலிகநிலையத்திற்கு வெள்ளைபூசியும் கேற்றுக்கு வர்ணம் பூசும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் புதிய பெயர்ப் பலகையும் தயாரிக்கப்பட்டது.

2009ம் ஆண்டு வைகாசிமாதம் குழாய்க் கிணறுஒன்று இவ்வூர் இளைஞர்களின் முயற்சியினால் இடிக்கப்பட்டது என்பதும் வரலாற்றில் இடம் பெறவேண்டியசெய்தியாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சிலர் கட்டடநிதிக்காக பிரச்சாரம் செய்ய தொடங்கினர். இவர்களின் முயற்சியினால் முற்கட்டமாக குறிப்பிட்ட தொகைபணம் கிடைக்கப் பெற 2010ம் ஆண்டு யூன் மாதம் 3ம் திகதி அடிக்கல் நாட்டும் வைபவம் சிறப்பாக இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து கட்டடத்திற்காக நிதிகட்டம் கட்டமாக கிடைக்கப்பெற எமது சனசமூகநிலையமும் ஒவ்வொரு கட்டமாக வளர்ந்து வந்தது. இதனிடையே வெளிநாடுகளில் இருந்து எமது நிலையத்திற்கு நிதி சேகரிக்க பிரயத்தனம் மேற்கொண்டோர் சொந்த ஊருக்கு வருகைதந்த போது நிலையத்தால் கௌரவிப்பு நிகழ்வுகள்

இக்கட்டட வேலைகள் யாவும் பொறியியலாளர் திரு.இ.பாலேந்திர அவர்களின் திட்ட வரைபிற்கு ஏற்பவும் அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்பவும் நடைபெற்றன என்பதும் பதியப்பட வேண்டியதொன்றாகும்.அதே வேளை எமது பொருளாளர் திரு.கு.பஞ்சாட்சரம் அவர்களின் துல்லியமான கணக்கு தொடர்பான பதிவேடுகள் மிகவும் பாராட்டுதற்குரியது. இவ்வாறு சிறப்பாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு எம்மூர் இளையோர்கள் வர்ணம் பூசும் பணியை மேற்கொள்ள முன்வந்து அதனை சிறப்பாக செய்து முடித்துள்ளமையும் நினைவிற்கொள்ள வேண்டிய விடயமாகும்

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த தும்பளை மேற்கு சன சமூக நிலையம் 2012ம் ஆண்டு சித்திரை மாதம் 16 ம் திகதி புதிய கட்டடத்தில் சமூகப்பணியை ஆரம்பித்துள்ளது என்பது பாராட்டுதற்குரியது.

1. பயணிகளுடைய களைப்பைபோக்கிஆறிச் செல்வதற்காகதெருவை மூடி அமைக்கப்பட்ட இத் தெருமூடிமடம் பருத்திநகரையும் தும்பளையையும் இணைக்கும் வீதியிலே அமைந்துள்ளது.

2. பிராமண தெருவுக்கு பெருமை தேடித்தந்தது கலாநிதியந்திரசாலை என்ற அச்சகமாகும். அக்காலத்தில் வடமராட்சியில் ஒருசில சிறிய அச்சகங்கள் இருந்தாலும் பாரியயந்திரங்கள் கொண்ட பெரிய அச்சகமாக கலாநிதியந்திரசாலையே காணப்பட்டது. இன்றும் இந்த இடம் அச்சுக்கூடத்தடி என்றே அழைக்கப்படுகின்றது.

3. முற்காலத்தில் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் இத் திண்ணையில் அமர்ந்து அளவளாவிச் செல்வது வழமையான நிகழ்வாகும். இராப்பொழுதுகள் என்றால் விளக்குமாடத்தில் விளக்குகளும் ஏற்றப்பட்டிருக்கும்.

4. மிகப் பழைமையானகாலத்தில் (1930) அமைக்கப்பட்ட இத் தபால் பெட்டியானது, முன்பிருந்தே இத்தெரு பிரசித்தி பெற்று இருந்தமையால் இக் காலத்திலேயே முக்கியத்துவம் கருதி அமைக்கப்பட்டுள்ளது.

5. 1980கள் தொடக்கம் சமீபகாலம் வரை சனசமூகநிலைய வளர்சிக்கான நிதியை பெற பயன்படுத்திய தள்ளுவண்டில்.

6. பெரிய தம்பிரான் ஆலயமாக இருந்து காலஓட்டத்தில் வரதவிநாயகர் ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. எம்முடைய பழைய சனசமூககட்டடத்திற்கும் ஆலயத்திற்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளது.

7. முன்னோர்களுடைய இயற்கையைத் தெய்வமாக வழிபடும் கோட்பாட்டில் மரவழிபாடு ஒன்றாகும். இந்த ரீதியிலே இவ் முல்லைவழிபாடும் நோக்கற்குரியது.

8. வல்வெட்டித்துறைக்கும் பொலிகண்டிக்கும் இடையில் காணப்படும் கெருடாவில் கிராமத்திலே சுண்ணக்கற்பாறை நிலஉருவங்களிலே தரைக்கீழ் அமைந்த குகை ஆகும்.

# வள்ளுவர் காட்டும் சமூகம்

அறிமுகம்.

"தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள்" இது ரசிகமணி டி.கே.சி என பலராலும் போற்றப்பட்ட அமரர் டி.கே.சிதம்பரநாத முதலியார் தனது 'கம்பர் தரும் இராமாயணம்" எனும் புத்தகத்திற்கு எழுதிய முகவுரையின் முதல் வசனம்.

ஆயிரம் வருடங்களுக்கு முன் ஒரு மகாகவி (அதாவது கம்பர்) எழுதிய அதி அற்புதமான ஒரு மகா இலக்கியத்தை அந்த மொழி பேசுபவர்கள் இன்றும் வாசித்து விளங்கக்கூடியதாக இருப்பது தமிழ் மொழியில் மட்டுமே என்ற கருத்தில்தான் ரசிகமணி அவர்கள் இதனைக் கூறினார்கள். ஏனைய மொழிகளின் பழைய இலக்கியங்களை தற்போதுள்ளவர்கள் நேரடியாக வாசிக்கமுடியாதளவிற்கு அந்த மொழிகள் ஆயிரம் வருடம் காலத்தில் மாற்றமடைந்துவிட்டன.

ரசிகமணி அவர்கள் கம்பராமாயணம் போன்ற இலக்கிய நூல்களைக் கருத்திற் கொண்டே "தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள்" என்று கூறினார்.



கலாநிதி நா.சிவபாலன்,
வரத விநாயகர் கோவிலடி,
தும்பளை.

இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த நீதி நூல்களை (ஆம் ! திருக்குறளை) அதன் மூலத்திலேயே நாம் இன்னும் வாசிக்கக்கூடியதாக உள்ளதை நினைத்துப் பார்த்தால் "தமிழர்களாகிய நாம் புண்ணியம் செய்தவர்கள்" என்றும் கூறத் தோன்றுகின்றதல்லவா?

திருக்குறள் வெறும் நீதி நூல் மட்டுமல்ல. இன்றைய நவீன சிந்தனையாளர்கள் 'மக்களிடையேயான புரிந்துணர்வு' மற்றும் 'இணக்கப்பாடு', "ராஜதந்திரம்', 'சொல்வன்மை' மேலும் மன அழுத்தங்களிலிருந்து விடுபடும் வழிகள் என்பன பற்றிக் கூறுபவை எல்லாம், ஏன், அவற்றிற்கு மேலாகவும், இந்த நூலில் காணப்படுகின்றன.

தும்பளை மேற்கு சனசமூகத்தினர் புதிய கட்டடம் ஒன்றை அமைத்து ஒரு புதிய முயற்சியை தொடங்கும் இந்த வேளையில் ஒரு சிறு மக்கள் குழுவைப் பற்றி அதாவது ஒரு சனசமூகம் அல்லது சமூகம் பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார் என்பதைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்குறளின் பார்வைப் பரப்பு.

ஒரு இனம், மொழி, மதம் சார்ந்தது என்ற கூறத்தக்கதாக திருக்குறளில் இடம் காண்பது மிக அரிதாகும். உதாரணமாக "அகர முதல எழுத்தெல்லாம் ...." என்று தொடங்கும் முதல் பாடலில் (நான் அறிந்தவரை) எழுத்துக்களுக்கெல்லாம். 'ஆனா' (அ) முதலாவதாக உள்ளதைப் போன்று என்று தமிழ் மொழியின் அடையாளத்தைக் காட்டுகிறார். ஒரு குறளில் "திருமாலைப் போல" என்று கருதும்படியாக ஒரு சொல் வருகிறது. மற்றப்படி திருக்குறளானது இனம், மொழி, மதம், நிலம் அனைத்தையும் கடந்த ஒரு பொதுவான உலகப் பார்வையைக் கொண்ட நூலாகும்.

மிகச் சமீப காலங்கள் வரைகூட அந்த நாட்டுப்புலவர்கள் தங்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருக்க, புரோகிதர்கள் தமது மதக் கடவுள்களை மட்டும் போற்றிக்கொண்டிருக்க, இனம், மதம், மொழி, நிலம் கடந்த ஒப்பற்ற நூல் ஒன்றை இரண்டாயிரம் வருடங்களுக்குப் முன் ஆக்கியவரின் வழித்தோன்றல்கள் என நாங்கள் நிச்சயம் பெருமை கொள்ளலாம்.

இன்பத்துப்பாலை நீக்கிப்பார்த்தோமானால் பெரும்பாலான குறள்கள் தனிமனிதனொருவன் சரியாக வாழ கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் பற்றியும், அவன் மற்றையோருடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியுமே கூறுகின்றன. பொதுவாக விழிக்கப்படும் இந்தத் தனிமனிதன் பெரும்பாலும் ஒரு சாதாரண மனிதன்தான். சில சமயங்களில் மட்டும் வள்ளுவர் ஒரு விசேடமான மனிதன் நடந்து கொள்ளவேண்டிய முறைகள் பற்றிப் பேசுகிறார்.

உதாரணமாக ஒரு அரசன், மந்திரி, தூதன், படைவீரன், நண்பன், துறவி, இல்லறத்தான் (குடும்பத் தலைவன்) வாழ்க்கைத் துணைநலம் (மனைவி) என்னும் கடமையில் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளும் கூறப்படுகின்றன. ஆனால் பல குறள்கள் ஒரு சாதாரண மனிதன் வாழவேண்டிய முறைமை பற்றியும் அவன் இந்த உலகத்தவருடன் எவ்வாறு உறவாட வேண்டும் என்பதையுமே கூறுகின்றன.

மேலும் குடி அல்லது குடிமை பற்றியும் வள்ளுவர் சில இடங்களில் பேசுகிறார். இந்தக் குடி அல்லது குடிமை என்பது ஒன்றிரண்டு பரம்பரைகளுக்குட்பட்ட இனத்தவர்களைக் குறிக்கின்றது என்றே எனக்குத் தோன்றுகின்றது. அடுத்தபடியாக நாடு பற்றியே வள்ளுவர் குறிப்பிடுகிறார். குடி என்பதற்கும், நாடு என்பதற்கும் இடைப்பட்ட சிறு சமூகம் பற்றி வள்ளுவர் பெரியளவில் பேசவில்லை. இது அவரது உலகப் பொதுப் பார்வைக்குப் பொருந்தாத விடயமாக இருக்கக் கூடும்.

எனினும் குடி அல்லது குடிமை பற்றி அவர் கூறுவதை விரித்தும், நாடு பற்றி அவர் கூறியுள்ளதை சுருக்கியும் ஒரு சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் உய்த்தறியலாம்.

ஒரு தனிமனிதன் தனது கடமைகளை உணர்ந்தால் அதில் அதில் நேர்மையாக இருந்தால், மேலும் பிற மனிதருடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி தெரிந்திருந்தால் சமூக வாழ்க்கைக்கும் அது போதும் என்று வள்ளுவர் நினைத்திருக்கலாம். எனவே ஒரு சாதாரண மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் பற்றி வள்ளுவர் கூறும் சில விடயங்களை முதலில் பார்ப்போம்.

**தனிமனிதன்.**

'மடியின்மை' என்னும் 61 ஆவது அதிகாரத்தில் காரியங்கள் செய்வதில் தாமதம், கடமைகளை மறந்திருத்தல், சோம்பல் (மடி), மிகுந்த தூக்கம் என்பன கெட்டுப்போபவர்கள் அணியும் ஆபரணங்கள் எனக் கூறுகிறார். எனவே நன்மையை நாடுபவர்கள் இவற்றை விலக்க வேண்டும்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (குறள் 605)

இன்னும் என்ன செய்ய வேண்டாம் என்று கேட்டால்,

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)

என்று கூறுகிறார். அதாவது பெற்ற தாய் பசியால் வாடுவதைக் காண நேரிடினும் பெரியோர்கள் பழியான காரியம் என்று சொல்லக் கூடியவற்றை செய்யக்கூடாது.

அப்போது என்ன செய்ய வேண்டும்? உயர்ந்த நல்ல காரியங்கள் செய்யத்தான் விரும்ப வேண்டும். மற்றையவை தானாக வந்தாலும் செய்யாமல் விடுவதுதான் நன்று.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நன்று (குறள் 596)

அப்படி நாங்கள் விரும்பும் உயர்ந்த செயல்களை யெல்லாம் செய்ய முடியுமா என்று கேட்டால்,

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின் (குறள் 666)

என்தே வள்ளுவரின் பதில்.

அப்படி என்றால் விதியென்று ஒன்றுமில்லையா, எங்களுக்கு நடப்பது எல்லாம் விதியினாலல்லவா நிகழ்கிறது என்றால் "ஊழிற் பெருவலியாதுள" என்று கூறிய வள்ளுவரே, மனம் தளராமல் முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினையையும் புறந்தள்ள முடியும் என்று கூறினார்.

ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர் (குறள் 620)

இருப்பினும் இது சாதாரணமான விடயமல்ல. செய்ய வேண்டிய வேலையின் கடினத்தையும், தனது வலிமையினையும், அவ்வேலை நிறைவேறுவதை விரும்பாத பகைவர் இருந்தால் அவர்களின் பலத்தையும், தனக்கு உண்மையில் துணைவரக்கூடிய நண்பர்களின் பலத்தையும் தூக்கிப்பார்க்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் (குறள் 471)

இதுவும் இலேசான ஒன்றல்ல. ஏனெனில் எமக்கு நண்பர்கள் போலத் தோன்றுபவர்கள் எல்லோரும் உண்மையான நண்பர்களாக இருக்க மாட்டார்கள் எம்மை வணங்கும் கைகளுக்குள்ளும் கொலைக்கருவி இருக்கலாம். எங்கள் முன் வடிக்கும் கண்ணீரிலும் கெட்ட நோக்கம் மறைந்திருக்கலாம்.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து (குறள் 828)

அதுமட்டுமல்ல ஒன்றாய் இருப்பவர்களிடையேயும் பகைமை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஒன்றாயிருப்பவர்களிடையே பகைமை வந்துவிட்டால் அழிவைத் தவிர்க்கமுடியாது.

ஒன்றாமை ஒன்றியர் கட்டின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது (குறள் 886)

ஏன்! எங்களுக்கே எங்கள் அருகில் உள்ளவரின் மேல் வெளியே பகைமை காட்டாது மனதில் வைத்திருக்கும் மனத்தாபமாகிய குரோதம் (இகல்) உண்டாகலாம். இது தோன்றினால் கேடு நிச்சயம்.

இகல் காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல் காணும் கேடுதரற்கு (குறள் 859)

குரோதபுத்தி இல்லாத போதுதான் ஒருவரிற்கு ஆக்கம் வரும் அப்படியென்றால் உட்பகையோ, குரோதமோ வராது சுற்றியுள்ளவர்களைப் பேணுவது எப்படி?, தன்னிடம் உள்ளவற்றுள் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியதைக் கொடுப்பதனாலும், இனிமையான வார்த்தைகளைப் பேசுவதனாலுமே அது முடியும்.

கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சூழப் படும் (குறள் 525)

எனினும் நாங்கள் விரும்புவது விரும்பிய நேரத்தில் நடக்காமல் விடலாம். சில வேளைகளில் மேலதிகமாகவும் கிடைக்கலாம். உயர்வு வரும் போது பணிவைக் கைக்கொள்ள வேண்டும். தாழ்வு வருமானால் நிமிர்ந்து நின்று அதைத்தாங்கும் உரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (குறள் 963)

இந்தக்குணங்கள் எல்லாவற்றினாலும் தன்னை உரமுள்ளவனாக்கிக் கொண்ட இந்தத் தனி மனிதன் உலகிலுள்ள ஏனையோருடன் எவ்வாறு பழக வேண்டும்?

பிறர் பொருளை மனதாலும் விரும்பக்கூடாது (குறள் 178, 282), பிறரின் மனைவியை விழையக் கூடாது (குறள் 142), பிறர் முன்னிலையில், பயனற்ற வார்த்தைகளைப் பேசக்கூடாது (குறள் 191), கொடுப்பதானால் வறியோருக்கே கொடுக்க வேண்டும்.

மேலும் பிறர் நல்வாழ்வு கண்டு பொறாமைப்படக்கூடாது (குறள் 163), மன்னிக்கமுடியாத குற்றமொன்றை பிறன் தனக்குச் செய்தல் உடனே கோபம் வந்து தண்டித்தாலும் பரவாயில்லை ஆனால் உடனே திருப்பித் தண்டிக்க தைரியம் இல்லாது சும்மா இருந்துவிட்டு அக்குற்றத்தை மனதில் வைத்திருந்து அவன் நொந்த காலத்தில் பழிவாங்கக்கூடாது (குறள் 157).

இவையெல்லாம் முக்கியம் ஏனெனில் பிறருக்கு நாம் செய்யும் தீங்குகள் பிற்காலத்தில் எங்களைத் தாமாக வந்தடையும்.

பிறர்க்கு இன்னா முற்பகல்செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும் (குறள் 319)

குடி அல்லது குடிமை

முன்பு கூறியது போல் குடி அல்லது குடிமை என்பது இரண்டு, மூன்று பரம்பரைக்குள் உறவு பூண்டவர்களைக் குறிப்பது போலத்தான் தோன்றுகிறது. சில சமயங்களில் குடி என்னும் சொல்லை குடும்பத்தைக் குறிக்கவும் வள்ளுவர் பயன்படுத்துகிறார்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (குறள் 1022)

ஒரு குடும்பம் உயர்வடைவதற்கு குடும்ப அங்கத்தவர்களின் முயற்சியும், அத்துடன் நல்ல அறிவும் வேண்டும். அப்படித் தம் குடும்பத்தை உயர்த்த முயல்பவர்களுக்கு தெய்வம் தானாக முன்வந்து உதவும்.

குடிசெய்வல் என்னும் ஒருவருக்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (குறள் 1023)

சோம்பல் (மடி) மட்டும் வந்துவிட்டாலோ குடும்பம் என்னும் விளக்கு மங்கி மறைந்து விடும்.

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் (குறள் 601)

நல்ல பரம்பரையில் வந்தவர்கள் நல்ல நடத்தையைக் கைவிட மாட்டார்கள். வார்த்தை தவறமாட்டார்கள். மற்றவர்கள் பழிக்கும் எதனையும் செய்யமாட்டார்கள்.

ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார் (குறள் 952)

அதுமட்டுமல்ல கோடானு கோடி பணம் கிடைக்குமென்றாலும் அவர்கள் தகாத செயலைச் செய்யமாட்டார்கள்.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் (குறள் 954)

நல்ல குடியில் பிறந்தவர்கள் இன்சொல் தவறமாட்டார்கள். ஒருவரது வாயிலிருந்து வரும் ஒரு சொல்லே அவரை அடையாளம் காட்டி விடும், நிலத்தின் வளத்தை அதிலிருந்து வெளிக்கிளம்பும் முளை காட்டுவது போல.

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல் (குறள் 959)

நாடு

ஒரு நாட்டிற்கு முக்கியமாக ஐந்து வளங்கள் அமையப்பெற வேண்டும். நோயுண்டாக்காத சூழல், எதிர்பாராத ஆபத்து வந்தால் தாங்கக்கூடிய பொருளாதார பலம், போதிய விளைபொருட்கள், மகிழ்ச்சியை அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை, மக்களுக்கும் அவர்கள் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு என்பனவையே அவையாகும்.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து (குறள் 738)

அதேசமயத்தில் தனித்தனிக்குழுக்களாக அதிகாரம் செய்யும் கூட்டங்களும், நாட்டை பாழாக்கும் துரோகிகளும், அரசாங்கத்தை அலைக்கழிக்கும் இரகசிய கொலைக் கும்பல்களும் இருக்கக்கூடாதனவற்றுள் முதலிடம் பெறுகின்றன.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லாதது நாடு (குறள் 735)

சமூகம்.

சமூகம் பற்றி வள்ளுவர் பெரிதாக கூறாவிடினும் ஆங்காங்கே இனம், குலம் என்பன பற்றிக் கூறுவதையும், குடி அல்லது குடிமை பற்றி அவர் கூறுவதை விரித்தும், ஒரு நாடு பற்றி அவர் கூறியுள்ளவற்றைச் சுருக்கியும் ஒரு சிறு சமூகம் எப்படி இருக்க வேண்டுமென்று நாம் உய்த்தறியலாம். இப்போது இனம், குலம் என்பன பற்றி வள்ளுவர் கூறுவதைப் பார்ப்போம்.

ஒருவருக்கு நல்லமனம் இருந்தால் அக்குணம் அவரை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றும். ஆனால் வெறுமனே துன்பங்களிலிருந்து

காப்பாற்றப்பட்டால் மட்டும் போதாதே. வளர்ச்சியடையவும் வேண்டுமல்லவா? வளர்ச்சி என்பது இனம் நல்லதாக இருந்தால் மட்டுமே நடக்கும்.

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் (குறள் 457)

ஆனால் ஒருவரின் மனம் தூய்மையாய் இருப்பதற்கும் இனம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது சாத்தியமாகும்.

மனந்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் (குறள் 455)

அதுமட்டுமா? இனந் தூய்மையாக இருந்தால் ஒருவரின் செய்கையும் தூய்மையானதாகி விடும். அப்படிப்பட்ட நல்ல இனத்தில் ஒருவராவது ஒழுக்கம் தவறினால் அது அக்குலத்தின் பெருமையையே சுட்டெரித்து விடும். அவன் பழி பாவங்களுக்கு அஞ்சாதவன் ஆகிவிட்டாலோ எல்லோருடைய நலத்தையும் அது சுட்டெரித்து விடும்.

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை (குறள் 1019)

இதுவரை ஒரு தனிமனிதன், குடி, நாடு, இனம் மற்றும் குலம் என்பன எப்படியிருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறியதைப் பார்த்தோம். இனம் மற்றும் குலம் பற்றி வள்ளுவர் கூறியுள்ளது ஒரு சமூகத்திற்கும் பொருந்தும் என எடுத்துக்கொள்ளலாம். குடி அல்லது குடிமை பற்றி வள்ளுவர் கூறுவதை விரித்தும், நாடு பற்றி வள்ளுவர் கூறுவதை சுருக்கியும் ஒரு சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று உய்த்தறியும் பொறுப்பை வாசகர்களிடமே விட்டு விடுகிறேன்.

"நன்றி"

## சிக்கல் எண்ணே வாழ்வாய்

இன்பம் துன்பம் வரலாம் வாழ்வில்
உணர்ந்திட வேண்டும் அறிவில்
இன்பம் வாழ்வை மெய்யாக்கும்
துன்பம் வாழ்வை சிக்கலாக்கும்

எண்ணொன்றில் வரலாம் கற்பனை, மெய்
கண்ணான தத்துவம் கணிதத்தில்
எண்களை மெய் என்றும் மெய்யாக்கும்
எண்களை கற்பனை சிக்கலாக்கும்

இன்பங்கள் மெய் எண் போலாயின்
கற்பனை துன்பம் போலாகும் - சிக்கலெண்
தோன்றிட மெய்யும், கற்பனையும்
வாழ்வு வாழ்ந்திட இன்பமும் துன்பமும்

வன்முறையில் வீழ்ந்து வாழ்வை தொலைத்து விடின்
துன்பங்கள் கூடிவாட்டும் எமை
வன்மத்தை என்றும் தொலைத்துவிடின்
இன்பங்கள் தாலாட்டும் எமை

$Z = a + ib$ சிக்கலாகும்
$b = 0$ எனின் $z$ தூய மெய்யாகும்
$a = 0$ எனின் $z$ தூய கற்பனையாகும்
$a = 0, b = 0$ எனின் $z = 0$ ஆகும்

அன்பு + வன்மை வாழ்வின் ஊற்றாம்
வன்மத்தை தொலைத்திட தேன் வாழ்வாம்
அன்பு அழிந்திட வாழ்வு நெஞ்சில் வேலாம்
அன்பு, வன்மை இல்லாவிடின் துறவாழ்வாம்

அன்பு, நேர்மை வாழ்வின் அடிநாதம்
சான்றோர் சொல்லிய புதுவேதம்
அன்பு வாழ்வில் நஞ்சை பாலாக்கும்
என்றும் அறிந்திடின் இனிதாகும்



திரு.பஞ்சாட்சரம் மஹிதரன்,
மாணவன்,
கணிதப்பிரிவு 2012,
யா/ஹாட்லி கல்லூரி.

மட்டும், வீசலும் சிக்கலெண்ணின் உயிராகும்
எட்டுத் திசையிலும் கணிதம் இதுவாகும்
வாட்டாத சூத்திரம் $Z = r\,(Cos\theta + iSin\theta)$ என்றிடலாம் - கொலம்பஸ்
காட்டாத வரைபடம் ஆகன் வரிப்படம் என்றிடலாம்

நேர் பெறுதி எடுக்குமாம் மட்டு என்றும்
நேர்மை காட்டும் நேர்வழியே என்றும் - இதனால்
பார்புகட்டும் நற்செயல்கள் ஊர்முழுதும் செய்திடவே
போர் நிலை கொய்து ஓர் குலமாய் வாழ்ந்திடவே

சாதி, மதம் பார்க்கும் சண்டாளனுக்கு
நீதியான அன்பு கிடைக்காது - எங்கும்
நதியாக பரந்த கணிதத்தில் $-\pi < \theta < \pi$ இனை
மதியாமல் வீசல் கிடையாது.

## The Ink Speaks for Itself

The Ink Speaks for Itself,
Not that I can't free to speak,
But words are heartfelt.
When I first learnt that you are my mother,
Who forgets that moment,
when I first learnt your style of scolding me,
who forgets that moment,
when you held me to yourself when threr was no electricity,
Like the world was darkened by a supreme power,
That time you held me
who forgets that moment.
when I first answered back at you,
you looked incessantly yet your lips were tight,
Haybe you rightly knew it wasn't your time.
who forgts that moment,
when you were humble and the reason was me,
I didn's feel what you had gone through,
Likely my immaturity was as its spree.
who forgets that moment,
I wanted things to fall into place,
but I think my fun trip was keeping my heart safe.
I apologise.
Who forgets that moment,
When youy prayed and i unfaithful.
I failed in relations,
I failed with the burden of expectations,
I want to recall that has flled by,
Let's start all together a new recreated life.
Who forgets that moment.
When you caressed my cheek
And were ready to leave...
I stand before you with a feeling
far away from apology.
far away from annoyance,
far away from expectation
I just would like to tell you that.
I would never forget that
My happiest moment was went I Looked desperately around
and called out ma and you replled
Thank you



Mr.Sri.Anoyan

## சொல்லத்தெரியாத மகிழ்வின் சொற்கள்

நீங்கள் எழுதுமிந்த
சொற்களின் மீது உண்மையை
நிரப்புங்கள் காலம் உங்கள்
சந்ததிக்கு ஒரு
ஊரைப்பரிசளிக்கட்டும்.

இப்ப நான் உங்களுக்கு சொல்லப்போறது ஒரு கதை எண்டு நீங்கள் நினைக்கலாம் நானும் அப்படியே வச்சுக்கொண்டு சொல்லுறன்.

ஒரு சனசமூகநிலையம் என்பது எந்த அளவில் எங்கட ஊரில் இருந்தது என்றால் "சாப்பிட்ட பிறகு பேப்பர் படிக்கிற இடம்" என்கிற அளவில் தான் நான் அறிய பயன்பட்டிருக்கு. எனக்குத் தெரிய ஒரு நூல்நிலையத்தைத்தானும் முழுமையாக பயன்படுத்துகிற ஆட்கள் மிகக்குறைவான சதவிகிதம் தான் எங்கடை ஊரில் இருக்கினம். இது ஏன் நான் பள்ளிக்கூடம் படிச்ச காலத்தில பள்ளிக்கூட நூல்நிலையத்துக்குள்ள போகாத நிறையப்பேரை பாத்திருக்கிறன். அப்பவெல்லாம் நூல்நிலையம் என்பது பலருக்கும் எப்பவாவது போய் சோதினைக்கு உதவக்கூடிய ஏதாவது புத்தகத்தை எடுத்துக்கொண்டு வருவதற்கும் வகுப்புக்கள் இல்லாத பாடநேரத்தில் ஒளிந்து கொள்ளவுமே நிறையப்பேருக்கு பயன்பட்டிருக்கு.



திரு.பா.காண்டீபன்,

எண்பதுகளில் பிறந்து மு.தலையசிங்கத்தை தெரியாதென்றால் எப்படி பேராசிரியர் கா.சிவத்தம்பியை வாசிக்காமல் யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல், வரலாற்றை எப்படி அணுக முடியும்? காமிக்ஸ் கதைகளை கல்கியை கடந்து வராமல் இனப்பெருக்கத்தொகுதி மட்டும் படிக்கிறதில என்ன சுவாரசியம் இருந்துவிட முடியும்! புத்தகம் வாசிக்கிறது என்னவோ பெரும்பாவம் என்பதைப்போல பழக்கப்பட்ட கல்வி சமுதாயத்தை நாங்கள் கொண்டிருந்தோம். பாடப்புத்தகங்களின் மீது பழக்கப்பட்ட இளமைப்பருவம்தான் எம்மிடம் இருக்கிறது கதைப் புத்தகம் படிப்பதே வயதுக்கு மீறின செயல் என்பதாகத்தான் இருந்தது. எங்களுடைய ஊர். பத்து பன்னிரண்டு வயதிலேயே பொன்னியின் செல்வனை கையிலெடுக்கிறளவுக்கு வாசிப்பு இருந்தாலும் நாங்கள் வாசிக்க முடியாத சூழலிலேயே இருந்தோம். வாசிப்பின் சாத்தியங்களையும் கற்பனையின் ஆற்றலையும் இப்பொழுதிலிருக்கிற தலைமுறை எந்தளவுக்கு கொண்டிருக்கிறதென்று சொல்லவே முடியவில்லை. அது உண்மையில் கவலைக்கிடமான நிலையில்தான் இருக்கிறது. நான் இங்கே சொல்வது இப்பொழுது பதின்மத்துக்குள் நுழைந்திருக்கும் தலைமுறையைத்தான் அவர்களது பெரும்பாலான பொழுதுகளை தனித்தனி பிரத்தியேக வகுப்புக்களும் தொலைக்காட்சிகளும் நிறைத்துவிடுகின்றன என்பது கண்கூடு.

இணையம் பயன்படுத்தும் வசதி இருக்கிற பதின்மத்தின் முடிவுகளில் இருக்கிறவர்களும் “பேஸ்புக்கு” (Facebook) போன்ற சமூக வலைத்தளங்களில் அதே பொழுது போக்குகளிலும் வீண் அரட்டைகளிலும் பெருமளவு நேரத்தை செலவிடுகிறார்கள். அத்தோடு இணையம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அறிமுகமாவதில்லை. உதாரணத்துக்கு இணையம் எனக்கு முறையற்ற பாவனைக்குரிய தங்களின் தேடுதலுகானதாகத்தான் அறிமுகமாயிற்று இணையம் மிக இரகசியமானதாய் அப்பொழுது இருந்தது. இன்று இணையம் மிக வேகமானதும் எல்லோருக்கானதாகவும் இருக்கிறது. முன்பு பாதுகாப்பானதாய் இருந்த இணையம் இப்பொழுது ஒளிவு மறைவற்றதாகவும் இருக்கிறது. தனிமனிதனின் அந்தரங்கம் என்பது பாதுகாக்க முடியாததாய் யாரோ ஒருவர் எப்பொழுதும் கவனித்துக் கொண்டேயிருப்பதைப் போல ஒரு வெளியை இணையம் உருவாக்கி விட்டிருக்கிறது. ஆனாலும் அதன் தாக்கத்தை யாரும் பெரிதாக உணர்வதில்லை அவரவருக்கு ஏதாவொன்று நிகழும் வரை இணைய வாசிப்பையும் அதன் சாத்தியங்களையும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம் இப்போதைக்கு நான் சொல்ல வந்த கதையை சொல் முயற்சிக்கின்றேன்.

இந்த தலைமுறையின் வாசிப்பை பற்றி சொல்லப்போனால் அது இப்போதைக்கு வெறும் பழைய கதைகளை எழுதும் ஒரு குறைகூறும் பத்தியாக இந்த கதையை மாற்றிவிடக்கூடும். குறுகிய காலத்துக்குள் எனக்கு கிடைத்த தகவல்களையும் அவதானங்களையும் வைத்து சொல்லப்போனால் எங்கடை ஊரைப்பொறுத்த வகையில் செய்திகளையும் வெற்றுப் பரபரப்புக்களையும்

அறிந்து கொள்ளும் ஒரு முறையாக வளராத பழக்கமாகவே இருக்கிறது. வாசிக்க எவ்வளவோ இருந்தும் நாம் காலம் காலமாக பழக்கப்பட்ட புதினம் பாக்கிற பூராயம் பேசுகிற மனோநிலையோடே வாசிப்பை அணுகியிருக்கிறோம்.

என்னுடைய மட்டத்து ஆட்களிடமே வாசிப்பும் அதன் பழக்கமும் ஏதோ வித்தியாசமான குணாதிசயமாகத்தான் இருந்திருக்கிறது. இப்பொழுதாவது இணையம் பலருக்கும் பலதையும் அறிமுகப்படுத்திவிடுகிறது. முன்பெல்லாம் என் பதின்மங்களில் மைல் கணக்கில் சைக்கிளில் போய் வாங்கிக்கொண்டு வந்து படித்திருக்கிறோம். புத்தகங்களுக்காக சண்டையும் போட்டிருக்கிறோம். சில நல்ல சிநேகங்களும் கிடைத்திருக்கிறது. அதுவரையும் பேசியே இராதவர்களோடும் கூட புத்தகங்களுக்காக பேசி நெருக்கமான உறவாக கூட ஆகியிருக்கிறது.

பெரும்பாலும் புத்தகங்களை பரிமாறிக்கொள்வதற்காகவே சந்தித்துக்கொள்வோம். நாம் பேசிக்கொண்டிருந்ததைவிட நாம் சேர்ந்திருந்து வாசித்த பொழுதுகள் தான் அதிகம். வாசித்ததை பேசுவதில் இருக்கிற உற்சாகம் வாசிப்பைப்போலவே சுவாரஸ்யமானது. வாசிப்பின் அதி உச்சம் அதன் பகிர்வில் இருக்கிறதாக நான் நம்புகிறேன். கதை மாந்தர்களைக்குறித்த உரையாடல்கள் சுவாரஸ்யமானவை. அது அவர்களுடைய மனிதர்களைப் பற்றிய நுண்ணிய அவதானங்களை காட்டுவதாக இருக்கும். வாசிக்கிற பழக்கத்திலும் வாசித்ததை பேசவோ பகிரவோ முடியாத சூழல் என்பது பெரும் அசௌகரியம். Neretpara காலம் நம்மிடமிருந்து புத்தகங்களைக் கூட பறித்து விடுகிறது என்பதிலும் நம் சமூகம் புத்தகங்களுக்கான நேரங்களோடு இல்லையென்பதும் எவ்வளவு பெரிய சோகம். தொலைக்காட்சியும், அரட்டைகளும், கணினி விளையாட்டுக்களும் மணிக்கணக்கில் விழுங்கிவிடுகிற கிரிக்கட் போட்டிகளும் ஈர்க்கிற அளவுக்கு புத்தகங்கள் நம் இளைய தலைமுறையினரை ஈர்ப்பதில்லை என்பதும் பணம் துரத்துமிந்த வாழ்வு புத்தகங்களை கவனிப்பதற்கான சொற்ப நேரங்களையேனும் கொண்டிருப்பதில்லை என்பது எமது நாட்டின் எளிய மக்களின் சாபம்.

இந்த இடத்திலை கதைக்கு ஒரு இடைவெளி வைப்பம் என Neretpara சமூக வளர்ச்சியில் சனசமூகநிலையங்களின் பங்கு என்பது மிக முக்கியமானதாய் இருக்கிறது. சமூகத்தின் பிரச்சினைகளில் முதலில் பங்கெடுக்கிற அமைப்பு இந்த சனசமூக நிலையங்கள்தான் அப்படியானதொரு சமூகநிலையத்திற்கு ஆதாரமான அமைவான கட்டடம் இல்லாதிருப்பது அதன் செயற்பாடுகளில் பெரும் இடர்பாடுகளை உருவாக்குவது. அப்படி இல்லாது போன சனசமூகநிலையங்களின் வரலாறு நமது நாட்டில் இருக்கின்றன. வாழ்ந்த வீட்டிலிருந்தும் வெளியேற்றப்பட்ட சனங்கள் இருக்கிற நாடு நம்முடையது இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

ஆரம்பத்தில் தும்பளை மேற்கு சனசமூகநிலையம் என்று எனக்கு ஒரு அழைப்பு இந்த பேஸ்புக் தளத்தில் கிடைத்த பொழுது இது மற்றொரு குழுவுக்கான அறிவிப்பை போல என்று நினைத்திருந்தேன். இருந்தும் அது என்னுடைய ஊருக்குரியதும் அதன் நிர்வாகத்துக்குரியவர்கள் எனக்கு நெருக்கமான நண்பர்களாயிருந்ததிலும் யோசிக்காமல் இணைத்துக் கொண்டேன். வெகு சாதாரணமாய் ஆரம்பித்த இந்த சமூக வலைத்தளகுழுமம் நிதானமாக தனது அடுத்த கட்டத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கையில் இணையத்தை முறையாக பயன்படுத்துவதில் கிடைக்கிற மற்றுமொரு பெரும் பயனை அடைந்து கொண்டிருந்தோம்.

இணையம் கடல்கடந்து நம் மக்களை எல்லாம் அறிமுகம் செய்து இணைத்து வைக்க ஒரு சனசமூக நிலையத்தின் அவசியத்தை நம் ஊரின் அனைத்து தரப்பிற்கும் எடுத்துச் செல்வதில் எந்த சிரமும் இருக்கவில்லை. அத்தோடு எந்த முன்னெடுப்பிலும் இருக்கிற சிக்கல்களைப்போல இந்த கட்டத்துக்கான முன்னெடுப்பிலும் தடங்கல்களும் அபிப்பிராய பேதங்களும் இருக்கத்தான் செய்தன என்றாலும் கட்டடம் முழுமையாக வளர்ந்து நிற்கிறதைப் பார்க்கையில் ஒரு சிலிர்ப்பும் வெற்றியின் பரவசமும் உள்ளே பரவுவதை உணர முடிகிறது.

இந்த திட்டத்தின் முழுமையை குறித்த ஒரு கேள்வி மனப்பாங்கு எல்லோரிடமும் இருந்தாலும் இப்பொழுது ஒரு புதிய நம்பிக்கையை எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார்கள் நிர்வாகத்தினரும் நமது மக்களும். இந்த நம்பிக்கைதான் சனசமூக நிலையத்தின் அடுத்தடுத்த கட்ட திட்ட முன்னெடுப்புகளுக்கான அடிநாதமாக இருக்கமுடியும். இந்த குழுமமும் நிர்வாகமும் எல்லோருமாக முன்பைவிட அதிகம் மினக்கெடவும் தொடர்ந்து முன்னெடுக்கவும் வேண்டிய தேவைகள் இனிமேல்தான் இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

வெறுமனே வாழ்த்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ளும் என்னுடைய பங்கெடுப்பின் பற்றாக்குறை என்னை வெட்கப்பட வைக்கும் இந்த தருணத்தில் என் மக்களைக்குறித்து சந்தோசப்படுகின்றேன்.

பின்குறிப்பு அல்லது நீங்கள் தேடும் கதை கிட்டதட்ட முப்பதுகளில் இருந்துகொண்டு இப்படியொரு முழுமையற்ற இந்த பத்திகளை கதையென்று சொல்லிக்கொண்டிருப்பது கூட எனது வாசிப்பின் போதாமைதான். எனக்கு சரியாக சொல்லத்தெரியாத இந்த சனசமூகநிலைய திட்டத்தின் கதையை எனது மொழியில் எழுதியிருக்கிறேன் ஏற்றுக்கொள்க.

*"வாசிக்கவும் வாசிக்கிறதை பகிரவும் கிடைக்கிற சூழல் எல்லோருக்கும் வாய்க்கட்டும்"*

"நன்றி"

## தொலைவில் தெரியும் என் சிறகு...

இதுவரை நாளும்
நான் சிறகுகளால் அளந்த வானம்
முடிவிலியாய் நீள்கிறது
காற்றோ புயல் மழையோ
கொதிக்கும் வெயிலோ
எதுவுமே பொருட்டாயிருந்தில்லை
அந்தரத்து சுந்தரங்களிலே
பாடித்திரிந்தேன்
ஆனால்
இன்றாவது வேளையுடன்
கூடு ஏக வேண்டும் என்ற அவா
எனைத் துரத்த...
என் பயணம் என்பது தினமும்
குறித்ததொரு திசையிலோ
கணிக்கப்பட்ட
இலக்குகளுக்கிடையேயோ
அமைந்ததொன்றல்ல
எதையும் தாண்டி தாண்டி
தொலைவில் தெரியும் என் சிறகு...



திரு.கமலநாதன் சுதர்சன்,
தும்பளை மேற்கு.

# தும்பளை மேற்கு சனசமூக நிலைய கணக்கு அறிக்கை
# 2008.11.16 தொடக்கம் 2012.03.31 வரை

| வரவுகள் | தொகை | செலவுகள் | தொகை |
|---|---|---|---|
| சென்ற வருட மிகுதி | 115.00 | சமாசச்சந்தா | 500.00 |
| பரு.கிராமியவங்கி | 7,745.70 | கணனிபதிவு, போட்டோபிரதி | 18,657.12 |
| பரு.தேசிய சே.வங்கி சேமிப்பு க/கு | 13,444.51 | குழாய்கிணறு அமைப்பு | 71,881.00 |
| பரு.தேசிய சேமிப்பு வங்கி நி.வைப்பு | 27,651.73 | காணிப்பதிவு கட்டிட அனுமதி | 43,584.30 |
| அங்கத்தவர் சந்தா | 62,900.00 | சிற்றுண்டி | 8,745.00 |
| வெளிநாட்டு அன்பளிப்பு | 3,623,959.35 | தொலைபேசி இணைப்பு | 12,060.00 |
| உள்நாட்டு அன்பளிப்பு | 603,200.00 | கீழ்தளகட்டிட வேலைக் கூலி | 1,688,895.95 |
| சேவாலங்கா அன்பளிப்பு | 125,000.00 | நிலை,கதவு,யன்னல் | 452,470.00 |
| வங்கிவட்டி | 107,610.68 | அலுமினியக்கதவு | 45,000.00 |
| குழாய்க்கிணறு இடிக்கும் கம்பி வாடகை | 2,000.00 | நிலத்துக்கு ரெறாசோ | 126,365.00 |
| கல்அரியும் அச்சு வாடகை | 10,100.00 | மேல்மாடி கட்டிடவேலைகள் | 508,362.00 |
| பழைய பத்திரிகை விற்பனை | 7,636.00 | நிலை யன்னல் | 222,260.00 |
| தினசரிப்பத்திரிகை வாங்க அன்பளிப்பு | 48065.00 | கூரை வேலை | 529,360.00 |
| மக்கள் பங்களிப்பு | 37,060.00 | பீலி பொருத்தல் | 40,926.00 |
| கட்டிடத்திறப்புவிழா நிதி | 145,675.00 | மின் இணைப்பு | 100,912.50 |
| புதிய புத்தகம் வாங்க அன்பளிப்பு | 2,000.00 | நடைபாதை சுவர் | 112,470.00 |
| நகரசபைமானியம் | 16,400.00 | பெயின்ற் வேலை | 79,580.00 |
| | | தினசரி பத்திரிகை வாங்க | 54,770.00 |
| | | பிரயாணச்செலவு | 2,648.00 |
| | | வங்கிக்கழிவு | 1,400.59 |
| | | தே.சே.வ.சேமிப்பு க.மீதி | 655,740.93 |
| | | தேசிய.சேமிப்பு நிலையானவைப்பு | 62,005.58 |
| | | கையிருப்பு | 1,969.00 |
| | 4840562.97 | | 4,840,562.97 |

## கிணறு அமைப்பு கட்டிட அமைப்புக்கு அன்பளிப்பு விபரங்களின் சாராம்சம்

| | | |
|---|---|---|
| 1) | அசார்பஜான் | 30000.00 |
| 2) | ஜேர்மனி | 1004616.53 |
| 3) | கனடா | 2158836.10 |
| 4) | லண்டன் | 235017.97 |
| 5) | அவுஸ்திரேலியா | 57500.00 |
| 6) | கட்டார் | 56943.50 |
| 7) | சுவிஸ் | 61045.25 |
| 8) | பிரான்ஸ் | 10000.00 |
| 9) | நியூசிலாந்து | 10000.00 |
| 10) | உள்ளூர் அன்பளிப்பு | 567500.00 |
| 11) | கிணறு அமைப்பு | 35700.00 |
| 12) | சேவாலங்கா | 125000.00 |
| | | 4352159.35 |

## அசார்பஜானிலிருந்து கட்டிட அமைப்பு நிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | ர.இந்திரஜித் | 10000.00 |
| 2) | ம.சுரேஷ் | 10000.00 |
| 3) | சி.ரமேஷ் | 10000.00 |
| | | 30000.00 |

## ஜேர்மனியிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | சந்திரசேகரம் சந்திரகுமார் | 14858.98 |
| 2) | சிவசுப்பிரமணியம் ஜெயராசா | 29623.98 |
| 3) | சிவஞானம் வாசன் | 167743.98 |
| 4) | கந்தசாமி பாலச்சந்திரன் | 14858.98 |
| 5) | செல்வரத்தினம் அமிர்தலிங்கம் | 30708.98 |
| 6) | செல்வரத்தினம் சாந்தலிங்கம் | 44458.98 |
| 7) | செல்வரத்தினம் சந்திரலிங்கம் | 14858.98 |
| 8) | குமாரகுலசிங்கம் பிரசாத் | 30708.98 |
| 9) | குமாரகுலசிங்கம் சுஜிதாப் | 30708.98 |
| 10) | குமாரகுலசிங்கம் பிரதாப் | 30708.98 |
| 11) | குமாரகுலசிங்கம் ராசமலர் | 173358.98 |
| 12) | சுப்பிரமணியம் குமாரகுலசிங்கம் | 165858.98 |
| 13) | இராமலிங்கம் கணேசராசா | 7429.49 |
| 14) | தி.பேரின்பநாதன் | 52061.56 |
| 15) | தி.ஜெயக்குமார் | 14858.98 |
| 16) | க.ஜெயசங்கர் | 52075.32 |
| 17) | சி.குவேந்திரராசா | 14858.98 |

| | | |
|---|---|---|
| 18) | மா.சுரேஸ்குமார் | 29745.52 |
| 19) | ச.திலீப்குமார் | 14858.98 |
| 20) | வ.கலாராணி | 14858.98 |
| 21) | சி.லோகேஸ்வரன் | 10401.42 |
| 22) | சு.சஞ்சீவன், சு.பார்த்தீபன் | 10000.00 |
| 23) | த.திரௌபதை | 5000.00 |
| 24) | தி.சுரேஸ்குமார் | 7443.27 |
| 25) | க.கோணேஸ்வரநாதன் | 7443.27 |
| 26) | ப.தர்சன் | 15123.00 |
| | | 1004616.53 |

## கனடாவிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | S.சபேசன் | 70273.77 |
| 2) | S.விசாகன் | 11773.77 |
| 3) | J.தர்மிளா | 17586.88 |
| 4) | M.மிருணாளினி | 29286.88 |
| 5) | T.புவிதரன் | 82047.54 |
| 6) | T.கிரிதரன் | 23473.77 |
| 7) | T.தேவகுமார் | 128773.77 |
| 8) | K.தர்மலிங்கம் | 128773.77 |
| 9) | T.விஜயகுமார் | 23473.77 |
| 10) | K.யோகநாதன் | 70273.77 |
| 11) | T.ஜெகநாதன் | 11773.77 |
| 12) | S.சிவகண்ணன் | 126773.77 |
| 13) | R.தவராஜ் | 5886.88 |
| 14) | S.இரத்தினவடிவேல் | 5886.88 |
| 15) | P.நளினி | 23473.77 |
| 16) | K.பாஸ்கரன் | 5886.88 |
| 17) | M.கணேந்திரன் | 35173.77 |
| 18) | S.ஸ்ரீகாந்தா | 11773.77 |
| 19) | B.செல்வராணி | 70273.77 |
| 20) | S.மங்களபவானி | 187273.77 |
| 21) | T.கார்த்திகா | 11773.77 |
| 22) | H.சத்தியபாமா | 5886.88 |
| 23) | சந்திரா ஜீவா | 33773.77 |
| 24) | V.சாந்தகுமார் | 11773.77 |
| 25) | K.வாகீசர் | 11773.77 |
| 26) | S.ஸ்ரீநிவாசன் | 11773.77 |
| 27) | T.தங்கநாதன் | 70273.77 |
| 28) | K.பாலேஸ் | 5886.88 |

| | | |
|---|---|---|
| 29) | S.நிர்மலா | 255831.36 |
| 30) | S.குகன் | 128773.77 |
| 31) | R.நிமலன் | 11773.77 |
| 32) | ஸ்ரீ.ராகுலன் சியாமளா | 10900.00 |
| 33) | ந.பார்த்தீபன் | 11000.00 |
| 34) | ந.மனோகர் | 11000.00 |
| 35) | பா.கமலாவதி | 11000.00 |
| 36) | க.இராஜசங்கர் | 11000.00 |
| 37) | சி.மனோன்மணி | 10000.00 |
| 38) | க.பாலேஸ்வரன் | 109027.10 |
| 39) | S.தேவராசா | 29250.00 |
| 40) | சி.கிருட்டினராசா | 11700.00 |
| 41) | பா.கிருபாளினி | 11700.00 |
| 42) | இ.தவராசா | 11700.00 |
| 43) | தேவரட்ணம் ஜனத் | 11700.00 |
| 44) | சிறீ கிருட்டிணன் புனிதவதி | 11700.00 |
| 45) | S.ஜெயராணி | 11700.00 |
| 46) | துரைராசா ராசபதி | 5850.00 |
| 47) | து.கலாவதி | 5850.00 |
| 48) | து.தேவிகா | 5850.00 |
| 49) | து.ரேணுகா | 5850.00 |
| 50) | R.பஞ்சரட்ணம் | 5850.00 |
| 51) | R.நந்தினிதேவி | 5850.00 |
| 52) | R.சுலோசனா | 5850.00 |
| 53) | R.ராகினி | 5850.00 |
| 54) | R.பிருந்தா | 5850.00 |
| 55) | கனடா வாழ் தும்பளை மேற்கு மக்கள் | 31590.00 |
| 56) | கனேடிய அன்பர்கள் (தில்லைராணி ஊடாக -பெறப்பட்டது) | 22000.00 |
| 57) | விமலாதேவி ஸ்ரீதரன் | 25000.00 |
| 58) | ச.ஞானேசன் | 100009.00 |
| 59) | பா.சின்மயானந்தன் | 25000.00 |
| | | 2158836.10 |

## இலண்டனிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | சி.ஞானேஸ்வரன் | 25000.00 |
| 2) | த.பிரதீபன் | 18400.00 |
| 3) | ரோகினி மாதவன் | 46000.00 |
| 4) | நாகநாதன் | 27600.00 |

| | | |
|---|---|---|
| 5) | S.தர்மகுலசிங்கம் | 57317.97 |
| 6) | ந.சிறிசுப்பிரமணியம் | 18400.00 |
| 7) | இ.செல்வக்கடுங்கோ | 17300.00 |
| 8) | ஜெ.சிவரூபன் | 25000.00 |
| | | 235017.97 |

## அவுஸ்திரேலியாவிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | சுகந்தினி ஸ்ரீதரன் | 10000.00 |
| 2) | இ.தயாளன் | 10000.00 |
| 3) | பி.ரவியழகன் | 37500.00 |
| | | 57500.00 |

## கட்டாரிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | ச.வசீகரன் | 26943.00 |
| 2) | ப.குமணன் | 30000.00 |
| | | 56943.00 |

## சுவிஸிலிருந்து கட்டிட நிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | சி.நளினி | 50000.00 |
| 2) | அ.ராஜேந்திரன் | 11045.25 |
| | | 61045.25 |

## பிரான்சிலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | ஈ.கமலகுமார் | 10000.00 |

## நியூசிலாந்திலிருந்து கட்டிடநிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1) | K.சண்முகநாதன் | 10000.00 |

**உள்ளூரிலிருந்து கட்டட நிதி அன்பளிப்பு செய்தோர் விபரம்.**

| | | |
|---|---|---|
| 1) | கு.பஞ்சாட்சரம் | 23000.00 |
| 2) | கு.சாந்தகுமார் | 10000.00 |
| 3) | சி.வல்லிபுரம் | 10000.00 |
| 4) | இ.பஞ்சநாதன் | 1000.00 |
| 5) | சி.குலேந்திரன் | 10000.00 |
| 6) | திருமதி.ச.சிவஞானசுந்தரம் | 10000.00 |
| 7) | கி.பாலகெங்காதரன் | 10000.00 |
| 8) | சி.பவித்திரன் | 10000.00 |
| 9) | பா.ஜெயசீலன் | 5000.00 |
| 10) | பா.இரகுவரன் | 10000.00 |
| 11) | ஏ.வரலட்சுமி | 10000.00 |
| 12) | சு.விவேகானந்தன் | 5000.00 |
| 13) | செ.சிதம்பரநாதன் | 15000.00 |
| 14) | சோ.விசாலாட்சி | 10000.00 |
| 15) | செ.உமாபதி | 10000.00 |
| 16) | க.கோபாலகிருஷ்ணன் | 2000.00 |
| 17) | ஆ.விஜயரட்ணம் | 6000.00 |
| 18) | சி.இராஜசேகரம் | 5000.00 |
| 19) | கோ.இராஜேஸ்வரி | 6000.00 |
| 20) | கு.கணேசமூர்த்தி | 10000.00 |
| 21) | தெ.முரளிதரன் | 2000.00 |
| 22) | ந.முரளீதரன் | 5000.00 |
| 23) | வே.கார்த்திகேசு | 2000.00 |
| 24) | நா.அருந்தவராசா | 10000.00 |
| 25) | வீ.பாலகிருஷ்ணன் | 10000.00 |
| 26) | பா.கமலினி | 5000.00 |
| 27) | S.பாலசுப்பிரமணியம் | 1000.00 |
| 28) | இ.ஆனந்தநாதன் | 10000.00 |
| 29) | வி.கமலாவதி | 10000.00 |
| 30) | சி.சிவபாதம் | 3000.00 |
| 31) | தி.சாருமதி | 5000.00 |
| 32) | வி.துருவசோதி | 10000.00 |
| 33) | ச.சந்திரலிங்கம் | 5000.00 |
| 34) | க.செல்வரத்தினம் | 2000.00 |
| 35) | த.விக்கினேஸ்வரன் | 15000.00 |
| 36) | பா.ரவீந்திரநாதன் | 10000.00 |
| 37) | சி.ஆறுமுகம் | 5000.00 |
| 38) | கை.சசிபிரபா | 10000.00 |

| | | |
|---|---|---|
| 39) | S.P.விவேகானந்தன் | 10000.00 |
| 40) | ஏ.அருள்செல்வம் | 54000.00 |
| 41) | சி.ஜெயராஜ் | 2000.00 |
| 42) | ச.பேபிசரோஜா | 3000.00 |
| 43) | ச.சிவப்பிரகாசம் | 5000.00 |
| 44) | த.குருபரன் | 10000.00 |
| 45) | சி.தவராசா | 2000.00 |
| 46) | அம்பிகா புலேந்திரன் | 20000.00 |
| 47) | இ.மகேந்திரம் | 5000.00 |
| 48) | சி.சசிநாதன் | 2000.00 |
| 49) | ப.குமணன் | 5000.00 |
| 50) | செ.கோகுலன் | 5000.00 |
| 51) | த.உதயமூர்த்தி | 8000.00 |
| 52) | வி.செல்வேந்திரன் | 10000.00 |
| 53) | ச.சிறீகாந் | 3000.00 |
| 54) | ச.சிவஞானசுந்தரம் | 5000.00 |
| 55) | நா.முத்துகிருஷ்ணன் | 10000.00 |
| 56) | தே.தேவராஜேந்திரன் | 5000.00 |
| 57) | சி.சங்கநாதன் | 5000.00 |
| 58) | சே.அமிர்தலட்சுமி | 5000.00 |
| 59) | வே.நடராசா | 5000.00 |
| 60) | கி.இந்திராணி | 5000.00 |
| 61) | தி.கமலநாதன் | 5000.00 |
| 62) | இ.பாலேந்திரா | 30000.00 |
| 63) | க.இரத்தினம் | 4000.00 |
| 64) | செ.சுந்தரமூர்த்தி | 10000.00 |
| 65) | சி.சேதுபதி | 5000.00 |
| 66) | பி.பிறேமகோணேஸ்வரன் | 10000.00 |
| 67) | சி.காயத்திரி | 4500.00 |
| 68) | தி.கணேசமூர்த்தி | 2000.00 |
| 69) | கோ.முகுந்தன் | 10000.00 |
| 70) | ச.நீலாம்பரன் | 5000.00 |
| | | 567500.00 |

**உள்ஊரிலிருந்து குழாக்கிணறு அமைப்பதற்கு அன்பளிப்பு செய்தோர் விபரம்.**

| | | |
|---|---|---|
| 1) | கு.பஞ்சாட்சரம் | 1000.00 |
| 2) | வி.துருவசோதி | 500.00 |
| 3) | ஏ.வரலட்சுமி | 500.00 |
| 4) | S.புலேந்திரன் | 500.00 |
| 5) | தே.தேவராஜேந்திரன் | 500.00 |
| 6) | வாணி செல்வரத்தினம் | 500.00 |
| 7) | கு.கனகசுந்தரம் | 500.00 |
| 8) | S.மகாலிங்கம் | 500.00 |
| 9) | வே.நடராசா | 500.00 |
| 10) | வே.சிவபாலன் | 300.00 |
| 11) | P.கோணேஸ்வரன் | 500.00 |
| 12) | R.ஸ்ரீரங்கநாதன் | 1000.00 |
| 13) | த.விக்னேஸ்வரன் | 1000.00 |
| 14) | பா.ஜெயசீலன் | 1000.00 |
| 15) | சி.வல்லிபுரம் | 1000.00 |
| 16) | சி.ஞானபாலன் | 500.00 |
| 17) | கா.சிவநேசன் | 500.00 |
| 18) | சி.குலேந்திரன் | 500.00 |
| 19) | சிவநேசன் பவித்திரன் | 1000.00 |
| 20) | செ.சிதம்பரநாதன் | 500.00 |
| 21) | மு.வேலாயுதம்பிள்ளை | 500.00 |
| 22) | க.குமாரதாசன் | 300.00 |
| 23) | வி.கமலாவதி | 500.00 |
| 24) | கு.பாலகிருஸ்ணன் | 500.00 |
| 25) | சி.சேதுபதி | 500.00 |
| 26) | சி.சிவராசா | 100.00 |
| 27) | சி.ஆறுமுகம் | 500.00 |
| 28) | சி.சந்திரகுமார் | 200.00 |
| 29) | நா.ராதாராணி | 1000.00 |
| 30) | சி.செந்திவேல் | 500.00 |
| 31) | S.P.விவேகானந்தன் | 500.00 |
| 32) | சி.சங்கநாதன் | 300.00 |
| 33) | இ.நிரஞ்சன் | 300.00 |
| 34) | மு.இராசேந்திரா | 300.00 |

| | | |
|---|---|---|
| 35) | தி.சாருமதி | 1000.00 |
| 36) | பா.ரவீந்திரநாதன் | 500.00 |
| 37) | இ.பாலேந்திரா | 1700.00 |
| 38) | ர.லாவண்யஜித் | 300.00 |
| 39) | சு.இராமகிருஸ்ணன் | 1000.00 |
| 40) | கு.சாந்தகுமார் | 1000.00 |
| 41) | தெ.முரளிதரன் | 500.00 |
| 42) | க.சிவசுப்பிரமணியம் | 1000.00 |
| 43) | சோ.விசாலாட்சி | 1000.00 |
| 44) | செ.உமாபதி | 1000.00 |
| 45) | வே.இராமலிங்கம் | 500.00 |
| 46) | கி.பாலகெங்காதரன் | 1000.00 |
| 47) | நா.அருந்தவராசா | 1000.00 |
| 48) | கி.கேசவன் | 500.00 |
| 49) | சே.அமிர்தலட்சுமி | 500.00 |
| 50) | நி.ஜெயசுதா | 300.00 |
| 51) | T.ருசாந்தன் | 500.00 |
| 52) | சி.நடராசா | 200.00 |
| 53) | சி.சரஸ்வதி | 200.00 |
| 54) | பா.இரகுவரன் | 1000.00 |
| 55) | சோ.விஜயமாலினி | 1000.00 |
| 56) | ச.சிறீகாந் | 500.00 |
| 57) | மு.காண்டீபன் | 200.00 |
| 58) | ச.சிவஞானசுந்தரம் | 500.00 |
| | | 35700.00 |

## திறப்புவிழாவுக்கு தும்பளை மேற்கு மக்களால் அளிக்கப்பட்ட நிதி விபரம்

| | | |
|---|---|---|
| 1) | நா.ராதாராணி | 1000.00 |
| 2) | வி.கமலாவதி | 1000.00 |
| 3) | சி.வேலாயுதம் | 500.00 |
| 4) | க.யோகமங்களம் | 1000.00 |
| 5) | க.சிவசுப்பிரமணியம் | 500.00 |
| 6) | செ.சிதம்பரநாதன் | 2000.00 |
| 7) | க.தனபாலசிங்கம் | 300.00 |
| 8) | வே.கந்தையா | 500.00 |
| 9) | R.கிருஸ்ணராசா | 500.00 |
| 10) | க.உமாபதி | 200.00 |
| 11) | த.இராசம்மா | 500.00 |
| 12) | க.சுந்தரலிங்கம் | 250.00 |
| 13) | நா.அருந்தவராசா | 1000.00 |
| 14) | பா.ஜெயசீலன் | 500.00 |
| 15) | கா.ஸ்ரீநிவாசன் | 500.00 |
| 16) | வே.சற்குணானந்தன் | 500.00 |
| 17) | செ.கோபாலகிருஸ்ணன் | 500.00 |
| 18) | இ.சிவபுண்ணியம் | 200.00 |
| 19) | வி.உமா | 100.00 |
| 20) | சி.சாந்தலிங்கம் | 500.00 |
| 21) | மு.நகுலகுமார் | 200.00 |
| 22) | கோ.இராஜேஸ்வரி | 1000.00 |
| 23) | தவநேசமணி | 300.00 |
| 24) | மு.நிமலராஜ் | 300.00 |
| 25) | த.இராமேஸ்வரன் | 100.00 |
| 26) | சு.ஆனந்தன் | 100.00 |
| 27) | மா.முகுந்தன் | 200.00 |
| 28) | ச.சண்முகம் | 500.00 |
| 29) | மு.லீலாவதி | 300.00 |
| 30) | பாலகிருஸ்ணன் | 1000.00 |
| 31) | அ.வாமதேவன் | 500.00 |
| 32) | சி.யோகபதி | 300.00 |
| 33) | சி.சரஸ்வதி | 1000.00 |
| 34) | கி.கேசவன் | 1000.00 |

| | | |
|---|---|---|
| 35) | க.பொன்னம்பலம் | 500.00 |
| 36) | க.ஸ்ரீதரன் | 500.00 |
| 37) | சோ.விசாலாட்சி | 2000.00 |
| 38) | வி.துருவசோதி | 1000.00 |
| 39) | சு.பிரகாஷ் | 500.00 |
| 40) | சி.இராசரத்தினம் | 500.00 |
| 41) | பு.ரவீந்திரன் | 500.00 |
| 42) | அ.ரூபவாகினி | 300.00 |
| 43) | த.நந்தினி | 100.00 |
| 44) | செ.திருச்செல்வம் | 1000.00 |
| 45) | கா.நித்தியானந்தன் | 500.00 |
| 46) | செ.சுந்தரமூர்த்தி | 2000.00 |
| 47) | ந.சுதாகரன் | 375.00 |
| 48) | வே.ஞானசேகா் | 3000.00 |
| 49) | சி.குலேந்திரன் | 2000.00 |
| 50) | கு.பஞ்சாட்சரம் | 2000.00 |
| 51) | சி.ரமேஷ் | 1000.00 |
| 52) | இ.யோகநாதன் | 500.00 |
| 53) | ச.பேபிசரோஜா | 1000.00 |
| 54) | ச.கண்ணன் | 1500.00 |
| 55) | ஆ.தம்பு | 200.00 |
| 56) | பு.தனுசன் | 1000.00 |
| 57) | வே.கபிலன் | 500.00 |
| 58) | சி.தவராசா | 1000.00 |
| 59) | S.வல்லிபுரம் | 500.00 |
| 60) | அம்பிகா புலேந்திரன் | 2000.00 |
| 61) | க.இரத்தினம் | 1000.00 |
| 62) | பூ.இராஜலக்சுமி | 1000.00 |
| 63) | ச.சிவஞானசுந்தரம் | 1000.00 |
| 64) | சி.ரேவதி | 500.00 |
| 65) | நடராசா கலைச்செல்வி | 1200.00 |
| 66) | மு.வேலாயுதம்பிள்ளை | 1000.00 |
| 67) | ஏ.வரலக்ஸ்மி | 1000.00 |
| 68) | சி.சரோஜினிதேவி | 1000.00 |
| 69) | தி.சாருமதி | 1000.00 |
| 70) | சா.சாந்தகுமாா் | 2000.00 |
| 71) | K.கவிதா | 1000.00 |

| | | |
|---|---|---|
| 72) | அ.அன்ரனி ஜசிக்கா | 2000.00 |
| 73) | வே.சபேசன் | 2000.00 |
| 74) | சி.மகேந்திரராணி | 1000.00 |
| 75) | தே.தேவராஜேந்திரன் | 1000.00 |
| 76) | ஜெ.பூங்குன்றன் | 500.00 |
| 77) | சுரேஷ் கடை | 500.00 |
| 78) | சி.இரவீந்திரன் | 500.00 |
| 79) | மு.தங்கேஸ்வரி | 500.00 |
| 80) | சி.ஆனந்தலிங்கம் | 1000.00 |
| 81) | சி.ஆறுமுகம் | 1000.00 |
| 82) | சி.தவமணி | 500.00 |
| 83) | சி.சேதுபதி | 1000.00 |
| 84) | தபேந்திரன் | 500.00 |
| 85) | P.தேனுசா | 2000.00 |
| 86) | வாணி செல்வரத்தினம் | 500.00 |
| 87) | V.ஜெயப்பிரியா | 1000.00 |
| 88) | ஸ்ரீ.பிரேமா | 1000.00 |
| 89) | தே.கில்பேட் யோகராசா | 1000.00 |
| 90) | ம.சுஜேந்திரன் | 2000.00 |
| 91) | தி.சிவநேசன் | 2000.00 |
| 92) | இ.சுதாகர் | 500.00 |
| 93) | ஜெ.ஆனந்தம் | 500.00 |
| 94) | R.காண்டீபன் | 2000.00 |
| 95) | இ.கோபாலகிருஸ்ணன் | 500.00 |
| 96) | R.சிவபாக்கியம் | 200.00 |
| 97) | K.கோபாலகிருஷ்ணன் | 300.00 |
| 98) | பா.கமலினி | 2000.00 |
| 99) | S.கணேசமூர்த்தி | 300.00 |
| 100) | மு.கெங்காதேவி | 1000.00 |
| 101) | சி.பஞ்சாட்சரம் | 1000.00 |
| 102) | இ.கணேசராசா | 1000.00 |
| 103) | ஜெ.நவமணி | 500.00 |
| 104) | ச.கந்தசாமி | 1000.00 |
| 105) | வீ.சிவபாக்கியம் | 300.00 |
| 106) | சி.நடராசா | 500.00 |
| 107) | M.கனகராஜன் | 300.00 |
| 108) | இ.சுரேஷ் | 500.00 |

| | | |
|---|---|---|
| 109) | சி.சிவநேசன் | 2000.00 |
| 110) | வி.சுகுணாலினி | 1000.00 |
| 111) | இ.ரதீஸ் | 500.00 |
| 112) | க.தவயோகன் | 300.00 |
| 113) | மு.தனேஸ்வரன் | 1000.00 |
| 114) | சி.சசிநாதன் | 1000.00 |
| 115) | S.P.விவேகானந்தன் | 500.00 |
| 116) | கி.பிரசாந்த் | 500.00 |
| 117) | த.இராமச்சந்திரன் | 1000.00 |
| 118) | V.T.குணராசன் | 500.00 |
| 119) | வீ.இராசேந்திரம் | 500.00 |
| 120) | ந.சீராளதேவன் | 2000.00 |
| 121) | P.ஜெனிற்றா | 500.00 |
| 122) | தி.சந்திரசேகரன் | 5000.00 |
| 123) | சி.சிவதாசன் | 500.00 |
| 124) | வீ.அஜித் | 1000.00 |
| 125) | ப.அருளானந்தம் | 500.00 |
| 126) | வி.ஜெயந்தன் | 2000.00 |
| 127) | பொ.சங்கரலிங்கம் | 2000.00 |
| 128) | சி.சுவேந்திரன் | 300.00 |
| 129) | மு.நிர்மலாதேவி | 200.00 |
| 130) | ப.மரியதாஸ் | 200.00 |
| 131) | சி.காயத்திரி | 500.00 |
| 132) | மா.வசந்தாதேவி | 500.00 |
| 133) | ஆ.விஜயரட்ணம் | 500.00 |
| 134) | க.கலியுகவரதன் | 500.00 |
| 135) | S.மகாலிங்கம் | 500.00 |
| 136) | ஆ.முகுந்தன் | 1000.00 |
| 137) | த.விக்கினேஸ்வரன் | 2000.00 |
| 138) | ப.சந்திரஜித் | 1500.00 |
| 139) | ர.இரவீந்திரன் | 500.00 |
| 140) | தே.ஜீவராசா | 500.00 |
| 141) | கு.பாலகுமார் | 500.00 |
| 142) | க.குணராசன் | 500.00 |
| 143) | க.சௌந்தரராஜன் | 500.00 |
| 144) | ச.சிறிகாந்த் | 2000.00 |
| 145) | கி.பாலகெங்காதரன் | 1000.00 |

| | | |
|---|---|---|
| 146) | பா.இரகுவரன் | 2000.00 |
| 147) | ந.யோகராசா | 500.00 |
| 148) | ம.குமாரசாமி | 2000.00 |
| 149) | ர.கிருஷாந்தி | 500.00 |
| 150) | க.தயாளகாந்தன் | 500.00 |
| 151) | தெ.முரளீதரன் | 1000.00 |
| 152) | ப.சிறீ | 500.00 |
| 153) | க.திருமுருகன் | 250.00 |
| 154) | தி.கணேசமூர்த்தி | 500.00 |
| 155) | பி.திருமாலினி | 1000.00 |
| 156) | க.கௌரிபாலா | 500.00 |
| 157) | சே.அமிர்தலட்சுமி | 500.00 |
| 158) | செ.அபிடேகஅம்பிகா அம்மா | 500.00 |
| 159) | S.சந்நதிவேல் | 500.00 |
| 160) | ஸ்ரீ.கவிதா | 1000.00 |
| 161) | சி.செந்திவேல் | 1000.00 |
| 162) | ந.சேகர் | 1000.00 |
| 163) | வே.நடராசா | 500.00 |
| 164) | ந.சுதாகர் | 1000.00 |
| 165) | செ.உமாபதி | 1000.00 |
| 166) | கு.கீர்த்திகா | 1000.00 |
| 167) | செ.அருள்மொழி | 1000.00 |
| 168) | ந.சுதாமதி | 500.00 |
| 169) | தி.கமலநாதன் | 1000.00 |
| | | 145675.00 |

| | |
|---|---|
| சி.சிந்துஜா | 200.00 கனடா டொலர் |
| தி.தேவகுமார் | 200.00 கனடா டொலர் |
| க.தர்மலிங்கம் | 200.00 கனடா டொலர் |
| க.பாலேஸ்வரன் | 200.00 கனடா டொலர் |
| த.சிறீஸ்கந்தராசா | 200.00 கனடா டொலர் |
| செ.சந்தரலிங்கம் | 200.00 யூரோ |

விளம்பரம்

| | |
|---|---|
| ஜேர்மனி | 100 யூரோ |
| ஜேர்மனி | 100 யூரோ |
| த.விக்கினேஸ்வரன் | 10000.00 |
| கணேசா ஏஜென்சி | 2000.00 |
| சுசில் | 2000.00 |
| சி.பத்மநாதன் | 5000.00 |
| இ.ஜெயராஜ் | 10000.00 |

கட்டட அமைப்பு நிதி

| | |
|---|---|
| ந.இரகுநாதன் | 10000.00 |
| சோமசுந்தரசர்மா | 4000.00 |
| க.சுதாகரன் | 6000.00 |
| S.சந்திரலிங்கம் | 4000.00 |

திறப்பு விழா

| | |
|---|---|
| வே.ராமலிங்கம் | 1000.00 |
| பா.கலைவாணி | 1000.00 |
| இ.இராமஜெயம் | 500.00 |
| கு.சந்திரகுமார் | 2000.00 |
| கு.சாந்தகுமார் | 2000.00 |
| கு.கனகசுந்தரம் | 1000.00 |
| சி.சிவராசா | 2000.00 |
| S.சந்திரலிங்கம் | 1000.00 |



1



2



3



4



5



6



7



8

திறப்பு விழா காணும் தும்பளை மேற்கு
சனசமூக நிலையத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்

# கணேசா உணவகம்



கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக
மக்களின் பேராதரவுடன் வெற்றி
நடைபோடும் தமிழரின் பெரு உணவகம்
**கணேசா உணவகம்**

சிறந்த உபசரிப்பு
எளிமையான உறவாடல்
ஆத்மார்த்தமான கவனிப்பு
தூய்மையான செயற்பாடு



மிகவும் ருசியான உணவு வகைகளுக்கு
என்றுமே நாடவேண்டிய சிறந்த உணவகம்
கணேசா உணவகம்
சமீபத்தில் தனது இரண்டாவது கிளையையும் சுட்காட்
மாநகரில் திறந்து சகல மக்களின் பேராதரவுடன்
இயங்கும் ஒரேயொரு உணவகம்

உரிமையாளர் :சுப்பிரமணியம் விக்கினேசுவரன்

T.P: 00497114687981
Fax:004971164511026

இணையத்தள முகவரி:
http://www.ganesharestaurant.del

உணவகம் இயங்கும் இடங்கள்

1. Lemberg str -19
(Ecke wagenburg str)
70186 Stuttgartg
Germany

2. Rotebuhl str -155
70197 stuttgart -west
Germany
T.P-004971167418781



திறப்புவிழாக் கொண்டாடுகின்ற சனசமூக நிலையம்
சமூக சேவையில் மென்மேலும் சிறப்புற நல்வாழ்த்துக்கள்

# விநாயகா உணவகம்

மிகவும் தரமான சுவையான உணவு வகைகளுக்கு ஜேர்மனியில்
சுட்காட் மாநகரில் உள்ள உணவகத்தினை நாடுங்கள்
குறைந்த விலை நிறைவான சேவை
ஆரம்பித்த வெகு சில நாட்களிலேயே மக்களின் பேராதரவைப் பெற்று
சுட்காட் மாநகர பத்திரிகையால் பாராட்டுப்பெற்ற ஒரே நிறுவனம்
சிறந்த சேவை ஆரோக்கியமான உறவாடல்
அனுசரனையான உபசரிப்பு
அமர்க்களமான ஆதரவு







உரிமையாளர் : நல்லையா சிவானந்தம்
தொலைபேசி : 0049(0711)50876893
தொலைநகல் : 0049(0711)50876894

**இணையத்தள முகவரி:**
http://www.restaurant-vinayaga.de

**முகவரி**
Ostendstr-20
(Ecke Hack str)
70186 stuttgart
Germany

புத்தொளி வீசி பிரகாசிக்க சனசமூக நிலையத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

# IEYNGARA KALANCHIYAM


*Dealers in Building meterials*




தரம் மிக்க கட்டடப் பொருட்கள்
உத்தரவாதமுடைய மின்சார உபகரணங்கள்
PVC குழாய் வகைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

## ஐங்கரா களஞ்சியம்

பிரதான வீதி, பருத்தித்துறை


புதிய தடத்தில் காலடி வைக்கும் சனசமூக நிலையத்திற்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்
சிவராஜ் றேடிங் கோ
Sivaraj Trading Co
SIVARAJ TRADING CO.
கட்டடப் பொருட்கள்
மின்சார உபகரணங்கள்
PVC குழாய் வகைகள்
பெயின்ற் வகைகள்
அனைத்தையும் நியாய விலையில் பெற்றிட
நாடவேண்டிய இடம்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை



புதிய மாடிக் கட்டடத்தை
திறந்துவைக்கும்
சனசமூக நிலையத்தின் பணிகள்
மென்மேலும்
சிறப்புற வாழ்த்துகிறோம்
எமது நல்வாழ்த்துக்கள்
LUXMIBAVAN
HOTEL (VEG)
லக்ஷ்மிபவன் உணவகம்
(சைவ உணவகம்)
Luxmibavan
சுவைமிகு உணவுகள்
அன்பான உபசரிப்பு
சகாய விலை
இவை அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்
லக்ஷ்மிபவன் உணவகம்
சிவன் வீதி, பருத்தித்துறை
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்



# கவிதா ரேடர்ஸ்



கணேசா ஏஜென்சி
பிரதான வீதி, பருத்தித்துறை.

சகல பத்திரிகைகளின் ஏக விற்பனையாளர்
வெளிநாடுகளிலிருந்து இலகுவாக பணத்தைப் பெற இன்றே நாடுங்கள்.

# நியூ சுசில் ரெக்ஸ்





பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள்
அனைவருக்குமான அனைத்து வகையான ஆடை
வகைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்.



329, பிரதான வீதி, பருத்தித்துறை.

# கனன் போட்டோ கொப்பி சென்ரர்





பத்திரிகைகள், பயிற்சிப்புத்தகங்கள், அப்பியாசக்
கொப்பிகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் கணினி
தட்டச்சு வேலைகளை குறித்த நேரத்திற்குள்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

பஸ் நிலையம், பருத்தித்துறை.

12320417 8475















